வாரப் பதிப்பு விலை சதம் 25

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.

அன்றும் இன்றும் என்றும் நீங்கள் விரும்பும்

மில்க்  வைற்



நீல சோப் புகழ்பெற்றது

புத்தகம் 19 | திருவள்ளுவர் ஆண்டு 1997 தை திங்கள் 7-ம் நாள் (20—1—1966) வியாழக்கிழமை றம்ழான் 27 | இதழ் 35

# வழக்குத் தொடர ஏற்பாடுகள்

## தமிழ் மசோதாவை எதிர்த்து மற்றொரு நடவடிக்கை

### எதிர்க் கட்சியின் புதிய திட்டம்

தமிழ் மொழி மசோதாவை எதிர்த்து எட்டாம் திகதி தாங்கள் எடுத்த நடவடிக்கைகள் அனைத்தும் தோல்வியில் முடிந்ததையடுத்து எதிர்க் கட்சியினர் சில புதிய நடவடிக்கைகளை எடுக்க முடிவு செய்துள்ளார்களாம். தமிழ் மொழி மசோதாவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கு எதிர்க்கட்சியைச் சேர்ந்த சகல சட்டமூளைகளும் ஒன்றுகக் கூடி ஆலோசித்து வருகின்றனவாம். இதற்காகத் தனிக்குழு நியமிக்கப்பட்டிருக்கிறது என்றும் தெரிகிறது. உத்தேச மாவட்ட சபை மசோதாவை எதிர்த்து கிளர்ச்சி செய்வதற்கும் எதிர்க்கட்சிகளால் ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுவதுடன், அரசியல் அமைப்பு மாற்றம்பற்றிய பிரச்சாரத்தை மேற்கொள்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

தமிழ் மொழி மசோதா பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதை எதிர்த்து எதிர்க்கட்சிகள் எடுத்த நடவடிக்கைகள் அனைத்தும் தோல்வியடைந்ததையடுத்து சில திட்டங்களை உருவாக்கி வருகிறார்கள் என்று நம்பப்படுகிறது.

தமிழ்மொழிமசோதாவை எதிர்த்து வழக்குத் தாக்கல் செய்வதென்று எதிர்க்கட்சிகள் முடிவு செய்துள்ளார்களாம். இம்முடிவையிட்டு எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த சட்ட மூளைகள் அனைத்தும் ஒன்றுகக் கூடி ஆலோசித்து வருகின்றனவாம். இதையிட்டு ஆராய்வதற்கென்று ஒரு சட்ட நடவடிக்கைக் குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது என்று தெரிகிறது. இச்சட்ட நடவடிக்கைக் குழுவைச் சேர்ந்த ஒருவர் கடந்த செவ்வாய்க் கிழமையன்று கோடீசுவரன் வழக்குச் சம்பந்தப்பட்ட சகல விபரங்களையும் கையில் எடுத்துச்சென்றதாக நமது நிருபர் தெரிவித்துள்ளார்.

தமிழ் மொழி மசோதாவை எதிர்த்து வழக்குத் தாக்கல் செய்வதையிட்டு இவர்களுக்கிடையில் பல தரப்பட்ட சட்ட அபிப்பிராயங்கள் நிலவுவதாக நமது நிருபர் தெரிவிக்கின்றூர். தமிழ் மொழி மசோதாவை எதிர்த்து வழக்குத் தாக்கல்செய்வதற்கு அரசியலமைப்பின் 29-வது சரத்தே துணையாக இருக்கிறதாம். இதன்கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு தமிழ் மொழிச் சட்டம் நியாயமற்றது என தீர்ப்பளிக்கப்பட்டால், அதே முறையில் சிங்கள மொழிச் சட்டமும் நியாயமற்றது என்ற தீர்ப்பைப் பெறமுடியும் என்று அவர்கள் நம்புவதால் இதையிட்டு 'சட்ட நடவடிக்கை குழு'விற்குள் ஒரு தெளிவான முடிவு இன்னும் எடுக்கப் படவில்லையென்று நம்ப முடிகிறது.

ஆனாலும், வழக்கை நடாத்துவதென்ற அடிப்படையிலேயே எதிர்க்கட்சித் தலைவர்கள் இயங்கி வருகிறார்களாம். வழக்கை 'பிறிவி கவுன்சில்' வரை நடாத்துவதற்கு ஏற்ற ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டு வருகிறதாம். இதற்கான நிதியைச் சேகரிப்பதற்கு முன்னாள் அமைச்சர் ஒருவர் தலைமையில் ஐம்பது பேர் கொண்ட குழு ஒன்றும் நியமிக்கப் பட்டுள்ளதாம் இதே போன்ற குழுக்கள் இத்திங்களுக்குள் நாடு பூராவிலும் நியமிக்கப்படலாம் என்றும், பெப்புரவரி முதல் வாரத்திலிருந்து பொது மக்களிடம் பணம் சேர்க்கும் முயற்சி ஆரம்பமாகலாம் என்றும் நமது நிருபர் தெரிவிக்கின்றூர்.

## பாராளுமன்றத்தை கலைக்க ஒரு உபாயம்

அரசியலமைப்பு மாற்றம் பற்றிய பிரச்சாரத்தைத் தீவிரப்படுத்தவும் எதிர்க்கட்சியினர் தீர்மானித்துள்ளார்கள். இப்பிரச்சினையில் மக்கள் கவனத்தைத் தட்டியெழுப்புவது சற்று கடினம் என்பதை அவர்கள் உணருகிறூர்களாம். என்றாலும் சதிவழக்கின் தீர்ப்பை ஆதாரமாகக் கொண்டு, தற்போதைய பாராளுமன்றத்துக்குப் போதிய அதிகாரமில்லையென்பதைத் தெளிவுபடுத்துவதன் மூலம் பிரச்சினைக்கு உயிர் கொடுக்க முடிவு செய்துள்ளார்கள்.

அரசியலமைப்புத் திட்டத்தில் 29ம் பிரிவு இருக்கின்றவரை பாராளுமன்றம் ஒரு அதிகாரம் அற்ற சபையென்பது எதிர்க்கட்சிகளின் முடிவாகும். இரண்டில் மூன்று பங்கு வாக்குகளை மட்டுமல்லாது நூறுவீதம் வாக்குகளைப் பெற்றாலும் இச்சரத்தை மாற்ற முடியாது என்று, இந்த நிலையில் பாராளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்படுவதால் பயனில்லை என்பதே எதிர்க்கட்சிகளின் வாதமாகும்.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவினால் இச்சரத்தை மாற்றுவதற்கு அதிகாரமில்லை. எனவே பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டு இந்தியாவில் செய்தது போன்று சட்ட நிருபண சபையொன்றை நிறுவவேண்டும் என்பதே இவர்களின் பிரச்சாரமாக இருக்கும் என்று அறியப்படுகிறது.

## மத்திய வங்கியில் வேலைவாய்ப்பு

இலங்கை மத்திய வங்கி எழுதுவினைஞர், காசாளர் பதவிகளுக்கு தமிழ் இளைஞர்களிடமிருந்து விண்ணப்பம் கோரியிருக்கிறது. இப்பதவிக்கு 18 வயதுக்கும் 24 வயதுக்கும் உட்பட்ட இளைஞர்கள் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பப் பத்திரங்கள் மூன்று மொழிகளிலும் அச்சிடப்பட்டுள்ளது. தமிழ் இளைஞர்கள் தமிழ் மொழிப் பத்திரத்தையே நிரப்பியனுப்ப வேண்டுமாம்.

இலங்கை மத்திய வங்கியில் தமிழ் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் கடந்த சில ஆண்டுகளாக ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லையென்றும் வங்கி நிர்வாகம் இனவொழிப்பு முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகவும் பாராளுமன்றத்தில் நல்லூர்ப் பிரதிநிதி திரு. நாகநாதன் பிரச்சினை யெழுப்பியிருந்தது வாசகர்கள் அறிந்ததே.

தமிழ் மொழி மூலம் கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையில் சித்தியடைந்த தமிழ் இளைஞர்கள் வங்கி எழுதுவினைஞர்களுக்கு ஏற்ற தரமுடையவர்களாக இருக்கவில்லையென்று சமாதானம் கூறப்பட்டது. இப்பொழுது வங்கியில் ஏற்பட்டிருக்கும் காலியான இடத்திற்கு சகலரிடமும் இருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. எஸ். எஸ். சி. பரீட்சையில் ஐந்து பாடங்களில் விசேட சித்தி பெற்ற 18-24 வயதிற்கும் இடைப்பட்ட இளைஞர்கள் இப்பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

தமிழ் இளைஞர்களின் வசதிக்கு ஏற்ப விண்ணப்பப் பத்திரங்கள் ஆயிரக்கணக்கில் தமிழ் மொழியிலும் அச்சிடப்பட்டுள்ளன என்றும் இப்பதவிக்கு விண்ணப்பிக்க விரும்பும் தமிழ் மாணவர்கள் தமிழ்ப்படிவங்களைக் கேட்டு எழுதிப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் வங்கி ஊழியர் சங்கப்பிரமுகர் ஒருவர் நமது நிருபரிடம் கூறியுள்ளார்.

மத்திய வங்கித் தமிழ் ஊழியர் சங்கம் எடுத்துக் கொண்ட முயற்சியின் பயனாக வங்கியாளர் பயிற்சி

(9-ம் பக்கம் பார்க்க)

## மாவட்ட சபை மசோதாவுக்கு எதிர்ப்பு

அடுத்து பாராளுமன்றத்திற்கு வரவிருக்கும் மாவட்டசபை மசோதாவையிட்டு எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்றும் எதிர்க்கட்சியினர் ஆலோசனை நடாத்தி வருகிறூர்களாம்.

தமிழ் மொழி மசோதாவை எதிர்ப்பதற்கு எங்ஙனம் புத்த பிக்குகளை முன்னணிக்குத் தள்ளியிருந்தார்களோ அதே போன்று மாவட்ட சபை மசோதாவை எதிர்ப்பதற்கும் இவர்களையே முன்னணியில் நிறுத்தப் போகிறூர்கள் என்று கூறப்படுகிறது. ஆனல் கடந்த எட்டாம் திகதி விட்ட தவறுகளை இந்தக் கிளர்ச்சியின் போது விடமாட்டார்கள் என்று நம்ப முடிகிறது.

மாவட்டசபை மசோதா பாராளுமன்றத்திற் சமர்ப்பிக்கப் படுவதற்குக் காட்டவிருக்கும் எதிர்க் கிளர்ச்சிகளை ஒழுங்கு செய்து நடாத்தும் பொறுப்பு சுதந்திரக் கட்சியின் புதிய துணைத் தலைவர் ஒருவரிடமே முழுதாக ஒப்படைக்கப் பட்டுள்ளதாம். இதற்கான எதிர்ப்புக் கூட்டங்கள் நடை பெறும் நாட்களில் அனேகமாக அரசியல் வாதிகள் கலந்து கொள்ள மாட்டார்கள் என்றும் முற்று முழுதாக பௌத்த பிக்குகளே பிரச்சாரத்தையும் மேற்கொள்வார்கள் என்று தெரிகிறது.

உள்ளே

தமிழ் மொழி மசோதா மீதான விவாதக் குறிப்புகளும், விசேட செய்திகளும்.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

# ஈழத்தில் தமிழ் நாடகங்கள்

'நாவேந்தன்'

இலக்கிய விமர்சனத் துறையை எடுத்துக்கொண்டால் 'நடுநிலை' விமர்சனம் என்றுபேச்சுக்கே இடமில்லை! இந்த நிலை ஈழத்தில் மட்டுமல்ல தமிழகத்திலும், வெவ்வேறு மொழி இலக்கிய வளர்ச்சிகளிலும் அப்படியே பிரதிபலிக்கவே செய்கிறது. இஃது ஓரளவு தடுக்கக் கூடாத, தவிர்க்கக் கூடாத நிலையுந்தான்! எங்கோ இரண்டொருவர் 'நடுநிலை' யென்று 'வளவளா' விமர்சனங்கள் எழுதுவதையாருந் தூக்கிக் கொண்டாட முடியாது. ஆனால் புத்திக் கூர்மையுள்ள வாசகர்கள் எல்லாப் பக்கங்களிலுமிருந்து வரும் விமர்சனங்களை நுணுகிப் பார்த்து ஓரளவு திறமைசாலிகளான படைப்பாளிகளை இனங்கண்டு கொள்வார்கள். சில போது 'தவறான பேர்வழிகளும்' விலாசம் பெறுகிறார்களே யென்றால் அங்கலாய்க்க வேண்டியதில்லை. நாளடைவில் அத்தகையவர்களது 'குட்டு' தானாகவே வெளிப்பட்டு விடுகிறது. இதற்காகத் தமக்குப் பின்னுக 'நிரந்தர ஆதரவாளர், விமர்சகர்கள்' கூட்டத்தை வைத்துக் கொண்டு அந்தத் தெம்பிலேதான் தலைநிமிர்ந்து நிற்கவேண்டும் என்று கருதுகிறவர்களை எந்த மண்டலம், கழகம் பரிசு கொடுத்தாலும், காப்பாற்றவே முடியாது! ஆனாலும் இத்தனை விக்கினங்களுக்குமிடையே ஈழத்து இலக்கிய உலகு இன்று களைகட்டியே நிற்கிறது.

## நமது நிலை

புதிய எழுத்தாளர்கள் நன்கு எழுதமுயக்கிறார்கள். பலர் அவர்களுக்கு 'முண்டு' கொடுக்கப் போய் தமது 'ஏலாமையை'ப் புறத்தே மறைக்க முயல்கிறார்கள். ஆனால் பழையவர்கள்—தனி வழியைத் தமக்காக்கியவர்கள்—புதியவர்கள் நம்பிக்கையோடு எழுத முயல்கிறவர்கள் அயராது எழுதிவருகிறார்கள். இது நல்ல அறிகுறி. இதனை எந்தப் 'போக்கும்' தடுக்க முடியாது. பல நூறு மலர்கள் ஈழத்தின் இலக்கியத் தடாகத்து மலர்ந்து நறுமணம் பிலிற்றுகின்றமை மகிழ்வூட்டுவதன்றோ! நமது இலக்கிய நம்பிக்கை அண்டை நாடான தமிழகத்தையோ அல்லது அமெரிக்க, ஆங்கிலேய, ரஷ்ய, சீனவிதேசப் படைப்புகளின் ஆதிக்கத்தையோ காத்திராமல் தன்னம்பிக்கையுடன் முளைவிடுவது பொருத்தமானது. பூரிப்பளிப்பது. இலக்கியத் துறையில் இத்தகைய நம்பிக்கையை அடையும் வேளையில் ஈழத்தில் தமிழ் நாடகங்களின் நிலை என்னவென ஆராய்வது ஏற்புடையதாகும்!

## தமிழில் நாடகங்கள்

தமிழில் பொதுவாக இன்றைய நிலையில் நல்ல நாடகங்கள் என்று சொல்லக் கூடியதாக உள்ளவை மிகச் சிலவே. நாடகத் தமிழ் முத்தமிழில் ஒன்றாயிருந்த போதும் தமிழகத்து இடைக் காலத்து நிலவிய 'சமய ஆதிக்கங்கள்' நாடகத்தமிழைக் கருவறுத்து விட்டன. பழந்தமிழிலக்கியத்தில் நாடகத்தமிழ் எத்தகைய இடம் பெற்றிருந்ததென்பதனை யாராய்வதுஇக்கட்டுரையின் நோக்கத்திற்கு அப்பாற்பட்டது. இந்நூற்றாண்டிலும் அதற்குச்சற்று முன்பாகவும் தமிழ் நாட்டில் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை, சூரியநாராயண சாஸ்திரியார், சங்கரதாஸ் சுவாமிகள், பம்பல்சம்பந்த முதலியார் போன்றோரும் ஈழத்தில் விபுலானந்த அடிகளார், பிரான்சிஸ் கிங்ஸ்பரி என்னும் அழகசுந்தரதேசிகர் போன்றோரும் நாடகத்தமிழுக்கு மெருகு வளத்தோடு கூடிய இலக்கிய அந்தஸ்துக் கொடுக்க உழைத்துள்ளனர். எனினும் புதிய நாடக இலக்கியங்களோடு ஒப்பிடக்கூடிய சில நாடகங்களே நமக்குக் கிடைத்தன.

சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகங்கள் புராண இதிகாசங்களைப் பெரிதும் அடிப்படையாக் கொண்டவை. பம்பல்சம்பந்த முதலியார் சரித்திர நாடகங்கள் பல எழுதியுள்ளார். இவற்றை இன்று மேடையிடுவதில் பல கஷ்டங்களுள்ளன. ஈழத்தில் புகழ்பெற்ற நாடகக்கலைஞர்கள் இருந்திருக்கிறார்கள் என்பது உண்மையேயாயினும் மேலே குறிப்பிட்டவர்களோடு ஒப்பிடக்கூடிய நாடக வல்லுநர்கள், நாடகாசிரியர்கள் இருந்தார்களா என்பது ஐயந்தருகின்றது.

ஈழத்தில் சிறந்த நாடக நடிகர்கள் இன்றும் உளர். கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் அத்தகையவர்களில் தலையாயவர். ஆனால் அவருட்பட சகல கலைஞர்களும் ஒரு சகாப்தத்தைக் குறிக்கக் கூடிய நாடக நூல்களை வெளியிடவில்லை என்பது வருத்தத்திற்குரியது. இந்திய நாடகாசிரியர்களையும், நடிகர்களையும் 'குரு-சிஷ்ய' முறையில் பாவனை பண்ணி அர்ச்சிப்பதோடு நாடகத்தமிழ் ஈழத்தில் ஒடுங்கிவிட்டது!

## கதை எழுத தமிழ் படித்தோர்

தமிழகத்தில் திரு. ஜெயகாந்தன் போன்றவர்கள், கதை எழுதத் 'தமிழ்' படித்தவர்கள் எல்லாந்தெரிந்தவர்களைப் போல தமிழில் ஒருபோதும் நாடகமேயில்லை எனக்கூக்குரலிட இதனால் வசதிவாய்த்து விட்டது. ஈழத்திலும் அத்தகைய 'கதைத்தமிழர்கள்' இல்லாமலில்லை! ஜெயகாந்தன் போன்றவர்கள் விளம்பரத்திற்காக இவ்வாறு கூச்சல் போட முடியுமே தவிர, அவரைப் போன்றவர்களாலேயோ, அவராலேயோ தமது ஆயுள்காலத்தில் ஒரு தரமான நாடக நூலையாவது எழுத முடியாது என்பது பகிரங்கமான உண்மை. நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது வீதம் மொழிபெயர்ப்புச் செய்து, பிறமொழி நாடகங்களை தமிழுக்குக் கொணர்ந்து 'தமிழின் இல்லாமையை' உலகறிய முழங்கிவரும் தமிழ்த் தொண்டர்களால், பேனா மன்னர்களால் தமிழகத்தும் ஈழத்தும் நாடகம் வளர முடியாது! மொழிபெயர்ப்பு நாடகங்கள் வேண்டியதில்லை என்று கூற முன்வரவில்லை. அதற்காக மொழிபெயர்ப்பையே தொழிலாகக் கொள்ள வேண்டியதுமில்லை. தமிழில் மொழி பெயர்ப்பு நாடகங்கள்மலிந்து விட்டன. தேவையற்ற உரைக்கு உரையாத்தலைப் போல மொழிபெயர்த்த நாடகத்தையே பின்னரும் மொழிபெயர்த்து உமிக்குத்திக்கை சலிக்கிறார்கள்! அவற்றுக்குப் பரிசும், பட்டங்களும் வழங்கப்படுவதென்றால் நமக்கு 'ஞானசூன்யம்' மெத்தவாகி விட்டதென்று தானே பொருள்!

ஈழத்திலாயினும், வேறெங்காயினும் நாடகங்கள் பெரிதும் மூன்று பிரிவுகளில் அடங்கும். சரித்திர, இலக்கிய சமூக நாடகங்களே அவை. நாகரிக கலாச்சார வளர்ச்சிக்கமைய இவற்றிடையே நவீனமான சிலகிளைகளைப்புஇருக்கமுடியும் ஆனால் ஈழத்தில் தமிழ் நாடகங்களைப் பொறுத்தவரை புதிய கிளைகளைக்காணஆவாவ முடியாது. ஏனெனில் முப்பெரும் நாடகப் பிரிவுகளே சரியான வகையில் வளர முடியவில்லை. சரித்திர நாடகங்கள் விரல் விட்டெண்ணக் கூடிய ஒரு சிலரைத்தவிரப் பிறரால் சரியாகப் படைக்கப்பட முடியாதனவாயுள்ளன. இலக்கிய நாடகங்கள் குரங்கின் கைப் பூமாலையாகச் சிதைபடுகின்றன. 'புதுமை காண்கிறோம், புதிய நோக்கில் பார்க்கிறோம்' எனக் கூறிக்கொண்டு காவியம் படைத்தவனையே சாக்கடையில் தள்ளிவிடுகிறார்கள்.

ஈழத்தில்.....

கவிச்சக்கரவர்த்தி கம்பனையே இன்றைய 'கலரிடிக்கட்' பொடியனுக்கி 'குறள்' பீடிபுகைக்கும் குடிகாரனைப் போல உளறவைக்கிறார்கள். இதனால் இன்றைய எழுத்தாளர்களது இலக்கிய நாடகங்கள் தமிழனைக்கு இதய அதிர்ச்சியுண்டாக்குகின்றன. சமூக நாடகங்களைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை ஒரே கொச்சை மொழியும் பச்சை மொழியும். ஒரே ஆபாசம், இத்தோடு கொலை, கொள்ளை, கற்பழிப்பு சம்பவங்கள் மலிந்த 'காமிக்' கதைகளையே மேடையேற்றத் துடிக்கும் இளைஞர்களை நாமறிவோம்.

ஈழத்தில் தமிழ் நாடகத்தின் இன்றைய நிலை இது.

சரித்திர வரலாறு சரியாகத் தெரியாமல் வரலாற்று நாடகம் எவரும் எழுதக் கூடாது. அவ்வாறே இலக்கிய நாடகங்களிலும் கவிஞனது கண்ணோட்டத்தைப் புதிய துறையில் பிரதிபலிக்க முடியாவிட்டால், அவனது கண்ணோட்டத்தை உணர்ந்தபடி மக்களை உணர்த்தஅவன் நடந்த வழி நடப்பதே நல்லது.

குளிக்கப் போய்ச் சேறு பூசாமல் விட்டாற் போதும்! சமூக நாடகங்களில் கால, சமூக, இயற்கை நிகழ்வுகள் மலிய வேண்டும். சரளமான உரையாடல்கள் வேண்டும். சாபபார் நாடகங்கள் சமூக நாடகங்களல்ல. சமூக விரோத நாடகங்கள் அவை. தமிழ் எழுத்தாளர்களும், நாடகரசிகர்களும் இதனை உணர வேண்டும். மேடையிடமட்டுமல்ல, சுவாரஸ்யமாகப் படிப்பதற்குக் கூட நாடகங்கள் நூலுருவில் வரலாம். ஈழத்தில் இத்தகைய நாடகங்கள் மிகமிகக் குறைவு.

## எழுத்தாளர் சிந்தனைக்கு

கலைக்கழகம், சாகித்திய மண்டலம் இரண்டினையும் நம்பிநூலுருப்பெறும் நாடகங்கள் எண்ணிக்கைக் குறி காட்டுகின்றன. இவையிரண்டுமின்றேல் நாடக நூல்களும் இலவா? பரிதாபமான நிலை வானொலியில் சரித்திர, சமூக, இலக்கிய நாடகங்கள் நேரக்கழிவுக்குதவுகின்றனவே தவிர வேறெதற்கு முவா. 'தொடர்நாடகங்கள்' எழுதுபவர்களைத் தெரிந்தெடுக்கும் பெருமை இலங்கை வானொலிக்குண்டு. அவர்கள் நாடகத்தமிழை இழிவுபடுத்துகிறார்கள்! பணத்தைக் கொடுத்தாவது அவர்களை இவ்வாறு நாடகம் எழுதாமற் செய்வது நல்லது! கலைக்கழகப் பரிசில்களைப் பெற்ற நாடகங்கள் எத்தகையவை என்பது ஏற்கனவே அனைவருமறிந்த உண்மை.

'பரிசில்பற்றி முடிவுதெரிய வந்தபின்னரேபரிசில்பெற்ற நாடகத்தை நாடகாசிரியர் எழுதி முடித்தார்' என்ற உலகப் பிரசித்தியான அதிசயத்தை அண்மையில் ஒரு திங்களிதழ் வெளியிட்டது. கலைக்கழக மேடை நாடகப் போட்டியிலும் இவ்வாறே என்பதனை முன்னைய பத்திரிகைச் செய்திகள் உறுதிசெய்துள்ளன. குறிப்பாகச் சொல்லப் போனால் தரமான, சிறந்த தமிழ் நாடகங்கள் நூலுருவில் படிக்கவும், நடிக்கவும் இனித்தான் வரவேண்டும். தமிழுலகம் அதற்குதவழி செய்ய வேண்டும். நமது எழுத்தாளர்களை 'கதைப் பொட்டலங்களைக்' கட்டி வைத்துவிட்டு முடிந்தால் இவ்வகையில் எழுத முயல்வார்கள் என எதிர்பார்க்கலாமா?

---

# அடுத்தொருமுறை சந்திப்போம்!

— நீலவண்ணன் —

பழகிமுன் னறியேன்; பார்த்தும்
பழகியோர் பகர்ந்தார்; நீ, யோர்
அழகியல் அறிஞன் தேடும்
அற்புதக் கனவை, காமன்,
முழுமை வெண்ணிலவின் சாறும்
மோகமும் கலந்து கூட்டி
எழுதிய ஒயிலாம்! கேட்டேன்
இளமையின் திரும்பி, எங்கும்!

நடந்து நீ வந்தால், நெஞ்சில்
நடனங்கள் நடந்த தென்றார்!
தடமுலைக் குவியல் தோய்ந்த
தம்முடல், தங்க மென்றார்!
உடையற்ற இடையைக் கையுள்
ஒருமுறை எடுத்தால், தேர்மேற்
கிடந்தனம் என்றார்! பொந்தின்
கிளியென்றார்! கிறு கிறுத்தேன்!

முத்தங்கள் என்று, கொத்து
முந்திரிக் கனியின் சாற்றில்
தித்திக்க வடித்த, சொட்டும்
தெவிட்டாத மதுவை, வாயில்
மொத்துமொத் தென்று மொத்தி
மோகத்துள் மூழ்கிப், பண்டைப்
பித்தங்கள் தெளியப் பெற்றுன்
பித்தராய் மாறி னராம்!

உலகத்தின் கருத்துப்போல், நான்
உடம்பினால் கிழவன்; மேன்மை
உலகத்தின் உண்மை போல், என்
உள்ளத்தால் இளைஞன்! கண்ணே,
கலகத்தை மூட்டு வானேன்...
காதிலே போட்டுக் கொள்க:
அழகி நீ; அன்பன் நான்; நம்
அன்பினை அறுப்பார் ஆரே?

அதற்கெலாம் அஞ்சேன்; எங்கள்
அறியாமை மிகுந்த ஊரின்
குதர்க்கத்தில் பிறந்த தாமோர்
கொள்கை: 'ஓர் பெண்ணே கொள்க.
அதற்குமேல் இல்லை' என்ற,
அதட்டலை அஞ்சு கின்றேன்!
இதையெலாம் உங்க ளூரில்
இயம்பினால் நகைப்பார்...என்ன?

அழகியல் பற்றி ஏதும்
அறியாத அசடன், உன்னைப்
பழகிய புலவர் சொன்ன
பான்மையால் காதலித்தேன்!
உளமொன்றிக் களித்தோம்! ஏனும்...
ஊரொன்றி வாழ்தல் வேண்டும்!
அழகிய நங்கையே, நாம்
அடுத்தொரு முறை சந்திப்போம்




கு. சுந்தரேஸ்வரன்,
பருத்தித்துறை

கே: 'போயா' விடுமுறை நாள் நீடிக்குமா? மக்களின் எதிர்ப்பிராதா?

ப: நீடிக்கும்! பழக்கமாகி விட்டால், எதிர்ப்பு இருக்காது.

ஃ

மு. பரந்தாமன்,
உடப்பு

கே: கணவன் மனைவியிடம் சில உண்மைகளை கூறக்கூடாது. என்று பெரியோர்கள் சிலர் கூறுகிறார்களே. இது உண்மையா?

ப: கணவன், மனைவி இருவரும் குடும்ப நலனை முன்னிட்டு பரஸ்பரம் சில உண்மைகளை கூறாதிருப்பது நன்று.

ஃ

நந்தினி,
சண்டிருப்பாய்

கே: நான் ஒரு சிங்களவரை காதலிக்கிறேன். அவரும் என்னைக் காதலிக்கிறார். நாம் இருவரும் திருமணம் செய்தால் சம அந்தஸ்து கிடைக்குமா?

ப: உங்கள் வீட்டில் கிடைக்கலாம். நாட்டில் கிடைக்காது.

ஃ

'காப்பாளர்',
யாழ்ப்பாணம்

கே: யான் ஒரு பணக்காரப் பெண்ணைக் காதலிக்கிறேன் அவளை மணந்து கொள்ளலாமா?

ப: காதலுக்காகத் திருமணம் என்றால் செய்துகொள்ளலாம், பணத்துக்காக என்றால், வேண்டாம்.

கே: நான் செய்யும் தொழிலை என் காதலி வெறுக்கிறாள் காரணமென்ன?

ப: சொற்ப சம்பளம்தான் காரணம்.

ஃ

இரா. நவரத்தினம்,
கல்கரணேயா

கே: திரு. பொன்னம்பலத்திற்கு 65 தங்க நாணயங்களை மாலையாகக் கோத்துப் போட்டார்களாமே! இதற்குச் செலவாகும் பணம் யாருடையது?

ப: பணம் யாருடையதாக இருந்தாலும் சரி, அவர் ஐ. நா. வில் பேசியதற்கு 'பீஸ்' கொடுக்க வேண்டியது நியாயமே!

கே: உங்களிடம் காதல் சம்பந்தப்பட்ட கேள்விகளே அதிகமாகக் கேட்கப்படுகின்றன ஏன்?

ப: காரணம், காதல் ஆராய்ச்சி சிறிது அடியேனுக்கும் இருப்பதுதான்.

ஃ

ஆ. ப. அபிவிருத்திச்சபை,
அம்பாறை

கே: யாழ்ப்பாண பாராளுமன்ற அங்கத்தவரான திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலத்திற்கு சேர் பட்டம் கொடுப்பதாக அறிந்தோம் உண்மையா?

ப: இல்லை. ஏகாதிபத்திய பட்டங்கள் வழங்கப்படுவதை திரு. பண்டாரநாயக்கா ஆட்சிக்கு வந்த போதே நிறுத்திவிட்டார்.

ஃ

எம். எம். அபூபக்கர்,
மன்னார்

கே: உண்மையான காதலி எப்படி இருப்பாள்?

ப: காதலனுக்கு சதா புத்திமதி சொல்லிக்கொண்டிருப்பாள்.

ஃ

எம். ஏ. றமீம்,
மாத்தளை

கே: பண்டாரநாயக்க-செல்வநாயகம் ஒப்பந்தத்தைத்தானே அரசாங்கம் அமுல் நடத்த போகின்றது, அதை ஏன் எதிர் கட்சிகள் இவ்வளவு பெரிது படுத்துகின்றன.

ப: 'அதை நாங்களல்லவா அமுல் நடத்த வேண்டும்! நீங்கள் யார் அதைச் செய்ய?' என்று கேட்கின்றனர். மற்றொருபுறம், 'அந்த ஒப்பந்தம் கிடையாதே. அது கிழித் தெறியப்பட்டு விட்டது' என்று கூறுகின்றனர்.

ஃ

மு. கருணாநிதி,
ஏழாலை மேற்கு

கே: திரு. ஜி. ஜி. ஐ. நா. சபைக்குச் சென்று வந்ததை அவரது கட்சியினர் ஒரு தேர்தல் பிரச்சனையாக வைக்க முன் வருவார்கள் என எனது நண்பன் கூறுகிறார். முடியுமா?

ப: அதனைத் தேர்தல் பிரச்சினையாக்க முடியாது. ஆனால் தேர்தல் பிரசாரத்துக்கு உபயோகிக்கலாம்.

ஃ

அ. சிவப்பிரகாசம்,
ஏழாலை மேற்கு

கே: திரு. டட்லி வட்டுக்கோட்டைக்கு விஜயம் செய்தால்?

அமோக வரவேற்பு கிடைக்கலாம்.

ஃ

ஆனந்தசுப்பிரமணியம்,
முன்னேஸ்வரம்

கே: நீங்கள் நேயர்கள் அனுப்பும் கேள்விகட்கு பதில் கூறுவ தால் வரும் நன்மை என்ன?

ப: சிலருக்கு கேள்வி மட்டுந்தான் தெரியும். பதில் தெரியாது அவர்களுக்கு எனது பதில் பயன்படும்.

ஃ

எஸ். எம் சுந்தரலிங்கம்,
வீரவிப்பத்தனை

கே நான் தயாரிக்கப் போகும் தமிழ்ப் படத்தில் தங்களுக்கு கதாநாயகன் வேடம் கொடுக்கத் திட்டமிட்டுள்ளேன் தாங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?

ப: கதாநாயகி என்னிடம் கேள்விகளை அடுக்காவிட்டால், உங்களின் திட்டத்தை ஏற்றுக்கொள்கிறேன்.

ஃ

மா. கலைவாணி,
வவனியா

கே: தமிழ் மொழி மசோதா விதிகளை கொம்யூனிஸ்ட், சமசமாச கட்சிகள் எதிர்த்து வாக்களித்திருப்பதால் அக்கட்சிகளின் தமிழ் அங்கத்தவர்களின் நிலை என்ன?

ப: அக் கட்சிகளைக் கைவிடுவதைத் தவிர அவர்களுக்கு வேறு வழிகிடையாது.

ஃ

எஸ். என். கே. பாலசுந்தரம்,
பதுளை

கே: ஒருவனுக்கு ஒருத்தி என்பது நியதியானல் ஆண்களிலும் பெண்கள் பெரும் பான்மையாக இருக்கிறார்களே அவர்கள் 'கதி' என்னவாகும்?

ப: சில நாடுகளில் பெண்களிலும் ஆண்கள் பெரும்பான்மையாக இருக்கிறார்களே. அவர்களுக்கு ஏற்படும் கதிதான் இவர்களுக்கு இருபாலோரும் சம எண்ணிக்கை இருந்தாலன்றி ஒருவனுக்கு ஒருத்தி என்னும் நியதி சரி வராது.

ஃ

சுப்பிரமணியம்,
சிலாபம்

கே: கந்தையானாலும் கசக்கிக் கட்டு என்ற ஒளவையார் பொன்மொழியை நவநாகரீக உலகத்தில் வாழ்பவர்கள் ஏற்பார்களா?

ப: கோவணாண்டிகள் ஏற்பார்கள், ஒளவையார் ஏழைகளுக்கு மட்டுமே அந்தப் பொன் மொழியைக் கூறினார். பணக்காரர்களுக்கு கந்தையைக் கசக்கவேண்டிய அவசியம் எதுவும் இடையாது.

ஃ

கே. ஏ. கே. ரெத்தினம்.

கே: பாடசாலையிலே சில மாணவர்கள் காதலை வளர்க்கிறார்களே அவர்களின் கல்வியின் நிலை என்னாகிறது?

ப: சிலருக்குக் காதல் கல்வியை வளர்க்கும். சிலருக்குக் காதல் கல்வியை நாசமாக்கும்.

> திருவாளர்
> **குயுக்தியார்**
> **மே/பா சுதந்திரன்**
> **த. பெ. இல. 1183**
> **கொழும்பு-12.**
>
> **இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினாக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.**

எம். ஏ நஜுமுதீன்,
அக்கரைப்பற்று 4

கே: கெட்டவனொருவனுடன் நல்லவனொருவன் சேர்ந்தால் கெட்டவனைத் திருத்தலாம் என்பது எனது கூற்று. ஆனால் என் நண்பனோ கெட்டவனுடன் நல்லவன் சேர்ந்ததால் அவனும் கெட்டு விடுவான் என்று கூறுகிறார். இப் பிரச்சினையைத் தீர்த்து வையுங்கள்.

ப: இரண்டும் ஏற்படலாம். இது இருவரின் உறுதியைப் பொறுத்த விஷயம் கெட்டவன் உறுதியாக நின்றால், நல்லவன் கெட்டவனாகி விடுவான். நல்லவன் உறுதியாக நின்றால், கெட்டவன் நல்லவனாகிவிடுவான். இருவரும் உறுதியாக நின்றால் நட்பு குலைந்துவிடும்.

ஃ

சிந்தனையாளன்,
யாழ்ப்பாணம்

கே: திரு. ஜீ.ஜீ. பொன்னம்பலம் அவர்கள் உலக சமாதானத்திற்கு அரும்பாடுபட்டதாக கூறப்படுகிறதே! சென்ற ஆண்டுக்குரிய நோபல் பரிசு அவருக்குக் கொடுக்கப்படுமா?

ப: அதற்கு, அவர் உண்மையிலேயே உலக சமாதானத்துக்காகப் பாடு பட்டார் என்பதை நோபல் பரிசு வழங்கும் குழுவினர் ஏற்றுக்கொள்ள வேண்டுமே!

ஃ

மா. சரவணமுத்து,
கல்முனை கி. மா.

கே: கம்யூனிசம், மார்க்ஸிஸம் என்பவற்றை சிறிது விளக்கிக் கூறுங்கள்.

ப: கார்ல் மார்க்ஸ் என்ற அறிஞர் பல ஆண்டுகள் ஆராய்ச்சி செய்து கண்டு பிடித்த அரசியல்-பொருளாதார முறையே மார்க்ஸிசம் என்பது. அதன் இறுதிக் கட்டம் கம்யூனிஸம்.

ஃ

ஆர். டி. கணேசன்,
கொழும்பு-3.

கே: தமிழ் மொழிச் சட்ட விதிகளை இடதுசாரிகள் எதிர்த்ததால் வட, கிழக்கு மாகாணங்களில் இடதுசாரிக் கட்சிகளின் உறுப்பினர்கள் அதிருப்தி அடைந்திருக்கிறார்களாமே!

ப: அதைப்பற்றி அக் கட்சிகள் கவலைப்படவில்லையாம். அவ்விரு மாகாணங்களிலும் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒருசிலர்தான் அக் கட்சியில் உறுப்பினர்களாக இருக்கின்றனராம்.

ஃ

எஸ் எஸ். சண்முகநாதன்,
கொழும்பு 6

கே: பத்திரிகையாளர் தொழில் விபசாரத் தொழில் என்று ஓர் அறிஞர் கூறியிருக்கிறரே. இதுபற்றி உங்களின் கருத்து?

ப: அவர் எந்த அறிஞராக இருந்தாலும் சரி, அவரது கருத்தை நானும் ஆமோதிக்கிறேன். உதாரணம் வேண்டுமா? இதோ:—ஒரே நிறுவனத்திலிருந்து வெளியாகும் சிங்களத் தினசரியொன்றும் தமிழ்த் தினசரியொன்றும் 18-1-66-ந் திகதி ஏகோதா ஒரு நோக்கத்துடன் ஒன்றுக்கொன்று முரணான இரு செய்திகளை வெளியிட்டுள்ளன. சிங்களவர் தமிழ் படித்தாலன்றி தமிழர் சிங்களம் படிக்க மாட்டார்களென்றும், தமிழ்ப் பகுதிகளுக்கு சிங்கள ஆசிரியர்களை அனுப்புவதை எதிர்த்தும் தமிழரசுத் தந்தை தெரிவித்த கருத்தைத் தமிழ்த் தினசரி வெளியிட்டது. அந்தச் செய்தியைச் சிங்களத் தினசரி இதுவரை வெளியிடவில்லை. அதற்குப்பதிலாக, தமிழ் மொழிச் சட்ட விதிகள் நிறைவேறிய பின்னர் தமிழ்ப் பகுதிகளில் சிங்களம் படிக்கும் ஆர்வம் பன்மடங்கு அதிகரித்துள்ளதென்றும், அவர்கள் விழுந்தடித்து சிங்களத்தை மடமடவென்று கரைத்துக் குடிக்கிறார்களென்றும், அந்தப் பகுதிகளில் நடத்தும் சிங்கள வகுப்புகளெல்லாம் 100க்கு 100 வெற்றியடைந்துள்ளதென்றும் எட்டுப் பத்தி தலைப்பின் கீழ் ஒரு செய்தியை அதே தினத்தில் வெளியிட்டுள்ளது. ஆனால் அச் செய்தியை இதுவரை அந்தத் தமிழ் தினசரியில் வெளியிடவில்லை. இதிலிருந்து தெரிகிறதல்லவா பத்திரிகையாளர் தொழிலென்பது பத்திரிகைத் தொழில் அல்ல விபசாரத் தொழில் என்பது?

**சிறந்தது! சிக்கனமானது! சிந்தனையூட்டுவது!**




காரம், மணம், குணம் நிறைந்த யானை பீடி ஸ்பெஷல் புகைப்போருக்கு புத்துணர்ச்சியையும், உற்சாகத்தையும் கொடுக்கவல்லது. தொழிலாளிகளும், திறமைசாலிகளும் தங்கள் ஊதியத்திற்கேற்ப, சிறந்த புகை பிடிக்க யானை பீடியையே புகைக்கிறார்கள். பூரண திருப்திக்கு யானை பீடி ஸ்பெஷலே புகையுங்கள்.

**யானை பீடி ஸ்பெஷல்**

தயாரிப்பாளர்களும், விநியோகஸ்தர்களும்:

**யானை பீடி கம்பெனி,**

62, மெசெஞ்சர் வீதி, கொழும்பு-12.

தொலைபேசி : 7651

# விரக்தி நிலையே தமிழ் எதிர்ப்புக்கு காரணம்

## இடதுசாரிகளின் வாதத்திற்கு நவரத்தினம் சாட்டை

'தமிழ் பேசும் பொதுமக்கள் எங்களூடாக இன்றைய அரசாங்கத்தை ஆதரிப்பதையிட்டு எதிர்க்கட்சியினர் கொதிப்படைந்திருப்பதுடன் விரக்தியடைந்தும் உள்ளனர். இதன் பிரதிபலிப்பே இன்று நாட்டில் தூண்டி விடப்பட்டுள்ள கலவரங்கள். தமிழ் பேசும் மக்களின் ஆதரவைப் பெற்று பதவியை அடைய முடியவில்லையென்றதும் இடதுசாரிகள் சிங்கள இனத்தின் காவலர்களாக மாறி தமிழினத்தை கருவறுக்க முற்பட்டிருக்கிறார்கள்.' என்று சாவகச்சேரிப் பிரதிநிதி திரு. வ. ந. நவரத்தினம் அவர்கள் தமிழ் மொழி (விசேட சாத்துக்கள்) மசோதா மீது இத்திங்கள் 10ம் நாளன்று பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் உரை நிகழ்த்துகையில் கூறினார்.

மேலும் திரு. நவரத்தினம் அவர்கள் பேசுகையில் கூறியதாவது:

'எதிர்வரிசையில் இருக்கக் கூடிய எந்தவொரு தனி மனிதருக்காவது நான் தலை வணங்குவதாயின் அது ஊவா-பரணகமுவ பிரதிநிதியவர்களுக்கே அதுவும் அரசியற் காரணங்களுக்காக. எதிர்வரிசையில் இருக்கக் கூடிய எவராவது அவர்களின் கொள்கையை தொடர்ச்சியாக அனுசரித்தும், இச்சபைக்கு உள்ளும்புறமும் ஒன்றையே கூறிவருபவர்களாகவும் உண்டென்றால் அது ஊவ—பரணகமுவ பிரதிநிதியவர்களே. சிறுபான்மையினரின் பிரச்சினைக்கான ஒரே தீர்வு தமிழினத்தையும், தமிழ் மொழியையும், புத்தமதம் அல்லாத ஏனைய மதங்களையும் நிர்மூலமாக்குவதே என்பதை அவர்கள் காப்பாற்றி வருகிறார்கள்.

திருமதி இராசரத்ன: 'அதெல்லாம் தவறானது.'

திரு. வி. என். நவரத்தினம்: 'உங்கள் கருத்துக்களை நாம் மரியாதை செய்தாலும், அவற்றை முழுதாக நாங்கள் ஏற்கவில்லை.

'மதிப்பிற்குரிய இராஜாங்க அமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப் பட்ட சட்ட விதிகளை அனுசரித்து அதிகம் பேசுவது அவசியமானதல்ல. இச்சட்ட விதிகளைச் சமர்ப்பித்து இங்கு விவாதிக்கப் படுவதன் மூலம் நாட்டில் தோன்றியுள்ள பயங்கரமான சூழ்நிலையையிட்டு குறிப்பிடுவது இச்சந்தர்ப்பத்தில் பொருத்தமானதாகும். எதிர்கட்சிகள் அனைத்தும் விரக்தியடைந்துள்ளன. இவ்வரசாங்கத்தைத் தாக்கி எறிவதற்கு அவர்கள் தீர்மானித்துள்ளனர். காரணம் இச்சட்ட விதிகள் இங்கு விவாதிக்கப் படுவதல்ல; அவர்களின் தவறான போக்கை இங்கு எடுத்துக்காட்டி விடுவோம் என்ற பயமே யாகும். தினம் தினம் அவர்களின் குட்டுகள் இங்கு வெளியாவதையிட்டு அவர்கள் அச்சம் கொண்டிருக்கிறார்கள். கடந்த அரசாங்கத்தின மிகச் சிறியளவு தவறான நடத்தைகளில் ஒன்று 'கிரிதார' விடயமாகும். இன்னும் வெளிவர வேண்டியன பலஉள.

### ஒற்றுமை அன்றும் - இன்றும்

'சிறுபான்மையினரைப் பாதிக்கும் விடயம் தவிர்ந்த ஏனைய பல விடயங்களில் சுதந்திரக்கட்சி, இலங்கை கம்யூனிஸ்டுக் கட்சி, இலங்கை சமசமாசக் கட்சி ஆகியன சில ஆண்டுகளுக்கு முன்னரே இணங்கியிருந்தன. இப்பொழுது இந்த நாட்டிலிருந்து சிறுபான்மையினரை ஒதுக்குவதில் எதிர்வரிசையிலுள்ள நண்பர்கள் முழுதாக சுதந்திரக் கட்சியுடன் இணங்கியுள்ளார்கள்.



'இங்கு விவாதிக்கப்படும் சட்டங்களையிட்டு இருவகையான விவாதங்கள் இங்கு முன்வைக்கப்பட்டன. ஒன்று இப்பகுதியில் உள்ள உறுப்பினர்களையும், அரசாங்கத்தையும் அழுக்குவது அடுத்தது தவறாக வழிநடத்தப்பட்ட வெளியிலுள்ள மக்களை அழுக்குவது. தெவிநுவரைப் பிரதிநிதி அவர்கள் முன்வைத்த பகட்டான சட்ட பூர்வமான வாதங்களை ஆராய்வதற்கு இச்சபையின் பெரியோர்களுக்குச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்துவிட்டு நான் விலகிக் கொள்கிறேன். ஆனால், மாக்சியவாதிகளாலும், சில சுதந்திரக்கட்சி உறுப்பினர்களாலும் அராஜகத்தையும் ஒழுங்கீனத்தையும் இந்த நாட்டில் ஏற்படுத்துவதற்காகச் செய்யப்பட்ட பிரச்சாரங்களைப் பற்றி வெளியிலுள்ள மக்களுக்கு எடுத்துக் கூறுவது இந்த அரசாங்கத்தினதும்—எனதும் தவிர்க்க முடியாத கடமையாகும்.

### நகரமண்டபக் கூட்டத்தில் சிறீமாவோ

'இற்றைக்குச் சில நாட்களுக்கு முன்னர் எதிர்க்கட்சித் தலைவியார், எட்டியாந்தோட்டைப் பிரதிநிதி, கொழும்பு மத்திய மூன்றாவது பிரதிநிதி ஆகியோர் உரை நிகழ்த்திய கூட்டுக் கட்சியினரின் கூட்டமொன்று கொழும்பு நகர மண்டபத்தில் நடைபெற்றது உங்களுக்குத் தெரிந்ததே. இக் கூட்டத்திலும், இச்சபையிலும் முன்வைக்கப்பட்ட சில வாதங்களையிட்டு இங்கு நான் விரிவாக ஆராய விரும்புகிறேன்.

'மதிப்பிற்குரிய எதிர்கட்சித் தலைவியார் 'இச்சட்ட விதிகளை நான் எதிர்க்கிறேன் ஏனெனில் சமஷ்டி நாட்டை பிளவு படுத்துவதாகும்,' என்று கூறினார்கள். சமஷ்டி என்றால் நாட்டைப் பிளவுபடுத்துவதல்ல என்பதையோ அல்லது அரசியலின் ஆரம்ப முறைகளையோ எதிர்கட்சித் தலைவிக்குப் புரியவைப்பதல்ல எனது நோக்கம். இந்த விவாதத்திலோ இச்சட்ட விதிகளைப் பற்றிய ஆய்விலோ சமஷ்டி பற்றிய கேள்வி இங்கு எழவில்லை.

'இச்சட்ட விதிகள் நாடுசம்பந்தப்பட்ட உயிர் நாடிப் பிரச்சினையென்ற காரணத்தினால் முதலமைச்சர் அவர்கள் இதைத் தயாரிப்பதற்கு முன்னர் எதிர்க் கட்சியினரைக் கலந்திருக்க வேண்டுமென்பது அன்றைய நகர மண்டபக் கூட்டத்தில் எதிர்கட்சித் தலைவியாரால் சுமத்தப்பட்ட மற்றக் குற்றச் சாட்டாகும்.

'நிச்சயமாக இது ஒரு பாரதூரமான குற்றச்சாட்டே. இதனைக் கூறுவதற்கு அவருக்குக் காரணமுண்டு. அவரும், அவரது மறைந்த கணவரும் முதலமைச்சராக இருந்தவர்கள். தான் முதலமைச்சராக இருந்த காலத்தில் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த மசோதாக்களை கொண்டுவரும் பொழுது எதிர்கட்சித் தலைவர்களுடன் ஆலோசனை நடத்தியதாக எதிர்க்கட்சித் தலைவி கூறியுள்ளார். நீதி மன்றமொழி மசோதாவையும், கல்விச் கூடங்களைச் சுவீகரிக்கும் மசோதாவையும் இவை போன்ற ஏனைய முக்கியமான மசோதாக்களையும் கொண்டு வரும்பொழுது அவர் இங்ஙனம் செய்தாரா என்று கேட்க விரும்புகிறேன்.

'அவர்கள் மேலும் கூறுகையில் தான் மட்டுமல்லாது முந்திய முதலமைச்சர்களில் ஒருவரான தனது மறைந்த கணவரும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த மசோதாக்களை இச்சபையின் முன்—கொண்டு வருவதற்கு முன்னர் குறிப்பாக அரசகரும மொழி மசோதா, தமிழ் மொழி விசேட சரத்துக்கள் மசோதா, இலங்கைப் போக்குவரத்து மசோதா போன்றவற்றைக் கொண்டு வரும் பொழுது—எதிர்க்கட்சித் தலைவரை நிச்சயம் கலந்துள்ளார்களாம். முந்திய பிரதமரும், அதற்கு முந்தியவரும் ஏற்படுத்தி வைத்த முறைமையை இன்றைய பிரதமர் நிராகரித்ததன் மூலம் ஆண்டாண்டு காலமாக ஜனநாயகத்தின் கீழ் உள்ள சில சம்பிரதாயங்களை இன்றைய நமது பிரதமர் நிராகரித்துவிட்டார் என்று எதிர்க்கட்சித் தலைவியின் பேச்சைக் கேட்ட பொது மக்கள் நம்பியிருப்பார்கள். இத்தகைய வாதத்தை எதிர்க்கட்சித்தலைவியார் கூறி தங்களை ஏமாற்றிவிட்டார் என்பதை அந்த மக்கள் இனியாவது தெரிந்து கொள்ளட்டும். இதனால், இந்த விடயத்தில் மட்டுமல்லாது வேறுபல விடயங்களிலும் பொதுமக்களை அவர் ஏமாற்றியுள்ளார்.

### நகரமண்டபத்தில் என். எம்.

'ல. ச. ச. கட்சி நண்பர்களால் முன்வைக்கப்பட்ட விவாதங்களையிட்டு இப்பொழுது ஆராயவிரும்புகிறேன். சிங்கள இனத்தையும், சிங்கள மொழியையும் காப்பாற்றுவதற்காக கடைசிச் சொட்டு இரத்தம் இருக்கும் வரைக்கும் ஒவ்வொரு உண்மையுள்ள சிங்களவனும் போராட வேண்டும். ஏனெனில் தமிழ் மொழியைப் பாவிப்பதற்கான இச்சட்ட விதிகள் சிங்கள மொழியை அழித்து விடும் என்று ல. ச. ச. தலைவர்கள் கூறினார்கள்.

'இத்தகைய அச்சத்திற்கு சிறிதளவாவது உண்மையுண்டா என்பதைப்பார்ப்போம். கடந்த சனிக்கிழமையன்று இவர்களால் தவறாக வழிநடத்தப் பட்டமக்கள் ஏதா சிங்கள இனத்திற்கு பெரும் ஆபத்து உருவாகியிருப்பதாக நம்பிக் கொண்டே ஆர்ப்பாட்டம் செய்தார்கள். இந்த மார்க்சியத் தலைவர்கள் கூறியதை அவர்கள் பூரணமாக நம்பியுள்ளார்கள். உண்மையில் சிங்கள மொழிக்கு பெரிய ஆபத்து வந்திருக்கிறதா என்பதைக் கவனிப்போம். இச்சபையிலுள்ள எந்தசிந்தனையுள்ள மற்ற உறுப்பினரும் தமிழ் மொழி விசேட சரத்துக்கள் விதிகளால் தமிழ்மொழி-சிங்கள மொழியுடன் சமத்துவ நிலையில் அரசகருமமொழித்தகைமையைப் பெறுவதிலும் பார்க்க மிகமிகக்குறைந்த இடத்தையே பெற்றிருக்கிறது என்பதை ஏற்றுக்கொள்வார்கள். தமிழ் மொழிக்கு சம அந்தஸ்துக் கொடுப்பதால சிங்கள மொழியோ அல்லது சிங்கள இனமோ எத்தகைய இடர்ப்பாட்டையும் அடைய மாட்டாது என்பதை வெளியில் உள்ள மக்களை உணரக் கூடியதாகச் செய்யவேண்டுமேயன்றி; தமிழ் மொழிக்கு குறைந்த அந்தஸ்தை வழங்குவதன் மூலம் சிங்கள மொழிக்கு இடர்ப்பாடு ஏற்பட மாட்டாது என்று நாம் விளக்கத் தேவையில்லை. இவர்களிடம் நான் சென்று 'சகோதரர்களே என்னை நம்புங்கள்! சில மாவட்டங்களில் தமிழ் மொழியைப் பயன்படுத்துவதன் மூலம் சிங்கள மொழிக்கு எத்தகைய ஆபத்தும் ஏற்பட மாட்டாது' என்று கூறினால் அவர்கள் எனது கூற்றை நம்ப மறுக்கலாம். ஆனால் எட்டியாந்தோட்டைப் பிரதிநிதி கொழும்பு மத்திய மூன்றாவது பிரதிநிதி போன்றவர்கள் இதைக் கூறினால் அவர்கள் நிச்சயமாக நம்புவார்கள்.

### ச. ச. கட்சியினர் அன்று கூறியது

'இதையிட்டு மதிப்பிற்குரிய கொழும்பு தெற்குப் பிரதிநிதி அவர்கள் என்ன கூறுகிறார்கள் என்று பார்ப்போம்.

1956 ஜூன் 12ம் திகதிய பாராளுமன்றப் பதிவேட்டிலிருந்து சிங்களம்மட்டும் சட்டவாதத்தின் போது திரு. பீட்டர் கெனமன் நிகழ்த்திய உரையிலிருந்து சில பகுதிகளை எடுத்துக் காட்டினார்)

'நாடு பூராவிலும் தமிழ் மொழிக்கு சம அந்தஸ்துக் கொடுப்பதன் மூலம் சிங்கள மொழிக்கு எத்தகைய இடர்ப்பாடும் ஏற்படமாட்டாது என்பதை மிகத் தெளிவாக கொழும்பு தெற்குப் பிரதிநிதி எடுத்துக்காட்டியுள்ளார். இதே நபர்கள் தான் இப்போழுது தமிழுக்கு பிரதேச அந்தஸ்துக் கொடுப்பதன் மூலம் சிங்கள மொழி அழிந்துவிடும் என்று வெளியில் உள்ள மக்களை தவறாக வழி நடாத்துகிறார்கள்.


'மொழிப் பிரச்சினையில் இ. ச. ச. கட்சியின் கொள்கை யென்ன என்பதை மக்கள் தெரிந்துகொள்ள வேண்டியது மிக முக்கியமானதாகும். 1943-ம் ஆண்டு முதல் இன்றுவரை தங்கள் மொழிக் கொள்கையில் மாற்றம் செய்யவில்லையென்று ச. ச. கட்சியின் மதிப்புக்குரிய உறுப்பினர்கள் நிகழ்த்திய பேச்சுக்களிலிருந்து அவர்களின் கொள்கையை வெளியிலுள்ள மக்களுக்கு எடுத்து விளக்க விரும்புகிறேன். கடந்த தேர்தற்காலங்களில் இதே நிலையைத்தான் இவர்கள் யாழ்ப்பாணத்தில் கடைப்பிடித்துள்ளார்கள்.

'மொழிக்கொள்கையில் சமசமாஜ கட்சியின் நிலையென்ன? கூட்டரசாங்கத்தின் அமைச்சரான இன்றைய அகலவத்தைப் பிரதிநிதி அவர்கள் பேச்சிலிருந்தும் ஒரு சில பகுதிகளை இங்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன். [1956 ஜூன் 11-ம் திகதி சிங்களம் மட்டும்

(12-ம் பக்கம் பார்க்க)


## ரிஷி லேகியம்

(கருணைக் கிழங்கு)



மூல முளைகள், இரத்தம், சீழ் பௌத்தம், வாய்வுகள், உள் மூலம், வெளி மூலம், தீராத மலச்சிக்கல், மூலச் சூட்டினால் உண்டாகும் எல்லா உபாதைகளுக்கும் கைகண்டது.

ரிஷி மார்க்கைக் கவனித்து வாங்கவும்

டின் 1க்கு ரூ. 3-50

தபால் செலவு 1-10 சதம்

எவ்வித தீராத வியாதிக்கும் எம்மைக் கலந்து ஆலோசியுங்கள்.

அனேக மருந்துகள் அடங்கிய கேட்லாக் இனாம்.

ஞானசுந்தர வைத்தியசாலை,

187, செட்டியார் தெரு, கொழும்பு-11.



## "சமாதானம், ஒற்றுமை, முன்னேற்றம்"

★ காதல், திருமணம், தொழில், முன்னேற்றம், பரீட்சை, வியாபாரம்.

★ உங்கள் பிரச்சினை இவைகளில் ஒன்றாக இருந்தால்?

இலவச ஆலோசனைகளுக்கு இங்கே கேளுங்கள்.

விலாசம்:-

பண்டார மந்திராச்சாரியார் அன் கம்பெனி,

தலாவ அனுராதபுரம் வழி.

# ஆங்கிலத்திற்கு பதில் இந்நாட்டு மொழிகளை உபயோகிப்போம்

## பாராளுமன்றத்தில் ஜே. ஆர். பேச்சு

'இன்று நாம் அனைவரும் விரும்புவது மொழிக்காக சேவை செய்வதுதான். நாமனைவரையும் ஆங்கிலத்துக்குப் பதிலாக இந்நாட்டு மொழிகளை உபயோகிக்க விரும்பும் தேசபக்தர்களாகவே மொழிப் பற்றுள்ளவர்களாகவே நான் கருதுகிறேன்' இவ்வாறு ராஜ்ய மந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன தமிழ் மொழிச் சட்டத்திற்கான பிரமாணங்களைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துப் பேசுகையில் கூறினார்.

அமைச்சர் திரு. ஜயவர்த்தன தொடர்ந்து கூறியதாவது:-

'இந்நாட்டுக்கு சர்வஜன வாக்குரிமைகிடைத்தகாலம் முதல்—சுய பாஷை பேசும் மக்கள் பாராளுமன்றப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய ஆரம்பித்த காலத்திலிருந்து அரசாங்க அலுவல்கள் ஆங்கிலத்தில் செய்வதற்குப் பதிலாக பொதுமக்கள் பேசும் மொழிகளில் செய்யப்பட வேண்டுமென்ற கிளர்ச்சி ஆரம்பமாயிற்று.

நாம் அரசியற் சுதந்திரத்தை அனுபவிக்கும் போதே பொதுமக்களின் மொழியில் அலுவல்களை நடத்தவும் முயற்சி செய்ய வேண்டும். நாமனைவரும் இக்கருத்தை ஏற்றுக்கொள்கின்றோம். அங்கும் இங்கும் வெவித்தியாசங்கள் இருக்கலாம் குறைபாடுகள் இருக்கலாம். சிங்களம் மட்டும் ஆட்சி மொழியாக வேண்டுமெனக் கூறியவர்கள் சில சமயம் இருமொழிகளுக்கும் அந்தஸ்து பெற்றுக்கொடுப்பதற்கு உதவி செய்யலாம். இரு மொழிகளுக்கும் சம அந்தஸ்து கொடுக்க வேண்டுமென்று கூறியவர் சிலவேளை சிங்களம் மட்டும் ஆட்சி மொழியாக்க உதவி செய்யக்கூடும். மாறிவரும் ஓசைகள் தம் அரசியல்வாதிகளுக்கு உரியதாகும்.

இன்று நாம் அனைவரும் விரும்புவது மொழிக்காக சேவைசெய்வதுதான். நாமனைவரையும் ஆங்கிலத்துக்குப் பதிலாக இந்நாட்டு மொழிகளை உபயோகிக்க விரும்பும் தேசபக்தர்களாகவே—மொழிப் பற்றுள்ளவர்களாகவே நான் கருதுகிறேன்.

### குழப்பங்கள் மத்தியில் மசோதா

1956ல் பொதுத் தேர்தல் நடைபெற்றபோது சிங்களம் மட்டும் அரசகருமமொழியாக வேண்டுமென அநேக அரசியற் கட்சிகள் ஏற்றுக்கொண்டிருந்தன. எத்தனையோ மடைகளாக கள் மொழிக் கிளர்ச்சியை தூண்டின. 1956ல் காலஞ்சென்ற பிரதமர் திரு. பண்டாரநாயக்கா சிங்களம் மட்டும் மசோதாவைச் சட்டமாக்கினர்.

அன்று அந்த மசோதாவைக் கொண்டுவந்தபோது இன்றுபோல குழப்பங்கள் ஏற்பட்டன. இன்று குழப்பம் செய்பவர்களுக்கெதிராகவே அன்று குழப்பம் நடந்தது. அன்று எதிர்க்கட்சித் தலைவர் போலிஸ்பாதுகாப்புடன் இச்சபைக்கு வந்தாரென்று எண்ணுகிறேன்.

குழப்பங்கள் மத்தியிலே அன்று அந்த மசோதா கொண்டுவரப்பட்டது. தமிழரசுவாதிகள் அதனை வன்மையாக எதிர்த்தனர். திரு. நாகநாதனுக்கு பலதொல்லை கள் ஏற்பட்ட விஷயம் நமக்குத் தெரியும்.

டாக்டர் என். எம். பெரேரா, திரு லெஸ்லி குணவர்த்தன முதலியோர் அந்த மசோதாவை எதிர்த்தனர். நான் அதைக் கூற வேண்டியதில்லை. கருத்தை மாற்றிக்கொள்ளும் உரிமை உங்களுக்கு உண்டு. ஆனால் தமிழுக்கு சம அந்தஸ்து வழங்க வேண்டுமென்ற கொள்கையாக அன்று பேசினார்கள்.

#### தமிழ் மொழி மசோதா

1958ல் தமிழ் மொழி (விசேட விதிகள்) மசோதாவைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

தமிழுக்குரிய அந்தஸ்து அளிப்பதற்காக தான் ஒரு மசோதாவைக் கொண்டுவருவதாகத் திரு பண்டாரநாயக்கா அப்பொழுது கூறினார். முதலாவது மசோதாவிலேயே அதனைக் கொண்டுவர தான் விரும்பியதாகவும், அநேகரின் எதிர்ப்பின் காரணமாகதான் அப்பொழுது அதைக் கொண்டுவரவில்லை என்றும் அன்று அவர் கூறினார்.

இந்தச் சட்டத்தில் பல சரத்துகள் உண்டு. முதலாவது சரத்து சட்டத்தின் பெயரைக் குறிப்பிடுகிறது. இரண்டாவதுசரத்து தமிழ்ப் பிள்ளைகளின் போதனை சிங்கள 'ஸ்ரீ'க்கு பதிலாகத் மொழி தமிழ் என்று கூறுகிறது. இலங்கையில் எந்தப் பகுதியில் ஒரு தமிழ்ப் பிள்ளை வசித்தாலும் தனக்கு தமிழ் மூலம் கல்வி கற்பிக்குமாறு கோருவதற்கு அதற்கு உரிமை உண்டு. சிங்களப் பிள்ளைக்கு அத்தகைய சட்டபூர்வமான அனுமதி கிடையாது.

பல்கலைக்கழகத்திலும் தமிழ்ப் பிள்ளைகளுக்குத் தமிழ் மூலம் கல்வி பயில அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. தமிழ் மூலம் கல்வி கற்ற ஒரு மாணவன் அரசாங்க சேவையிற் சேரும்போது மூன்றாவது சரத்தின்படி தமிழ் மூலம் பரீட்சை எழுத அனுமதிக்கப்பட வேண்டும். வேறு ஒரு மொழியிற் பரீட்சை எழுதுமாறு நிர்ப்பந்திக்க முடியாது. ஆயினும் அரசாங்க சேவையில் சேர்ந்த சில காலத்துள் உத்தியோக மொழியைப்படித்துக்கொள்ளவேண்டும். அதற்கு குறிப்பிட்ட கால மொன்றுவரையறுக்கப்படவில்லை.

நான்காவது சரத்து கடிதப் போக்குவரத்து பற்றியதாகும். தமிழ் பேசுபவர்கள் தமிழில் அரசாங்கத்துக்கு எழுதவும் தமிழில் பதில் பெறவும் அதிகாரம் பெறுகிறார்கள். ஐந்தாவது சரத்து வட,

(8-ம் பக்கம் பார்க்க)

## தமிழ் பகுதிகளில் சிங்களர்:

# யானை விழுங்கிய விளாம்பழமாகி விடும்

## பாராளுமன்றத்தில் முன்னாள் அமைச்சர் பேச்சு

அரசாங்கத் தஸ்தாவேஜுகள் எந்த மொழியில் எழுதப்படுகிறதோ அந்த மொழிதான் ஆட்சி மொழி. முழு இலங்கையிலும் பருத்தித்துறை முதல் தேவேந்திரமுனை வரை ஆட்சி மொழியாக சிங்களமே இருத்தல் வேண்டும். ஆனால் இந்தச் சட்டவிதிகளின்படி வடஇலங்கையிலும், கிழக்கு மாகாணத்திலும் எல்லா அரசாங்க அலுவல்களும் பிறப்பு விவாக அத்தாட்சிப் பத்திரம் மட்டுமின்றி எல்லா தஸ்தாவேஜுகளும் தமிழ் மொழியிலேயே எழுதப்படும். அதிலிருந்து வட, கிழக்கு மாகாணங்களில் இரு ஆட்சி மொழிகள் ஏற்படுமென்பதை இச்சபைப் பிரதிநிதிகள் அனைவரும் ஏற்றுக்கொள்வார்கள்' இவ்வாறு தெஹிவளைப் பிரதிநிதி திரு. பி. எச். டப்ளியூ. டி. சில்வா தமிழ் மொழிச் சட்டப் பிரமாணங்கள் மீது பாராளுமன்றத்தில் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:—

'இதுவரை வட, கிழக்கு பகுதிகளில் லொறி, பஸ் முதலியவற்றில் சிங்கள 'ஸ்ரீ' எழுத்து பாவிக்கப்பட்ட தெனினும், இனிமேல் வட கிழக்குப் பகுதிகளில் மோட்டார் வாகானப் பதிவுக்கச்சேரிகளில்—யாழ்ப்பாணம், மட்டக்களப்பு கச்சேரிகளில் தமிழ் எழுத்து ஒன்றை உபயோகிக்க முடியுமல்லவா? முடியுமென்று நான் கூறுகிறேன்.

சட்டத்தைப் பற்றி நன்கு தெரிந்த திறமையான சட்ட நிபுணர் ஒருவர் இச்சட்ட விதிகளைத் தயாரித்திருக்கிறார் மற்றொரு திறமையான நியாயதுரந்தரர் அச்சட்ட விதிகளை பற்றி இங்கு பேசினார். மாதக் கணக்காக விவாதித்த பின்பே இது இங்கே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

[14ம் பக்கம் பார்க்க]

## மூவர்ணக் கொடியின் வரலாறு என்ன?

எஸ். செல்வநாதன்,
ஏருவூர்

கே: தந்தையே! வட, கிழக்கு மாகாணங்களில் மட்டும் தமிழை நிர்வாகமொழியாக்கினால், மற்றைய மாகாணங்களில் வாழும் தமிழ் மக்களின் நிலையென்ன?

ப: இப்போ நிறைவேற்றப்பட்ட மசோதாவின்படி அவர்கள் அரசாங்கத்தோடு கடிதத்தொடர்புகளை தமிழில் நடத்திக்கொள்ளலாம். இது அவர்களுக்குப் போதாது. ஏழு மாகாணங்களிலும் தமிழுக்கு சம அந்தஸ்து கிடைத்தால்தான் அவர்களுக்கு முழு உரிமைகிடைக்கும். இது நமது கைக்கு எட்டாமல் போய்விட்டது. இலங்கையில் ஒரு கட்சியாவது இதை வழங்குதற்கு தற்சமயம் சம்மதிக்கிறதாய் இல்லை. எமது நிரந்தரமான இலட்சியம் ஒரு காலத்தில் தமிழுக்கு சம அந்தஸ்து பெற்றுக்கொடுப்பதே.

ஃ

எஸ். எம். ரஹீமுத்தீன்,
கண்டி

கே: பிரதேச சபைகள் நிறுவப்பட்டு குடியேற்றம் சம்பந்தமான அதிகாரங்கள் வழங்கப்படாவிட்டால் அவற்றை ஏற்றுக்கொள்ளும் உத்தேசம் உண்டா?

ப: கூடிய அளவு ஆதிக்கத்தை பெற்றுக் கொள்வதே எமது நோக்கம். சரியாய் எவ்வளவு ஆதிக்கத்தைப் பெற்றுக் கொண்டால் பிரதேச சபைகளை ஏற்றுக் கொள்வோம் என்று இப்போது கூற முடியாது.

ஃ

'நெய்தல் நம்பி',
சிலாபம்

கே: வட, கிழ் மாகாணங்களில் பணிபுரியும் தமிழ் ஆசிரியர்கள், மற்றும் பகுதிகளுக்கு மாற்றமாகும் பொழுது அவர்களுடைய மாற்றத்தை ரத்து செய்ய தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகள் ஒத்துழைக்கின்றனர்.

### தமிழரசுத் தந்தை பதில் கூறுகிறார்

இதன் காரணமாக மற்றும் பகுதிகளில் உள்ள தமிழ் பாடசாலைகள் ஆசிரியர்களின்றி மூடப்படுகின்றன. தமிழ் வளர்க்கும் தங்கள் கட்சியின் இச்செய்கை முறையானதா?

ப: எமது கட்சி மாற்றங்களைத் தடை செய்ய மாட்டாது என்று நான் ஒரு கடிதம் எழுநிக்கல்வி அமைச்சருக்குக் கொடுத்திருக்கிறேன். அதன் பிரகாரம்தான் நாம் நடந்துகொள்வோம்.

ஃ

செ. குலநாயகம்,
கொழும்பு-13.

கே: தனிச் சிங்களச் சட்டத்திலோ (விஷேச)

(13-ம் பக்கம் பார்க்க)


**'மாய ஜோதி' ஊது பத்திகள்**

"பாட்டாளி தொடக்கம் பணக்காரர் வரை"
விரும்புவது "மாய ஜோதி" ஊது பத்திகளே!
ஏன்?

- அதன் சுகந்த நறுமணம்
- அதன் நிலைத்து எரியும் தன்மை
- நவீன தயாரிப்பு
- அதன் நியாய விலை.

நீங்கள் மட்டும் ஏன் தயக்கம்?
வாங்குங்கள் ஒரு முறை, நிலைத்து விடும் 'மாய ஜோதி'
ந. செல்லத்துரை, மாயஜோதி இன்டஸ்ட்ரீஸ்.
128/3, வாட்பிளேஸ், கொழும்பு-7.

No. 24217

குதிரை பயில்வான் லேகியம்

HAKKEEM. I. L. A. MAJEED, MARUTHAMUNAI, KALMUNAI. REGED. No. 24217

சுறுசுறுப்பு, உற்சாகம், பசியின்மை, தாதுவிர்த்தி, நித்திரை, மலச்சிக்கல் இவைகளுக்கு

குதிரைப் பயில்வான் லேகியத்தையே பாவியுங்கள்

எங்கும் கிடைக்கும்

தயாரிப்பாளர்:
கமால்தீன் லேகியம் கம்பனி,
No. 2, மருதமுனை,
கல்முனை.

# அரசியலமைப்பு மாற்றத்தின் அவசியம்

## கலாநிதி அ. ஜெயரத்தினம் வில்சன்

அரசியல் விரிவுரையாளர்,
இலங்கைப் பல்கலைக் கழகம், பேராதனை.

இளைப்பாறிய நீதிபதிகளை ஆணைக் குழுக்களின் தலைவர்களாகவோ, வேறு உயர் பதவிகளுக்கோ முதலமைச்சர் நியமிப்பது நீதிபரிபாலனத் துறையை ஒரு வழியில் பாதிப்பதாகும். இத்தகைய பதவிகளை இளைப்பாறிய பின்னர் பெறுவதற்காக உயர் நீதிபதிகள் அரசாங்கத்தின் உணர்ச்சிகளை பகைக்க மாட்டார்கள் என்று ஒரு முதலமைச்சர் எதிர்பார்க்கலாம். இத்தகைய அதிகாரம் முதலமைச்சரிடம் இருப்பது நீதிபதிகளை அவரது செல்வாக்கின் கீழ் சிக்கவைக்க உதவுகின்றது என்று கட்டுரையாசிரியர் இங்கு குறிப்பிடுகின்றார். அதே போன்று நீதி பரிபாலன ஆணைக் குழுவில் ஒருகால் (5 வருடங்கள்) கடமையாற்றியவர்கள் மீண்டும் அப்பதவிக்கு நியமிக்கப்படக் கூடாது என்றும் இம்முறை இந்தியாவில் கடைப்பிடிக்கப்படுவதாகவும் சுட்டிக் காட்டியுள்ளார். எமது அரசியல் அமைப்பில் நீதிபரிபாலனம் சம்பந்தப்பட்ட 52ம், 53ம் சரத்துக்களில் உள்ள தவறுகளை இங்கு சுட்டிக் காட்டி மாற்றத்திற்கான காரணங்களை இங்கு ஆராய்கிறார் ஆசிரியர். அடுத்து வரும் தொடர்களில் மேலும் பல உண்மைகள் எடுத்து விளக்கப்படும்.

அடிப்படை உரிமைகள் சாசனம் ஒன்றினை அரசியலமைப்புத் திட்டத்தில் இணைப்பது, பல்வேறு சமூகங்களைக் கொண்ட நாடுகளல் பாதுகாப்புணர்வையும் சமபலத் தன்மையையும் உண்டாக்கும் என்பது ஆசியா கண்ட அனுபவமாகும். உதாரணமாக, (முந்திய கட்டுரையில் குறிப்பிட்டாற்போன்று) இந்தியாவும் மலேயாக் கூட்டரசும் அத்தகைய சாசனங்களைத் தமது அரசியலமைப்புத் திட்டத்தில் இணைத்துக்கொண்டதன் காரணமாக அந்நாடுகளில் அரசியல் வலிவுக்கும் பொருளாதார வளர்ச்சிக்குமான சூழ்நிலை இருப்பது கண்கூடு. அத்தகைய சாசனம் எமது அரசியலமைப்புத் திட்டத்திலும் இணைக்கப்படவேண்டியது அவசியமாகும்.

1956-ம் ஆண்டிலிருந்து, அரசியலமைப்புமாற்றத்திற்கெனத் தெரிவுசெய்யப்பெற்றபாராளுமன்றத் தெரிவுக் குழுக்களினுல் இவ்விடயம் கவனத்திற் கொள்ளப்பட்டுவந்திருக்கின்றது. எமது அரசியலமைப்புத் திட்டத்தில் மொழிவாரி, மதவாரிச் சிறுபான்மையினருக்கெனச் சேர்க்கப்பட்ட 29 வது சரத்து தேவையைத் தீர்க்கப் போதியதல்ல என்பது தெரியவந்துள்ளது. எமது அரசியலமைப்புத் திட்டத்தின் சிற்பியான சேர். ஐவர் ஜென்னிங்ஸ் அவர்களே, 29-வது சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பற்றுக்குறை பாதுகாப்பு விதிகளைக் காட்டிலும் ஓர் (அடிப்படை) உரிமைகள் சாசனம் கூடிய பயனுடையதாக அமைந்திருக்கும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

### பரீட்சிப்பு நிலை

சில நாடுகள் தமது அரசியலமைப்புத் திட்டங்களில் ஆட்சி கொள்கை இயக்கத் திட்ட அறிக்கை ஒன்றினை இணைத்துப் பரீட்சித்துப் பார்த்தன. அயர்லாந்து, ஸ்பானியக் குடியரசு (பிராங்கோ ஆட்சியின் முன்பு), இந்தியா ஆகியநாடுகளில இத்தகைய அறிக்கைகள் அரசியலமைப்புத் திட்டத்தில் இணைக்கப்பெற்றுள்ளன. புதிய சுதந்திர நாடுகளில் காணக்கிடக்கும் சமுதாயங்களை ஒத்த தன்மையை—போதிய அளவு பிணைப்புறுதலையும், எத்தகைய அடிப்படை (அரசியல்) நோக்குடன் தாம் அமையவேண்டுமென்று தீர்மானம் எதுவுமற்றவையுமான சமுதாயங்களை—தமது அரசியலமைப்புத் திட்டத்தில் இத்தகையதோர் அறிக்கையை இணைப்பதனுல் பலனடையக் கூடும்.

சட்ட நிர்மாணப் பணியில் ஈடுபடும் அரசாங்கங்களுக்கு இத்தகைய அறிக்கை ஓர் வழிகாட்டியாகப் பயன்படக்கூடியது. பல்வேறு அரசியற் கூட்டணிகளிடையேயும், சில வேளைகளில் அடிப்படை விடயங்களிலான மாறுபாடுகள் உட்பட, பல்லாற்றானும் வேறுபாடுகள் காணக்கிடக்கும் நிலையில், அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட இத்தகையதோர் அறிக்கை அரசியலமைப்புத் திட்டத்தில் இணைக்கப்பெறுவது, சட்ட நிர்மாணத்திற்கும் சட்டநிர்வாகத்திற்கும் உதவக்கூடியதாகும்.

### சுயாதீன நீதிபரிபாலனம்

(அடிப்படை) உரிமைகள் சாசனம் முறையாக செயற்படுத்தப்பட வேண்டுமாயின் அரசியல் தலையீட்டுக்கு அப்பாற்பட்ட ஓர் சுயாதீன நீதிபரிபாலனம் அத்தியாவசியமாகும். நீதிபரிபாலன சுதந்திரப் பாரம்பரியத்தோடு கூடிய ஓர் உயர் நீதிமன்றம் (சுப்றீம் கோர்ட்) எமக்கு இருந்து வருவது உண்மையாயினும், இது எதிர்காலத்தில் எந்தக் கட்டத்திலாவது அத்தகைய அரசியல் தலையீட்டுக்கு ஆப்பு வைக்கக் கூடியஉத்தரவாதமல்ல.

உயர் நீதிமன்ற நீதிபதிகளை ஏதாவது ஓர் 'கட்டாக்காலி' அரசாங்கம் தனதுசெல்வாக்குக்குள் கட்டுப்படுத்துவதற்குப் பயன்படுத்தக் கூடிய வசதிகள் எமது அரசியலமைப்புத் திட்டத்தில் உண்டு. நீதிபதிகளின் நடுவுநிலைச் சுதந்திரத்தில் தலையிடுவது சிரமமல்ல என்றதோர் கருத்தை மக்கள் மனதில் பதிய வைக்கக்கூடிய சில வழக்குகளும் உள்ளன. அத்தகைய சாத்தியக்கூறுகளைக் கட்டுப்படுத்தும் சாதனங்களைச் சமைக்கவேண்டியது அவசியமாகும்.

### சேவைகால நீடிப்பு

எமது அரசியலமைப்புத் திட்டத்தின் 52 (3) சரத்தும், 53-வது (குறிப்பாக துணை-விதி-3) சரத்தும் திருத்தப்படவேண்டியவையாகும். 52 (3) வது சரத்து, உயர்தர நீதிமன்ற நீதிபதிகள் 62 வது வயதில் பதவியிலிருந்து ஓய்வுபெறலாமென்றும், ஆயினும் மகாதேசாதிபதி தீர்மானிக்கும் பட்சத்தில் 12 மாதங்களுக்கு மேற்படாதகாலத்திற்கு அவர் பதவிகாலம் நீடிக்கப்படலாமென்றும் கூறுகிறது. மகாதேசாதிபதி பிரதமமந்திரியின் ஆலோசனையின் பேரிலேயே செயற்படுவர். இத்தகைய பதவிகால நீடிப்புகள், ஒரு நீதிபதி அரசாங்கத்தின் நல்லுறவு முறையில் இருந்தாரா என்பதையும், அவர் வழங்கிய தீர்ப்புகளின் தன்மைகளைப்பொறுத்தும் தீர்மானிக்கப்படலாம்.

ஒரு தனிப்பட்ட நீதிபதிக்கு ஓராண்டு பதவி நீடிப்பு மிகவும் முக்கியம் வாய்ந்ததாக அமையலாம். அம்மேலதிக ஓராண்டு (நீடிப்பு) அவரை ஓய்வுகால வேதனத்தைப் பெறும் தகுதியுள்ளவராக்கலாம். பிரதம நீதியரசரால், சில வேளைகளில (மகாதேசாதிபதியவர்கள் நாட்டிலில்லாதபோது) தற்காலிக மகாதேசாதிபதியாகப் பதவி வகித்தல் போன்ற அன்னாரது நீதிபரிபாலனத்துறையின் உச்சியை எட்டுவதற்கு அவ்வோராண்டு வழிசெய்யலாம். இவைபோன்ற தூண்டுதல்களினல் தமது சுய அபிலாஷைகளுக்குத் தம்மையே நெறிகெட்டுப் பலியிட்டுக் கொண்ட நீதிபதிகளை ஏற்கனவே சந்தித்துள்ளோம். இவ்வுண்மையை நாம் புறக்கணிக்கக்கூடாது.

### நீதிபரிபாலன நியமன மாற்றம்

நீதிபரிபாலன சேவை ஆணைக்குழு அமைப்புப்பற்றிக் கூறும் 53-வது சரத்தும் அவ்வளவு திருப்திகரமானதல்ல. இச்சரத்தின்கீழ் இவ்வாணைக்குழுவின் தலைவரைத் தவிர்ந்த (பிரதம நீதியரசரே தலைவராவர்) ஏனைய உறுப்பினர்கள் மகாதேசாதிபதியினுல், உயர் நீதிமன்றத்து நீதிபதிகள் மத்தியிலிருந்தோ ஓய்வுபெற்ற நீதிபதிகள் மத்தியிலிருந்தோ தெரிவுசெய்யப் பெறுவர். செயல்முறையில் இதுவும் பிரதம மந்திரியின் ஆலோசனையின் பேரிலேயே நடைபெறும். நீதிபரிபாலன சுதந்திரம் நிறைவாக இருக்க வேண்டுமாயின், பிரதமமந்திரி இவ்வுறுப்பினர்களைத் தெரிவுசெய்யும் பணியில் ஈடுபடாமையே சிறப்பானதாகும். ஏனெனில், நீதிபரிபாலனத் துறையில் சில நியமனங்களைச் செய்யும் கணிசமான அதிகாரத்தையுடைய ஓர் குழுவில் இடம்பெறுவதற்கு நீதிபதிகள் மத்தியில் ஆர்வமும் (அதன் காரணமாகப்) போட்டியும் இருக்கலாம். அத்தோடு, இச்சரத்தின் துணைவிதி 3-ம் இதைப் போன்று ஆட்சேபகரமானதே. இவ்வாணைக் குழுவின் உறுப்பினர்கள் ஐந்தாண்டு குழுவில் பணியாற்றிய பின்னர் திரும்பவும் உறுப்பினர்களாக நியமனம் பெறுவதற்குத் தகுதியுடையர் என இவ்விதி கூறுகிறது.

பரிபூரண பாரபட்சமின்மை நீதிபரிபாலனத்தில் நிலவவேண்டுமானுல், திரும்பவும் நியமனம் பெறும்வசதி எதுவும் இருக்கக்கூடாது. இந்திய மத்திய அரசின் அரசாங்க சேவை ஆணைக்குழு பற்றிக்கூறும் இந்திய அரசியலமைப்புத் திட்ட சரத்தில் இவ்விடயம் கவனிக்கப்பட்டுள்ளது. அவர்களது பதவிக்காலம் முடிந்த பின்னர், ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் மேற்கொண்டு நியமனம் பெறத் தகுதியற்றவரென இந்திய அரசியலமைப்புத் திட்டம் வகுத்துள்ளது.

### பிரதமரின் அதிகாரங்கள்

மகாதேசாதிபதியவர்களின் பதவிபற்றிக் கூறும் மாட்சிக்குரிய (மன்னரின்) மடலின் 7-வது சரத்தும் உற்சாகமளிக்கக் கூடியதல்ல. மகாதேசாதிபதி இல்லாத போது வேறு தகுதிவாய்ந்தவர் எவரும் இல்லாதபட்சத்தில், பிரதம நீதியரசர் தற்காலிகமாக அப்பதவியை வகிப்பதற்குஇச்சரத்துவசதியளிக்கிறது. மகாதேசாதிபதி இல்லாதபோது, அரசாங்கத்திற்கு இக்கட்டான நிலைகளை உண்டுபண்ணிய ஓர் பிரதம நீதியரசரை அவரது பதவிக்கு நியமிக்காது, பழிவாங்கும் மனோபாவத்துடன் ஓர் பிரதம மந்திரி நடக்கலாமாகையால், பிரதம நீதியரசரை நியமிக்கும் நியதி சட்டாயமானதாக அமையாது, பிரதமமந்திரிக்கு மாற்று வசதிகட்கும் வழிவகுக்கும் இச்சரத்து குறைபாடு உடையதாகும். மகாதேசாதிபதியாகத் தற்காலிகமாகப்பணியாற்றும் வாய்ப்பைத் தன்னிடமிருந்து எதிர்பார்க்கும் ஓர் பிரதம நீதியரசர், தமது நல்லெண்ணத்தைப் பெறத் தூண்டப்படுவார் எனப் பிரதமமந்திரி எதிர்பார்க்கக் கூடும்.

அரசியலமைப்பின் அடிப்படைத் தர்மங்களைப் புறக்கணிக்கும் முறையில், உயர் நீதிமன்றநீதிபதிகளைத்தமது செல்வாக்கின்கீழ் சிக்கவைப்பதற்காக பிரதமமந்திரியால் குறுக்கு வழிகள் கையாளப்படலாம். ஆணைக்குழுக்களின் தலைவர்களாகவோ, உறுப்பினர்களாகவோ, வேறு உயர்தர பதவிகளுக்கோ இளைப்பாறிய நீதிபதிகளை பிரதமமந்திரியே நியமிக்கும் வழக்கு நீதிபரிபாலனத்தின் கண்ணியத்தை நிலைநிறுத்தக் கூடியதன்று. அரசாங்கத்தின்பால் 'அனுதாபமற்றவர்கள்' எனக் கணிக்கப்பெறும் நீதிபதிகள் இத்தகையநியமனங்கள் செய்யப்படும்போது வேண்டுமென்றேபுறக்கணிக்கப்படுவர். இதனுல், உயர் நீதிமன்ற நீதிபதிகள் ஓய்வுபெற்றதன் பின்னர் வேறு பதவிகளுக்கு நியமனம்பெறுவதற்கு அரசாங்கத்தால் கணிக்கப்பட வேண்டியவர்களாகையால், அவர்கள் அரசாங்கத்தின் உணர்ச்சிகளைப் பகைக்கமாட்டார்கள் என பிரதமமந்திரி ஒருவர் எதிர்பார்க்கக்கூடும்.

# தைத் திங்கள் சபதம்

சோ. க. வேலாயுதர்

உழவர்த்தம் உயர்வை எல்லா
உலகுக்கும் உணர்த்தி நின்று
பழமையின் மாண்பை நன்கு
பறையறிந் தறிவிக் கின்ற
மழைகுளிர் கால மோய்ந்து
வருநல்ல தையாம் திங்கள்
உழைகதிர் நன்றி போற்ற
உவப்புடன் எழுகு வீரே.

ஏழையென் றெவரும் இந்த
ஏழ்தல வைப்பி லின்றி
கோள்கொலை காமம் பொய்மை
சூத்திரம் களவு யாவும்
நாளிலும் மாயும் அன்பு
நல்லருள் அறங்க ளோங்கும்
பிழைகள் அற்றுப் போகும்
பெருமிதம் உற்று வாழ்வோம்.

மக்களின் மகிழ்ச்சி கண்டு
மங்கல வாழ்வி தென்று
மிக்கெழில் வாழ்வு புக்கு
மிகுபெரு நோக்குக் கொண்டே
சிக்கெது மில்லா நல்ல
செய்யநேர் வாழ்வு காண
தக்கநற் சபதம் செய்வோம்
தமிழரின் பண்பில் நின்று.

வேளாண்மை யென்னு மந்த
வேள்வியி லூறி வாழ்ந்து
தாழாத இன்பம் பெற்றுத்
தரணியிற் தமராய் வாழ்வோம்
பாழான பகையை வென்று
பலரையும் எமக்கிங் குற்ற
கேளாகக் கொண்டெந் நாளும்
கிளர்ந்தினி துயர்ந்து வாழ்வோம்.

உழவர்தா மினிது வாழ்க
உழவயல் யாவும் வாழ்க
பழையசெந் தமிழர் வாழ்க
பண்புறு தையும் வாழ்க
அழகுடை யவனி வாழ்க
அறஞ்சிறந் துலகோர் வாழ்க
மழைதரு கதிரோன் வாழ்க
மணியிறை அருளி னலே.



# யாழ்ப்பாணக் குடாநாட்டின் சுருட்டுக் கைத்தொழில்

**க. குணராஜா, பி.ஏ. (ஆனர்ஸ்)**
விரிவுரையாளர், இலங்கைப் பல்கலைக் கழகம்.

யாழ்ப்பாணக் குடா நாட்டின் சுருட்டுக் கைத் தொழிலின் எதிர்காலம் உன்னதமானதாகவிருக்கும் என்று கூறுவதற்கில்லை, என்றாலும், அதனது எதிர்காலம், அவ்வளவு மோசமானதாகவும் இருக்காது என்பதில் சந்தேகமில்லை. கடந்தகால நிலைமைகளையும், நிகழ்கால நிலைமைகளையும் கொண்டு எதிர்காலத்திய நிலைமையை நோக்கும்போது, யாழ்ப்பாணக் குடா நாட்டின் சுருட்டுக்கைத் தொழிலின் எதிர்காலம் உன்னதமானதாக இருக்கும் என்று கூறுவதற்கில்லை. அதற்குச் சில காரணங்களுள்ளன:

## எதிர்காலம் எப்படி?

(அ) 1958-ம் ஆண்டு நிகழ்ந்த இனக் கலவரத்தின் பின், சுருட்டுக் கைத் தொழிலில் ஒரு வீழ்ச்சி ஏற்பட்டது; வெளியூர்களில் சுருட்டுக் கடைகள் வைத்திருந்த தமிழ் வியாபாரிகள் கடைகளை விட்டுவிட்டுத் திரும்பி விட்டனர்; அது மட்டுமன்றி தமிழரின் சுருட்டுகளைக் குடிசகக் கூடாது என்ற ஒருவித இன வேற்றுமை சிங்கள மக்களிடையே பரவியிருக்கிறது. அவற்றால், 1958-க்கு முன் இருந்தளவு சந்தைகள் இன்று இல்லாமற் போக, விற்பனையளவு வீழ்ச்சியடைய, யாழ்ப்பாணக் குடா நாட்டின் சுருட்டுக் கைத் தொழில் பாதிக்கப்பட்டது. இன்று பழைய நிலையைச் சுருட்டுக் கைத் தொழிலடைந்து வருகின்றது, எனினும், இவற்றைக் கொண்டு பார்க்கும் போது யாழ்ப்பாணக் குடாநாட்டின் சுருட்டுக் கைத்தொழிலின் எதிர்காலம் உன்னதமானதாக இருக்கும் என்று கூறுவதற்கில்லை.

(ஆ) யாழ்ப்பாணக் குடா நாட்டின் சுருட்டுகளுக்குச் சந்தைகளில் போட்டி ஏற்பட்டு வருகின்றது. யாழ்ப்பாணச் சுருட்டுக்கள் தத்தமக்குள் மட்டும் போட்டியிடுகின்றன என்றர்த்தமல்ல. யாழ்ப்பாணக் குடா நாட்டிற்கு வெளியே இன்று பலர் சுருட்டுவிக்கின்றனர். இலங்கை எங்கிலும் இந்நிலை படிப்படியாகப் பரந்துவிட இடமுண்டு.

(இ) யாழ்ப்பாணக் குடா நாட்டிலுள்ள பல தொழிலாளர்கள் வேலை மாற்றத்தை விரும்புகின்றனர். வேறு தொழில் செய்யவிரும்பி அவர்கள் காத்திருக்கின்றனர். அத்தோடு திறமை வாய்ந்த பல தொழிலாளர்கள் சுருட்டுக் கைத்தொழிலை விட்டு விலகி, வேறு தொழில்கள் செய்து வருகின்றனர். அது மட்டுமன்றி இத் தொழிலாளர்களிற் சிலர் இலங்கையின் ஏனைய பகுதிகளுக்குச் சென்று (கொழும்பு, கண்டி) அங்கு கூடிய வதியத்திற்குச் சுருட்டுகின்றனர்.

(ஈ) சுருட்டுத் தொழிலைச் சிறப்பாக நடத்தக் கூடிய உற்பத்தியாளர்கள் குறைந்து வருகின்றனர்; 500-கு மேல் உற்பத்தியாளர்கள் இருந்த யாழ்ப்பாணக் குடா நாட்டில் இன்று 200-குச் சற்று அதிகமாகவே உற்பத்தியாளருள்ளனர்; மேலும், சுருட்டுத் தொழிலைச் சிறப்பாக நடத்த விரும்புகின்றவர்களுக்குப் போதிய முதலுமில்லை.

(உ) யாழ்ப்பாணக் குடா நாட்டில் தொழிலாளர்கள் குறைந்து வருகின்றார்கள்; அரசாங்க உத்தியோகங்களுக்கும், வேறு தொழில்களுக்கும் இளம் சமூகம் பெரிதும் போட்டியிடுகின்றது.

(ஊ) சுருட்டுப் புகைக்கின்ற ஒரு சமூகம் இன்று இலங்கையில் குறைந்து வருகின்றது. நாகரீகமாக, சிகரெட் புகைக்கின்ற ஒரு இளம் சமூகந்தான் இன்று வளர்ந்து வருகின்றது.

(எ) சுருட்டுப் புகையிலையைப் பயிரிட்டு வரும் கமக்காரர்களின் கண்கள், இலாபகரமான சிகரெட் புகையிலையைச் செய்கை பண்ண விரும்பித் திரும்பியுள்ளன. இன்று சிகரெட் புகையிலை, சுருட்டுப் புகையிலைத் தோட்டங்களில் செய்கை பண்ணப்படவில்லை எனினும், இன்னும் 25 வருடங்களில் செய்கை பண்ணப்படலாம்.

(ஏ) அரசாங்கத்தின் நிலையற்ற போக்கின் விளைவாக, உருவான கட்டுப்பாடுகளும், வருமான வரி அதிகரிடபும், உற்பத்திச் செலவு அதிகரிப்பும், தொழிலாளரின் அதிருப்தியும், போட்டிகளும் யாழ்ப்பாணக்குடா நாட்டின் சுருட்டுக் கைத் தொழிலை நசித்து விடும் என்று சந்தேகப்படவிடமுண்டு.

## சாதகமான நிலை

—இவற்றையெல்லாம் கொண்டு ஆராயும் போது, யாழ்ப்பாணக்குடா நாட்டின் சுருட்டுக் கைத் தொழிலின் எதிர்காலம் உன்னதமானதாகவில்லை என்றே கூறத் தோன்றுகிறது. ஆனால், வேறுசில காரணங்களைக் கொண்டு ஆராயும் போது, அதனது எதிர்காலம் அவ்வளவு மோசமானதாக இருக்கும் என்றும் கூறுவதற்கில்லை;

(அ) யாழ்ப்பாணக் குடா நாட்டின் சுருட்டிற்கு இலங்கை எங்கிலும், ஒரு தனி மரியாதையும், நுகர்ச்சியாளர்களும் இருக்கின்றனர் என்பது மறுக்க முடியாதது; அவர்களால் யாழ்ப்பாணச் சுருட்டைப் புகைக்காது இருக்கவே முடியாது.

(ஆ) புதிய சந்தைகளைப் பெறுவதிலும், பழைய சந்தைகளை விபரிப்பதிலும் யாழ்ப்பாணக் குடா நாட்டுச் சுருட்டு முதலாளிகள் ஈடுபட்டுள்ளனர்; விளம்பரங்கள் மூலம் தமது உற்பத்திகளுக்கு விற்பனை நிலையங்களைப் பெற இன்று முயன்று வருகின்றார்கள். உதாரணமாக, விளம்பரங்கள் மூலம் கொழும்பில் தனது சுருட்டிற்கு நல்ல சந்தையைக் கனகலிங்கம் சுருட்டுக்கள் கைப்பற்றியுள்ளன.

(இ) தொழிலாளர்களது குறைபாடுகளைக் கவனித்து நிவர்த்திக்க இன்று பலர் தீவிரமாக முயன்று வருகின்றார்கள்.

(ஈ) அரசாங்கத்தின் மொழிக் கொள்கையினால், அரசாங்க உத்தியோகங்களைத் துறந்த பலரில, சிலர் இன்று சுருட்டுக் கைத்தொழிலில் ஈடுபட்டிருக்கின்றனர்; உற்பத்தியாளர்களாகத்தாம்.

(உ) சுருட்டுப் புகைக்கின்ற ஒரு சமூகம் இன்று குறைந்து வருவதுண்மையாயினும், சிகரெட்டின் விலையேற்றத்தினால், பலர் சுருட்டுக் குடிக்கத் தொடங்கியுள்ளனர் என்பதுமுண்மை.

(ஊ) காலத்தின் போக்கிற்கும், தேவைக்கும் இணங்க சுருட்டுத் தொழிலில சில மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. சுருட்டுகளை நாகரிகமாக, சிகரெட் பெட்டிகள் போன்ற பெட்டிகளிலடைத்தல், சிகரெட் போன்று மெல்லியதாகச் சுருட்டுதல், ஆதியன புதிய நுகர்வோரைக் கவரச் செய்யப்படுபவை. இவை வரவேற்கத் தக்க, தேவையான மாற்றங்களே.

இவற்றையெல்லாம் ஆராயும்போது, சுருட்டுக் கைத் தொழிலின் எதிர்காலம் மோசமானதாக மாறாது என்று நம்ப இடமுண்டு.

## வளர்ச்சிக்கான வழிகள்

யாழ்ப்பாணக் குடாநாட்டின் சுருட்டுக் கைத்தொழில் நன்கு வளர்ச்சியுற வேண்டுமானால், சில வழிவகைகளைப் பின்பற்ற வேண்டியதவசியமாகும்:

(அ) தொழிலாளரின் வாழ்க்கைத் தரமுயர, அவர்களுக்குரிய கூலி உயர்த்தலவசியம்; வாழ்க்கைச் செலவிற்கு ஏற்ப உயர வேண்டும். மாதம் முழுவதும் அவர்களுக்கு வேலை இருக்க வேண்டும். அத்தோடு அவர்களின் நலன் கருதி, ஒரு மாதாந்த சம்பள முறையை ஏற்படுத்தலாம்; திறமைக்கு முக்கியத்துவம் கொடுப்பது அவசியமே. அதனால், ஒரு மாதாந்த சம்பள விகிதத்தோடு, சுருட்டு மளவையும் அடிப்படையாகக் கொண்டு சம்பளம் கொடுத்தால், குறைந்தளவு சுருட்டுகின்றவொருவன் கணிசமான வருவாயைப் பெற முடியும்.

சுகவீனக் காரணமாக வேலை செய்யாத நிலைமை ஏற்பட்டால்கூட, அவன் சிறிதளவு வருவாயைப் பெற முடியும் உதாரணமாக, ஒரு தொழிலாளிக்கு மாதம் 50 ரூபா நிர்ணயிக்கப்பட்ட சம்பளம் என்று கொள்வோம் அவன் அம் மாதத்தில் 20,000 சுருட்டுகளைச் சுருட்டுகிறான், அதற்கு 1000 சுருட்டுகளுக்கு 10 ரூபா விதம், 20,000 சுருட்டுகளுக்கும் 200 ரூபா பெறுவதாகவும் கொண்டால், அவனது மாதாந்த வருமானம் 250 ரூபா ஆகும். அதே நேரத்தில் மாதாந்தம் 6000 சுருட்டுகளைச்சுருட்டுகின்ற ஒருவனின் இன்றைய வருமானம் 60 ரூபாவாகவுள்ளது. ஒரு தொழிலாளிக்கு மாதம் நிர்ணயிக்கப்பட்ட சம்பளம் 50 ரூபா எனக் கொண்டால், இன்று 60 ரூபா பெறுகின்ற அவன், 110 ரூபாவைச் சம்பளமாகப் பெற முடியும்.

(ஆ) தொழிலாளர்கள் ஒரே இயக்கமாக ஒன்றுசேர்வதவசியம்; வேலை மாற்றத்தை நோக்காது ஒன்றுசேர்ந்து தமது குறைகளை நிவர்த்திக்கப் போராடில், வேலை மாற்றம் அவசியமற்றதாகிவிடும் ஒரு தொழிலில் நிலைத்து வேலை செய்யும்போது சேமலாபநிதி போன்ற நல்ல விஷயங்களுக்குத் தொழிலாளர்கள் மறுப்புத் தெரிவிக்க மாட்டார்கள்.

(இ) தொழிலாளர்கள் மதுபானம் குடிப்பதையும், வீண் சண்டை சச்சரவுகளில் ஈடுபடுவதையும் நிறுத்தல் வேண்டும்.

(ஈ) 16 வயதுக்குட்பட்டவர்கள் இத்தொழிலில் ஈடுபடுதலைத் தடுக்க வேண்டும்; அப்போதுதான் அவர்கள் ஓரளவு கல்வியறிவாவது பெறமுடியும்; தொழிலாளரில் பலருக்குக் கையெழுதுப் போடத் தெரியாத நிலையும் மாறும்.

(உ) தொழிலாளர்கள் ஒன்றாக இணைவதுபோல, உற்பத்தியாளர்களும் ஒன்றுசேரல் வேண்டும். அவ்வாறு ஒன்றுசேர்ந்தால், நன்மை பல பயக்கும்; சந்தைகளில் ஏற்படுகின்ற போட்டிகளைத் தவிர்க்கலாம்; சுருட்டுக்களின் விலையை ஒரே விதமாக நிர்ணயிக்கலாம்; அத்தோடு பலவகையான சுருட்டுக்களை, ஓரிரு வர்த்தகச் சின்னங்களின் கீழ் சுருட்டி, விற்பனை செய்ய முடியும்; விளம்பரங்கள் மூலம் சந்தைகளையும் பெருக்க முடியும்.

(ஊ) உற்பத்தியாளர்கள் தொழிலாளரின் குறைகளைக் கவனித்தலவசியம். சம்பளத்தைக் கூட்டிக் கொடுக்க முயல்வதோடு, சுருட்டுக்கொட்டில்களின் சுகாதாரத்தையும் கவனிக்க வேண்டும். இலங்கையின் காலநிலைக்கு ஏற்றவை ஓலையால் வேய்ந்த, மண் கொட்டில்களே. அதனை விடுத்து தகரத்தினால் வேய்ந்த, சிமெந்துக் கொட்டில்களைக் கட்டுவது சிறந்ததல்ல.

(எ) உற்பத்தியாளர்கள் சேமலாப நிதியிலிருந்து தப்புவதற்காக 55 வயதிற்கு மேற்பட்ட வயோதிபர்களை வைத்துச் சுருட்டித் தொழிலாளர்களை ஏமாற்றுவதை முற்றாக நீக்க வேண்டும்.

(ஏ) பயனற்ற கழிவுப் புகையிலைச் 'சருகு'களையெல்லாம் வைத்துச் சுருட்டி விற்பதை நீக்கி நல்லதரமான புகையிலைகளைக் கொண்டு சுருட்டி விற்பதால், விற்பனையைப் பெருக்க முடியும்.

(ஐ) யாழ்ப்பாணக் குடா நாட்டில் பயனற்றுக் கிடக்கும் நிலங்களைத் திருத்தி, உள்நாட்டிலே புகையிலை உற்பத்தியை அதிகரிக்க வேண்டும்.

## விசாரணைக் குழு

(ஒ) இலங்கையின் பொருளாதார விருத்திக்காக, அரசாங்கத்தினால் பல திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன; அவ்வொரு திட்டங்களிலாவது, யாழ்ப்பாணக் குடாநாட்டின் சுருட்டுக் கைத் தொழிலை விருத்தி செய்வதற்காக எந்தவொரு வழிவகையும் கூறப்படவில்லை; இது மனம் வருந்தத் தக்கதொரு செயலே. இனிமேல் வகுக்கப்படும் திட்டங்களிலாவது சுருட்டுக் கைத்தொழிலின் விருத்திக்காக, கவனம் செலுத்தவேண்டும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் சுருட்டுக் கைத்தொழிலின் இன்றைய உண்மை நிலையை ஆராய ஒரு குழு நியமிக்கப்பட்டு, சுருட்டுக் கைத்தொழிலிலுள்ள குறைகள் நிவர்த்திக்கப்படல் வேண்டும்; யாழ்ப்பாணக் குடா நாட்டின் சுருட்டை வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்ய வழிவகைகளும் வகுக்கப்பட வேண்டும். அப்போதுதான் யாழ்ப்பாணக் குடாநாட்டின் சுருட்டுக் கைத்தொழிலின் எதிர்காலம் நம்பிக்கை வாய்ந்ததாக அமையும்.

(முற்றும்)


'சுதந்திரன்'
புதிய சந்தா விபரம்

| | |
|---|---|
| ஒரு வருடம் | ரூபா 14-00 |
| ஆறு மாதம் | ரூபா 7-50 |

நிர்வாகி
சுதந்திரன்



ஆனந்தா லேகியம்
இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.
நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தைப் பார்த்து வாங்குங்கள்
ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலசலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, கிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.
பெரியது ரூபா 5-75 சிறியது ரூபா 3-00
இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.
பெரியது ரூபா 5-75 சிறியது ரூபா 3-00
வி. பி. பி. செலவு வேறு.
தனிபோன்!
ஆனந்தா வைத்தியசாலை,
நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11

# சுதந்திரன்
SUTANTIRAN

1966 சனவரி மாதம் 20-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலை பேசி எண் - 3411 த. பெ. 1183


## புதிய திருப்பம்!

தமிழ் மொழியுரிமைச் சட்டவிதிகளை எதிர்த்து ஜனவரி 8-ந் திகதி வேலை நிறுத்தம் செய்யுமாறு எதிர்க்கட்சிகள் தொழிலாளர்களைத் தூண்டின. அவர்கள் எதிர்பார்த்தபடி வேலை நிறுத்தம் வெற்றிபெறவில்லை. அதன் விளைவு அவர்களின் ஆதிக்கத்திலுள்ள தொழிற் சங்கங்களில் பெரும் பிளவு ஏற்பட்டிருப்பதுதான். இந்தப் பிளவின் அடிப்படை என்ன? அதன் தன்மை யாது?

இந்த அடையாள வேலை நிறுத்தம் தொழிலாளர் வர்க்கம் முழுவதையும் பாதிக்கும் பொதுவான ஓர் அரசியற் கோரிக்கைக்காக நடத்தப்பட்ட அரசியல் வேலைநிறுத்தமல்ல. திரு. பண்டாரநாயக்காவின் ஆட்சிகாலத்தில் பொதுஜனப் பாதுகாப்புச் சட்டத்தை எதிர்த்து ஒரு பொது வேலை நிறுத்தம் நடைபெற்றது. அது முற்றிலும் ஓர் அரசியல் வேலைநிறுத்தமாக இருந்தது. ஜனவரி 8-ந் திகதி நடத்திய வேலைநிறுத்தம் அத்தகைய ஓர் அரசியல் வேலை நிறுத்தமன்று. இது வகுப்புவாதத் தன்மையைக் கொண்டது தமிழ் பேசும் மக்களுக்கு உரிமைகள் வழங்குவதைத் தடுப்பதற்காக நடத்தப்பட்ட ஒரு வேலை நிறுத்தம்.

எதிர்க் கட்சியினர் வேலைநிறுத்தம் செய்யும்படி தூண்டியது தங்கள் சங்கங்களின் சிங்கள உறுப்பினர்களை மட்டுமா? இல்லை—தமிழ்பேசும் மக்களுக்கு உரிமைகள் வழங்குவதை எதிர்த்து வேலை நிறுத்தம் செய்யும்படி தங்கள் சங்கங்களில் உறுப்பினர்களாயுள்ள தமிழ்பேசும் ஊழியர்களையும் தூண்டினார்கள். இதிற்தான் சிக்கல் ஏற்பட்டது. இதுதான் காரணம் அவர்களின் தொழிற்சங்கங்கள் பிளவுபடுவதற்கு.

வேறு சொற்களில் கூறின், தமிழ்பேசும் மக்கள்—சிங்களம்பேசும் மக்கள் என்ற மொழி அடிப்படையிலேயே அவர்களின் தொழிற்சங்கங்கள் இன்று பிளவுபடுகின்றன. அரசாங்க லிகிதர் சேவை சங்கத்திலிருந்தும், எதிர்க்கட்சிகளின் கட்டுப்பாட்டின் கீழுள்ள இதர தொழிற்சங்கங்களிலிருந்தும் இன்று வெளியேறுபவர்கள் அனைவரும் தமிழ்பேசும் ஊழியர்களாயிருப்பது கண்கூடு. சிங்களமொழியின் அடிப்படையில் செயலாற்றும் சங்கங்களில் தமிழ்பேசும் ஊழியர்கள் இனியும் உறுப்பினர்களாயிருப்பது சாத்தியமில்லை என்பதை அவர்கள் உணர்ந்துள்ளனர். ஆதலின் மொழியின் அடிப்படையிலேயே அவர்கள் அந்தச் சங்கங்களைக் கைவிடுகின்றனர்.

மொழியின் அடிப்படையிலே அவர்கள் வெளியேறியிருப்பதால் மொழிவழித் தொழிற்சங்கங்களிற் சேருவதைத்தவிர அவர்களுக்கு வேறு வழி கிடையாது. அநேகமாக எல்லாத் துறைகளிலும் தமிழ் மொழி அடிப்படையில் தொழிற்சங்கங்கள் இயங்கிக்கொண்டிருக்கின்றன என்பதை அவர்களுக்குச் சுட்டிக்காட்டுகின்றோம்.

தமிழ் பேசும் உழைப்பாளி மக்களுக்கு மற்றொரு விடயத்தையும் தெளிவுபடுத்த விரும்புகின்றோம். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் இந்நாட்டை அடிமைப்படுத்தி ஆட்சி புரிந்த காலத்தில், மொழிவழித் தொழிற் சங்கம் அவசியமில்லாதிருந்தது.

அன்று பொதுவான சிற்சில பொருளாதாரக் கோரிக்கைகளுக்காக சிங்களத் தொழிலாளர்களும், தமிழ்த் தொழிலாளர்களும் ஒரே சங்கத்தில் மொழி வேற்றுமையின்றி ஒன்று கூடியிருக்க கூடிய நிலைமை இருந்தது. அதற்கு இருகாரணங்கள் உண்டு ஒன்று இந்நாட்டில் தொழிற் சங்க இயக்கம் அன்று வளர்ச்சி பெறவில்லை. மற்றொன்று அன்று மொழிப் பிரச்சினையொன்று இருக்கவில்லை.

இன்றோ நிலைமை முற்றிலும் மாறுபட்டுள்ளது. நாட்டிலே தொழிற் சங்க இயக்கம் இன்று ஓரளவு வளர்ந்துள்ளது. உழைப்பின் மூலம் உயிர் வாழும் உழைப்பாளிகள் அனைவரும் ஏதோ ஒரு தொழிற் சங்கத்தில் உறுப்பினராயிருக்கின்றனர். இத் தொழிற் சங்க இயக்கத்திலே 1956க்குப் பின்னர் புதிய சகாப்தமொன்று உதயமாகியுள்ளது.

மொழிப் பிரச்சினை தோன்றியதும் அதன் தாக்கம் தொழிற் சங்கங்களையும் பாதித்தது. மொழிப் பிரச்சினை சிலருக்குக் கலாசாரப் பிரச்சினையாக இருப்பினும் உழைப்பாளர்களுக்கோ அது பொருளாதார—அரசியற் பிரச்சினையாகும். ஆகவே மொழி அடிப்படையில் தொழிற் சங்கங்கள் அமைக்கத் தொழிலாளர்களும் இதர ஊழியர்களும் முன்வந்தனர். அந்தத் துறையில் முதலில் தோன்றிய வழிகாட்டிய சங்கம் அரசாங்க எழுதுவினைஞர் சங்கமே. மொழிவழித் தொழிற் சங்கங்கள் சேவையை ஒட்டி சரியான சந்தர்ப்பத்தில் தோன்றியதால் அவை துரிதமாக வளர்ச்சியடையத் தொடங்கின.

சனவரி 8ந் திகதி அடையாள வேலை நிறுத்தம் மொழிவழித் தொழிற் சங்கத்தின் தேவையை தெளிவாக எடுத்துக் காட்டிவிட்டது. தொழிலாளர்கள் மொழிவாரியாகத் தொழிற் சங்கங்களை நிறுவிக்கொண்டால்தான் இனிமேல் தங்களின் உரிமைகளுக்காகப் போராட முடியுமென்ற உண்மையை இந்த அடையாள வேலை நிறுத்தம் ஐயப்பாட்டுக்கிடமின்றி நிரூபித்து விட்டது.

இயற்கை நியதிக்கேற்ப, சிங்கள இடதுசாரிகளால் நடத்தப்பட்டுவரும் தொழிற்சங்கங்கள் சிங்கள மொழிவழித் தொழிற் சங்கங்களாக மாறிவருகின்றன. அது இயற்கையே. அவர்களின் தொழிற் சங்கங்களில் எஞ்சியுள்ள தமிழ்த் தொழிலாளர்களும் வெளியேறிவிட்டால் (இப்பொழுது வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள்) அவை சிங்கள மொழிவழித் தொழிற்சங்கங்களாக மாறிவரும் அந்த மாற்றம் பூரணத்துவம் பெற்றுவிடும். அதன் நேரடி விளைவு தமிழ் மொழிவழித் தொழிற் சங்கங்கள் ஏற்படுவதே.

ஆகவே யார் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும்—தமிழ் மொழிவழித் தொழிற்சங்கங்கள் ஏற்பட்டே தீரும். முன்யோசனையுள்ள தொழிற்சங்கவாதிகள் ஏற்கனவே அத்தகைய சங்கங்களை நிறுவியிருப்பதால், சிங்கள மொழிவழித் தொழிற் சங்கங்களிலிருந்து வெளியேறும் தமிழ் பேசும் ஊழியர்கள் உடனடியாக தமிழ் மொழிவழித் தொழிற் சங்கங்களில் சேர்ந்துகொள்வது அவர்களின் தவிர்க்க முடியாத கடமையாகும். இது இலங்கைத் தொழிற்சங்க இயக்கத்தின் புதிய திருப்பமாதலின், அதற்கேற்ப அவர்கள் நடந்துகொள்ள வேண்டுமேயன்றி இனிமேலும் எதிர் நீச்சு நீந்த முயற்சி செய்யக்கூடாது.

# யாழ் நகர முதல்வர் தெரிவு தவறானதா?

யாழ்ப்பாண மாநகரசபை முதல்வராக திரு. எஸ். நாகராசா தெரிவு செய்யப்பட்டதையிட்டு பொன்னம்பலம் கட்சிப் பிரமுகர்கள் ஆங்காங்கே அதிருப்தி தெரிவித்து வருகிறார்களாம். இத் தேர்வை தமிழரசுக்கட்சிக்கு எதிராகப் பாவித்து அரசியல் லாபம் பெற முயல்வதே இவர்களின் நோக்கம் என்றும் தெரிகிறது.

திரு. நாகராசா அவர்கள் சமசமாசக் கட்சியைச் சேர்ந்தவர் என்றும், சமசமாசக் கட்சி தமிழ்பேசும் மக்களுக்கு எதிரான நோக்கங்களைக் கொண்ட இயக்கம் என்றும் இதனால் தமிழரசுக்கட்சியினர் திரு. நாகராசாவை நகர முதல்வராக்கியது தவறென்றும் இவர்கள் கூறுகிறார்களாம். இந்த ஞானோதயம் பொன்னம்பலம் கட்சியினருக்கு எப்பொழுது ஏற்பட்டது என்பது தெரியவில்லை.

தமிழரசுக்கட்சிக்கு பாதகமான செயல்களைச் செய்வதற்கும் சுயலாபம் பெறுவதற்கும் எந்தப் பிசாசையும் மணந்துகொள்ளத் தயாராக இருக்கும் பொன்னம்பலம் கட்சியினரா, இன்று திரு. நாகராசா நகர முதல்வராகத் தெரிவுசெய்யப்பட்டதையிட்டு விசனப்படுகிறார்கள்?

### கனவான் உடன்படிக்கை

தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த யாழ். நகரசபை உறுப்பினர்களுடன் கனவான் ஒப்பந்தம் செய்து கொண்டு முதலில் முதல்வர் பதவியை வகித்துவந்த பொன்னம்பலம் கட்சியினர் முடிவில் எப்படி நடந்து கொண்டார்கள் என்பதை யாழ். நகர வாக்காளர்கள் மட்டுமல்ல இந்த நாடே அறியும். கனவான் உடன்படிக்கையின் பிரகாரம் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த திரு. எஸ். சி. மாதேவா முதல்வரானதும் அவரைப் பதவியிலிருந்து இறக்க பல உபாயங்களைத் திரைமறைவில் செய்து வந்தார்கள் இக் கனவான்கள். ஈற்றில் தங்கள் முயற்சி தோல்வி கண்டதும் கனவான் உடன்படிக்கையை முறித்துவிட்டு தமிழரசு முதல்வருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்து முகத்தில் தாங்களாகவே கரி பூசிக்கொண்டனர்.

### இரகசிய முயற்சி

தமிழரசு முதல்வருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு திரு. நாகராசாவின் ஆதரவைப் பெறுவதற்காக பொன்னம்பலம் கட்சியினரும் அவர்களின் தலைவரும் தலைநகரில் எடுத்த முயற்சிகள் வாசகர்கள் அறிந்ததே. சுண்டியெடுத்த வகுப்புவாதிகளான சுதந்திரக்கட்சியினர் மூலம் சமசமாசக் கட்சித் தலைவரை நெருங்கி அவரிடமிருந்து திரு. நாகராசாவுக்கு கட்டளை அனுப்பும் வண்ணம் அவர்கள் கேட்டுக்கொண்டது நாடு அறிந்த உண்மை. அப்பொழுது ல. ச. ச. கட்சியும், திரு. நாகராசாவும் தமிழினத்திற்கு எதிரானவர்களாக பொ. கட்சியினருக்குப் படவில்லை.

### நம்பிக்கை இல்லாத் தீர்மானம்

இன்று தமிழரசுக்கட்சியினர் திரு. நாகராசாவை நகர முதல்வராக்கியிருக்கிறார்கள் என்றால் அது ல. ச. ச. கட்சி உறுப்பினர் என்ற முறையிலல்ல. அன்று, பொ. கட்சியினரும் சுதந்திரக் கட்சியின் ஆதரவாளரான

சுதந்திரன் அரசியல் நிருபர்

திரு. அல்பிரட் துரையப்பா குழுவினரும் கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் போது அவரை (திரு. நாகராசா) ஒரு சுயேட்சை உறுப்பினராகக் கருதி அவருடன் செய்துகொண்ட உடன்படிக்கையைக் கௌரவிக்கும் பொருட்டே திரு. நாகராசாவை இன்று நகர முதல்வராக்கியிருக்கிறார்கள் தமிழரசுக் கட்சியினர்.

திரு. நாகராசா அவர்களும் தன்னை ஒரு சமசமாஜவாதியாக என்றும் காட்டிக்கொள்ள முனையவில்லை அது மட்டுமன்றி அவர் முதல்வராகும்பொழுது சமசமாஜக் கட்சி உறுப்பவராக இருக்கவுமில்லை.

### கிளிநொச்சியில்

ஆனால் கடந்த மார்ச் திங்களின்போது கிளிநொச்சிக் கிராம சபையில் பொ. கட்சியினர் தங்கள் முழு ஆதரவையும் கொடுத்த திரு. ஆனந்தசங்கரி அவர்களைக் கிராம சபைத் தலைவராக்கியது ஏன்? திரு. ஆனந்தசங்கரி அவர்கள் சமசமாசக் கட்சியின் முக்கிய பிரமுகர் என்ற தகைமையை பெற்றவர். திரு. நாகராசா அவர்களோ சாதாரண உறுப்பினர்.

திரு. ஆனந்தசங்கரி அவர்களை எதிர்த்து நின்றவர் தமிழரசுக் கட்சிப் பிரமுகர். பொ. கட்சியினர் உண்மையில் தமிழ் உணர்வு விஞ்சியவர்கள் என்றால் அன்று கிளிநொச்சிக் கிராம சபையில் அப்படி நடந்திருக்கக்கூடாதல்லவா? அன்றும் சமசமாசக் கட்சியினர் வகுப்புவாதிகளாகவே இருந்தார்கள் என்பதை யாரும் மறந்திருக்க முடியாது. அதற்குச் சில தினங்களுக்கு முன்னரே, டாக்டர் பெரேரா அவர்களுக்கு கறுப்புக்கொடி காட்டத் தமிழரசார் முடிவு செய்திருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### காகேசன்துறையில்

இன்று காங்கேசன்துறைப் பட்டினசபையில் நடந்திருப்பது என்ன? தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவருக்கு எதிராக பொன்னம்பலம்கட்சிப் பிரமுகர் கம்யூனிஸ்டுக்கட்சியின் (பீக்கிங்) ஆதரவுடன் தலைவர் தேர்தலுக்கு நின்றார். இது எந்த அடிப்படையில் நடைபெற்றது? இதில் பொ. கட்சியினரின் தமிழுணர்ச்சி எங்கே போய்விட்டது?

கம்யூனிஸ்டுக் கட்சியினர் (பீக்கிங்) சனநாயகத்தின் விரோதிகள். பாரதநாட்டின் மீது ஆக்கிரமிப்பு நடாத்திய சீனாவின் ஈழத்து ஏஜண்டுகள். தேசிய அரசாங்கத்தின் பகைவர்களும்கூட. இவர்களின் ஆதரவுடன் தேசிய அரசாங்கத்தின் மற்றொரு கட்சி வேட்பாளரான தமிழரசுக்கட்சி வேட்பாளரை பொ. கட்சியினர் எதிர்த்துள்ளார்கள்.

இவர்கள்தான் இன்று யாழ். நகரசபையில் திரு. எஸ். நாகராசாவை தமிழரசுக்கட்சி முதல்வராக்கியது தவறு என்று வாதிடுபவர்கள்.

கண்ணாடி வீட்டில் இருப்பவர்கள் கல் எறியக்கூடாது என்பது முதுமொழி. பொ. கட்சியினர் தங்களுக்குள் ஆயிரக் கணக்கான தவறுகளை வைத்துக்கொண்டு நேர்வழியில் உண்மை, நீதி என்பனவற்றைத் தாரக மந்திரமாகக்கொண்டு செயற்படும் தமிழரசுக் கட்சிமீது தவறு கண்டுபிடிக்க முயல்வது அவர்களுக்கே ஆபத்தானதாகும்.

தேசிய அரசாங்கத்தில் ஒன்றுபட்டிருப்பவர்கள், வெளியில ஒற்றுமையாக நிற்க முடியாவிட்டாலும் — ஒருவரையொருவர் தூற்றிக் கொள்ளாமல் இருந்தால் அது நாட்டுக்கும் அவர்களுக்கும் நல்லது. இந்த உண்மையை—பொறுப்பை பொ. கட்சியினர் உணர்வார்கள் என்று நம்புகிறோம்.

## ஆங்கிலத்திற்கு...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கு மாகாணங்களில் தமிழ்மொழி உபயோகத்துக்காக விசேட நிர்வாக விதிகளைக் கொண்டு வர இடமளிக்கிறது. அந்தச் சரத்தின் கீழ்தான் தற்போதைய சட்டவிதிகள் கொண்டுவரப்பட்டுள்ளன. ஏழாவது சரத்தின்படி விசேடவிதிகள் சிங்களமொழிச் சட்டத்துக்கு உட்பட்டு அமுல்நடத்தப்படுமென்பது.

### ஜனநாயகத்துக்கு மாறானதன்று

அவசரகாலச் சட்டம் அமுலில் இருக்கும்போது இந்த மசோதாவைக்கொண்டுவருவது தவறு என்று கூறியவர்களுக்குப் பதிலளிக்கும்போது திரு. பண்டாரநாயக்கா கூறியதாவது:-

அவசரகாலச் சட்டத்தின் கீழ் ஒரு மசோதாவைப்பாராளுமன்றத்தில் கொண்டுவருவது ஜனநாயகத்துக்கு மாறானதன்று. அரசாங்கத்தை நிர்ப்பந்திப்பதோ, அரசாங்கத்துக்கெதிராக காடையர் பலத்தைக் காட்டுவதோ சரியன்று. பாராளுமன்றத்துக்குக் கொண்டுவரப்படும் எந்த ஒரு மசோதாவை யாராவது எதிர்க்கிறார்களென்றால், மீண்டும்பொதுத் தேர்தல் நடக்கும்போது பொதுமக்களுக்கு விஷயங்களை விளக்கிக்கூறி, பொது மக்களின் நல்லெண்ணத்தைப் பெற்று, அதன்மூலம் அரசாங்கத்தைத் தோற்

(9-ம் பக்கம் பார்க்க)

# தமிழ் மொழிக்குத் தனிப் பிரிவு




**சனவரி 5 புதன்கிழமை**

சனவரி 8ம் நாள் பாராளுமன்றத்தில் தமிழ் மொழி மசோதா சமர்ப்பிக்கப்படும்போது, நாட்டில் குழப்பம் ஏற்படாமல் தடுக்க கொழும்பு நகரில் ஊர்வலம், ஆர்ப்பாட்டங்களுக்கு அரசாங்கம் தடை விதித்தது.

கண்டி போகம்பரை மைதானத்தில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில், டாக்டர் என்.எம். பெரேரா பேசுகையில், தான் இப்போது சம அந்தஸ்து கொள்கையை கைவிட்டு விட்டதாகவும் சுதந்திரக் கட்சியின் மொழிக் கொள்கையையேற்று விட்டதாகவும் கூறினர்.

**சனவரி 6 வியாழக்கிழமை**

கூட்டத்தை மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அரசாங்கம் அறிவித்தது. பொலீஸ், ராணுவத்தினரின் லீவுகள் ரத்து செய்யப்பட்டன. வாழைத்தோட்டத்தில் பேசிய பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா பெரும்பான்மையினர் சிறுபான்மையினர் உரிமைகளை மதித்து நடக்க வேண்டும் எனக் கூறினர். சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த நிவித்திகல பிரதிநிதி டி. எப். கெட்டியாராய்ச்சி, தமிழர் சிங்களமும் சிங்களவர் தமிழும் படித்தால் பிரச்சினை தீர்ந்துவிடுமெனக் கூறினர். தமிழ் மொழிக்கு சம அந்தஸ்து கொடுத்தாலன்றி மொழிப் பிரச்சினை தீராது என திரு. எட்மண்ட் சமரக்கொடியின் அறிக்கையொன்று கூறிற்று.

**சனவரி 7 வெள்ளிக்கிழமை**

தமிழ் மொழி மசோதாவை திட்டமிட்டபடி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க அமைச்சரவை இறுதி முடிவு செய்தது. தமிழ் மொழி மசோதாவை எதிர்த்து எதிர்க் கட்சியினரின் வேலை நிறுத்த கோரிக்கையை, மிகப் பெரிய தொழிற் சங்கங்கள் நிராகரித்தன. டாஷ்கென்ட் மாநாட்டில் 'காஷ்மீர்' பிரச்சினையினால் ஏற்பட்ட முட்டுக்கட்டையை, தீர்த்து வைக்க சோவியத் பிரதமர் முயற்சியெடுத்துக் கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

**சனவரி 8 சனிக்கிழமை**

தமிழ் மொழி மசோதா திட்டமிட்டபடி நிறைவேறும் என அரசாங்கம் நம்பிக்கை தெரிவித்தது. அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில், அ. லி. சங்கத்தை விட்டு தமிழ் லிகிதர்களை வெளியேறும்படி கேட்டுள்ளது. வட பகுதி ஆசிரியர் இடமாற்றம் பற்றி விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்க கல்வி அமைச்சர் ஒரு குழு அமைத்துள்ளார். நகரில் பொலீசார் பலத்த பந்தோபஸ்து நடவடிக்கை எடுத்திருந்தார்கள்.

**சனவரி 9 ஞாயிற்றுக்கிழமை**

தமிழ் மொழி மசோதா நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அதற்கு முன்னர் கொள்ளுப்பிட்டியிலும், நகரத்தின் வேறு சில இடங்களிலும் கலவரங்கள் எதிர்க் கட்சியின் ஆதரவாளர்களால் ஏற்படுத்தப்பட்டன. அரசாங்கம் நேற்று இரவு முதல் அவசரகால நிலையைப் பிரகடனம் செய்தது. கொழும்பிலும் சுற்றுப் புறங்களிலும், ஊரடங்குச் சட்டம் அமுலாக்கியது. பத்திரிகைத் தணிக்கை நடைமுறைக்கு வந்தது. திருமதி குசுமா ராஜரத்தினு எதிர்க் கட்சியில் சேர்ந்தார். பாராளுமன்றத்தில் பிரதமர் பேசுகையில், காடைத்தனத்தைக் கண்டு பயப்படப் போவதில்லையெனவும், எந்த நிலைமையையும் சமாளிக்க அரசாங்கம் தயார் எனவும் கூறினர்.

**சனவரி 10 திங்கட்கிழமை**

பாராளுமன்றத்தில் தமிழ் மொழி மசோதாவை தொடர்ந்து விவாதிக்க பெரும்பான்மை அங்கத்தவர்கள் ஆதரவு தெரிவித்தனர். கொழும்பில் இன்று சகஜ நிலைமை ஏற்பட்டு விட்டதாக அறிவிக்கப்பட்டது. சனவரி 8ந் திகதி வேலை நிறுத்தம் செய்தவர்கள்மீது மிகக் கடுமையான நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முடிவுசெய்துள்ளது. அ. லி. சங்க யாழ்ப்பாணக் கிளையிலிருந்து, 29 பேர் விலகினர். யாழ். புதிய மேயர் திரு. எஸ். நாகராசா, தாம் சமசமாஜக் கட்சியை விட்டு விலகிவிட்டதாக அறிவித்தார். டாஷ்கண்ட் மாநாடு மிகச் சிக்கலான நிலையை அடைந்தது.

**சனவரி 11 செவ்வாய்க்கிழமை**

கொழும்பு மாவட்டத்தில், நேற்று இரவு முதல் ஊரடங்குச் சட்ட நேரம் அதிகரிக்கப்பட்டது. தமிழ் மசோதா மீது இன்று வாக்கெடுப்பு நடைபெறும். தலைவன்னர் புன்னைவேண்டி மாகோவுக்கு அருகாமையில் நடம் புரண்டது. பாரதப் பிரதமர் திரு. லால் பகதூர் சாஸ்திரி, டாஷ்கண்ட் ஒப்பந்தத்தில் கைமொழுத்திட்ட பின்பு, மாரடைப்பு நோயினால் காலமானார். தற்காலிக பாரதப் பிரதமராக திரு. நந்தா பொறுப்பேற்றுக் கொண்டார்.

**சனவரி 12 புதன்கிழமை**

தமிழ் மொழி மசோதா பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும், பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. சாஸ்திரி மரணம் குறித்து பிரதமர் டட்லி விடுத்த அனுதாபச் செய்தியில் 'சாஸ்திரி இலங்கையின் உண்மை நண்பர்' என்று கூறினர். அண்மையில் பெய்த பெரு மழையில் பாதிக்கப்பட்ட மூலாயிலுள்ள மீனவர் குடும்பங்களை கோப்பாய பிரதிநிதி திரு சி. கதிரவேற்பிள்ளை சந்தித்து, உடனடி நிவாரணம் வழங்கத் தான முயற்சி எடுப்பதாக உறுதி கூறினர்.

## ஆங்கிலத்திற்கு...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

கடித்து அந்தக் கட்சிவெற்றி பெறலாம்.

## அமுல் அல்லது இரத்து

மொழிகள்பற்றி இரு சட்டங்கள் சட்டப் புத்தகத்தில் உண்டு. 1956ம் வருட சட்டத்தின்படி சிங்களம் உத்தியோக மொழியாக வேண்டும். 1958ம் வருடத் தமிழ் மொழி விசேட சட்டத்தின்படி தமிழுக்கு நியாயமான அந்தஸ்து அளிக்கப்பட வேண்டும். ஆகவே நமது பழைய கொள்கை எதுவாக இருந்தாலும், நமது கட்சிகளின் கொள்கை எப்படியிருந்தாலும் நாம் இந்தச் சட்டங்களை அமுல் நடத்த வேண்டும். இல்லையேல் இரத்துச் செய்து விடவேண்டும். எந்தப் பாராளுமன்றப்பிரதிநிதியாவது இதில் எந்தச்சட்டத்தையும் இரத்துச்செய்யும்படி கோருவார் என்று நான் நினைக்கவில்லை. அப்படி யாராவது சொல்லாவிட்டால் இச் சட்டங்களை அமுல் நடத்தவேண்டும்.

1958ம் வருடச் சட்டம் சிங்களம் படும் சட்டத்துக்கு ஊறு விளைவிக்கக்கூடியதெனக் கருதும் ஒருவர் 1958ம் வருடச் சட்டத்தை இரத்துச் செய்யும்படி கேட்கலாம். அதனை இரத்துச் செய்து, வட்டமேசை மாநாடொன்றைக் கூட்ட வேண்டியது ஏற்பட்டால், அது எங்கு ஆரம்பமாகி, எங்கே போய் முடியுமென்று கூறுவதற்கில்லை. இதுபற்றி எங்களின் கருத்தை அரியணை உரையில் குறிப்பிட்டுள்ளோம்.

வட, கிழக்கு மாகாணங்களில் எல்லா அரசாங்க அலுவல்களும், பொதுமக்களின் அலுவல்களும் தமிழிலும் சிங்களத்திலும் நடைபெறும். மற்ற மாகாணங்களில் சிங்களத்தில் மட்டுமே நடைபெறும். ஏழு மாகாணங்களில் சிங்களம் மட்டுமே என்பதை மறந்துவிடாதீர்கள்.

அரசாங்க தஸ்தாவேஜுகள் சிங்களத்திலும் தமிழிலும் எழுதப்படும். அரசாங்க இலாகா ஒன்றுடன் நீங்கள் தமிழிலும் சிங்களத்திலும் தொடர்பு கொண்டால் தஸ்தாவேஜுகளும் அதே மொழிகளில் தான் எழுதப்படும். அதாவது:

கல்வி இலாகா ஒரு தமிழ் எதிர்யையும் தமிழ் சாட்சிகளையும் கொண்ட ஒரு புகாரை விசாரணை செய்ததென்றால், சாட்சியம் தமிழில் எழுதப்படும். ஒரு சிங்கள மொழிபெயர்ப்பும் அத்துடன் வைக்கப்படும். இரு மொழிகளிலும் அந்த தஸ்தாவேஜுகள் எழுதப்படும். அதன் குறிப்புகள் கொழும்பிலுள்ள கல்வி இலாகா தலைமை அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்படும். இங்கு உத்தியோகத்தர்களுக்கு சிங்களம் மட்டுமே தெரியும் அவர்கள் தஸ்தாவேஜுகளைச் சிங்களத்தில் வைத்திருப்பர் தமிழ் பேசும் மக்களின் உபயோகத்துக்காக அங்கே தஸ்தாவேஜுகள் தமிழில் வைத்திருப்பர். அதாவது வட, கிழக்குமாகாணங்களில் அரசாங்கத் தஸ்தாவேஜுகள் தமிழிலும், ஏனைய மாகாணங்களில் சிங்களத்திலும் வைக்கப்படும்.

தமிழிலே நிர்வாகம் நடத்தும் உள்ளூராட்சி மன்றங்கள் தமிழிலேயே எழுதமுடியும். தமிழ்மூலமே பதில் கிடைக்கும். ஒரு சிங்கள நகலும் வைக்கப்படும். உதாரணமாக மட்டக்களப்பு நகரசபை தமிழில் நிர்வாகம் நடத்துவதென முடிவுசெய்தால் தமிழில் நடத்தலாம். அந்த நகரசபை கொழும்பு அரசாங்க அதிபருக்கு தமிழிலே கடிதம் எழுதலாம். அதற்குத் தமிழிலே பதில் கிடைக்கும். ஒரு சிங்கள நகலையும் அனுப்ப முடியும். இந்த முறையில் என்ன தவறு இருக்கிறது?

## மத்திய வங்கியில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யைத் தமிழ் மொழியிலும் நடத்த நிர்வாகம் சம்மதித்துள்ளது. தமிழ் மொழிப் பயிற்சி பெறுவதற்கு போதியளவு தமிழ் ஊழியர்கள் முன்வரவில்லையென்று இப்பொழுது கூறப்படுகிறதாம். தமிழ் மொழி பயிற்சி பெற விரும்புபவர்கள் தங்கள் முடிவை உடன் மத்திய வங்கித் தமிழ் ஊழியர் சங்கச் செயலாளருக்குத் தெரிவிக்கும் வண்ணம் வேண்டப்பட்டுள்ளார்கள்.

தலைநகருக்கு வெளியில் உள்ளவர்களுக்கு தபால் மூலமும் பயிற்சி கொடுக்கப்படுமாம்.

## மொழித் திணைக்களத்தில் நிறுவப்படுமாம்

அரச கருமமும் மொழித் திணைக்களத்தில் தமிழுக்கென்று தனியான ஒரு பகுதி அடுத்த திங்களிலிருந்து செயற்படவிருக்கிறதாம். 1956-ம் ஆண்டு சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேற்றப்பட்டது முதல் அரசகரும மொழியான சிங்கள மொழித் திணைக்களமாக இயங்கிவந்த இத்திணைக்களத்தில் இப்பொழுது தமிழ் மொழிச் சட்டம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து தமிழுக்கும் தனிப் பிரிவு அமைக்கப்பட விருக்கிறது.

தமிழ் பிரிவுக்குத் தனியாக ஒரு தலைவர் (ஆணையாளர்) நியமிக்கப்படுவார் என்றும், அவரின் மேற்பார்வையின் கீழேயே இனித் தமிழ் மொழி பெயர்ப்புகள் அனைத்தும் நடைபெறும் என்றும் தெரிகிறது. தமிழுக்குத் தனியான பிரிவு அமைக்கப் படுவதைத் தொடர்ந்து நீண்ட காலமாக மொழி பெயர்க்கப்படாது இருந்து வந்த முக்கியமான பிற மொழி நூல்கள் எல்லாம் தமிழில் மொழி பெயர்க்கப்படுமென்று நம்பமுடிகிறது.

தமிழ் மொழிச் சட்டவிதிகள் முழு அளவில் பூரணமாக அமுல் நடாத்த இப் பிரிவு மிகமுக்கியமானது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழுக்குத் தனியான பிரிவு நியமிக்கப்படும் இந்நேரத்தில் இலங்கை மத்திய வங்கியில் அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட தமிழ்ப்பகுதியை சிங்கள மொழிப் பிரிவின்கீழ் ஒன்றுபடுத்தும் முயற்சி ஒன்று எடுக்கப்படுவதாகத் தெரிகிறது. இந்த முயற்சிக்கு வங்கித் தமிழ் ஊழியர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்களாம்.


# மினர்வா

## இப்பொழுது

இலகுவான தவணைக் கட்டண அடிப்படையில் உங்களுக்கு வழங்கப்படுகிறது.




★ நூதனமான எழில், அற்புதமான கிரியாம்சை
★ அச்சொட்டான அமைப்பு,
★ 3 லாச்சு கொண்ட கபினெட்

கிடைக்குமிடங்கள்:

**குருண்டிக் காட்சிச்சாலை**
வை. எம். பி. ஏ. கட்டிடம்,
கோட்டை, கொழும்பு.

**சென்ற். அந்தனீஸ் ஹார்ட்வெயர் ஸ்டோர்ஸ் லிமிட்.,**
516, ஸ்கின்னர்ஸ் ரோட் தெற்கு, கொழும்பு.
தொலைபேசி: 4261, 4262, 4263.

இளைஞர் கூட்டத்தின் தடம் புரண்ட மனவியல்பை ரசீத் பிரதி பலிக்க—
ஹாமிது முதலாளி இவனை வேண்டாமென்று கூற—
இவன் அவளை வேண்டாமென்கிறான்.
பாவம்!



# வேண்டாமை

## மருதூர் வாணன்

மாலை நேரம். கண்கடை மங்கிய தாய்க் கலங்கிய கண்களைத் துடைத்துக் கொண்டு மக்காமடிக்கிற வல் ரோட்டினால் நடந்து கொண்டிருந்தான் அப்துல் றசீத். 'மக்ரிப்' நேரம். தொழுகை பள்ளியில் மூஅத்தின் பாங்கு சொல்லிக் கொண்டிருந்தார். அந்த பாங்கொலி றசீதின் செவிப் பறைகளில் விழவே இல்லை. அவ்வளவு கவலை அவனுக்கு தன் மனச்சுமையை யாரிடம் கொட்டித் தீர்த்து விடலாம், என்ற ஆலாபனத்தோடு தொழுகைப்பள்ளிஒழுங்கையினால் சென்று கொண்டிருக்கும் போதுதான் அப்துல் மஜீத் ஆசிரியரின் நினைப்பு றசீதுக்கு வந்திருக்க வேண்டும். நேராகவே மஜீதாசிரியரின் வீட்டுக்குக்குச் சென்றான்.

மஜீதாசிரியர் 'மக்ரிப்' தொழுகைக்காகப் பல்துலக்கிக் கொண்டு நின்றார். அப்துல் றசீத் எதையோ பறிகொடுத்து விட்டு வருபவனைப்போல வந்து கொண்டிருப்பதைக் கண்டார்.

'வாங்க மச்சினன் வாங்க. இப்பிடி நாற்காலில உக்காருங்க' என்றதும் மௌனமாக உட்கார்ந்திருந்தான் றசீத்.

'விசயத்தை எப்படி ஆரம்பிப்பது.' என்று யூகித்துக் கொண்டிருக்கும் போது மஜீதாசிரியரே முந்திக் கொண்டார். என்ன மச்சினன் பெரிய யோசனையா வந்திரிக்கியள்?

'நான் நினைச்ச தெல்லாம் மண்ணாப் போச்சி மச்சான்' என்று ஒரு பெருமூச்சு விட்டான்.

அப்துல் றசீது சொன்னவை என்னவென்று விளங்காமல் மலைத்துப் போய் நின்றார் ஆசிரியர்.

அப்துல் றசீதும் அப்துல் மஜீதும் இணைபிரியாத நண்பர்கள். சிறுவயசு தொடக்கம் ஒன்றாகப் பழகியவர்கள். ஒரு பாடசாலையிலேயே ஒன்றாகப் படித்தவர்கள். அப்துல் மஜீத் எஸ். எஸ். ஸி. பரீட்சையில் சித்தியடைந்துவிட்டார். முறையே, அட்டாளைச் சேனைக்குச் சென்று அரைச்சம்பளத்தில் மூன்று வருடம் பயிற்றப்பட்ட தனது கிராமத்திலேயே ஆசிரியராகக் கடமையாற்றுகின்றார்.

மட்டக்களப்புப் பகுதிகளில்—குறிப்பாக மருதமுனைக் கிராமத்தில், ஒரு பெண்ணுக்கு ஒரு மாப்பிள்ளை வரன் பேசுவதென்றால்— தேடுவதென்றால் பெரும்பாலும்வாத்திமாப்பிள்ளையைத்தான் விரும்புவார்கள். ஆயிரம் இரண்டாயிரம் ரூபாய்களைக் கைக்கூலி கொடுப்பதோடு, சீதனமாகக் காணி, பூமி, ஆடு, மாடு, தோட்டந்தோரவுகள் என்றெல்லாம், நிறையச் சொத்துக்கள் கிடைத்தால்த்தான் மாப்பிள்ளை விரும்புவர் அப்படிக் கைக்கூலியும் சீதனமும் வாரி வாரிக் கொடுத்து வாத்தி மாப்பிள்ளைகளை வாங்கியும் விடுவார்கள்.

மூவாயிரம் ரூபாய் கைக்கூலியும் ஆடுமாடு காணி பூமி தோட்டந்தொரவெல்லாம் வாங்கிக் கொண்டுதான் அப்துல் மஜீதாசிரியர் கல்யாணம் முடித்து விட்டு, இப்ப செல்வந்தராக இருக்கின்றார்.

'என்னோடு படித்தவன் முன்னேறி விட்டானே' என்ற பொருமை அப்துல் றசீதிற்கும் கடுகளவேனும் இல்லை. 'என் கூட்டாளி நல்லா இருந்தால் எனக்கும் நல்லம்.' அப்துல் மஜீதாசிரியரை விட நானும் ஒரு காலத்துக்குநல்ல நிலைமையில் வாழலாம்' என்று சில சமயங்களில் றசீத் நினைப்பதுமுண்டு.

பாடசாலையில் எஸ் எஸ் ஸி படிக்கும் காலத்திலிருந்து ஹாமீது முதலாளியின் மகள் தாஜிதாவைக் காதலித்துவந்தான் றசீத். அவளும் அவனை விரும்பினாள். கைமேல்ச் சத்தியமும் செய்து கொடுத்திருந்தாள். அவளின் தாய் தந்தையர்களும் விரும்பினார்கள் றசீதிற்கு உதவி செய்வாரில்லை. தந்தையில்லை. தாயிருந்தாள். தமையனில்லை தம்பி தங்கைகளிருந்தார்கள். பீடிசுத்தி உழைத்துக் கொண்டு படித்து வந்தான். பாடசாலைக்குப் போகு முன்னும்—பாடசாலை விட்டு வந்தும் பீடித் தொழில் செய்துதான் தாய் தங்கை தம்பிகளைக் காப்பாற்ற வேண்டும். இந்தக் கஸ்டமான நிலையில் பரீட்சையில் சித்தி பெற முடியவில்லை. பரீட்சையில் தோல்வியுற்ற சங்கதியைக் கேள்விப்பட்டு ஹாமீது முதலாளியும் மகள் ராஜிதாவும்—அப்துல் றசீதைக் கல்யாணம் முடிக்க விரும்பவில்லை. என்பது அவர்களின் மனதிற்குள் இருப்பினும்' புள்ள படிச்சி முடியட்டுமே.' என்று சாட்டுப் பேசச்குச் சொல்லிக் கொண்டுவந்தனர். 'என்ன வந்தாலும் றசீதுப் பொடியனைத்தான் என்ர புள்ளைக்கிக் கலியாணம் முடிச்சிக் குடுப்பன்' என்று தாஜிதாவின் தாய் தங்கச்சியும்மா அடிக்கடி சொல்லிக் கொண்டு வந்தாள். அதுவும் ஒருதந்திரந்தான்,

அபின் குடித்துக்குடித்து. இருந்த இல்லிடத்தையும் அடைவு வைத்துவிட்டுக் கெட்டு விட்டார் ஹாமீது முதலாளி. வைத்திருந்த கார்களையும் ஒவ்வொன்றாகவிற்று அபின் கரைத்து விட்டார். இந்தக் கட்டத்தில் மகளுக்கு ஒரு வாத்தி மாப்பிள்ளையும் வேண்டி இருக்கிறதா?

'ரெண்டாயிரம் மூவாயிரம் ரூவாக் கைக்கூலியும், கல்லூடு வளவு காணி பூமியெல்லாம் வாத்தி மாப்புளையளுக்குக் குடுக்க எங்கடெகெட்ட ஏது காம்மா' என்று கதை வந்த திக்கெல்லாம் கூறினாள் தங்கச்சியும்மா. எல்லாவற்றையும் காதில் வாங்கிக் கொண்டு பூனைத் தூக்கத்தில் கிடந்தார் ஹாமீது முதலாளி. இந்த நிலைமையிலும் அந்த அபின் குடிகாரனை எல்லோரும் முதலாளி என்பதில் என்னே லாபம்?

> **அடுத்த இதழில்**
> **(28-1-66)**
> வ. அ. இராசரத்தினம்
> எழுதும்
> **'சரிவு'**
> என்னும் சிறுகதை
> வெளியாகும்.

'ஆயிரம் ரெண்டாயிரம் கைக்கூலி வேணும். கல்லூடு வளவு காணி பூமியொன்டும் வேணும். என்னால ஏன்ட. மட்டும் எல்லாத்தையும் தேடி வெச்சிரிக்கன். தாஜிதாவைச் சின்ன வயசிலேயே கலியாணம் முடிக்க வேணும் என ஆசை வெச்சி வாறன். அவளும் என்ர கையில சத்தியஞ் செஞ்சி தந்திரிக்கி பொடிச்சி. அந்த ஒரு அன்புக்காகத்தான் தாஜிதாவை மட்டும் கலியாணம் முடிக்கக் கேக்கன்' என்று பலருடனும் பல தடவையில் அடித்துக்கூறி இருந்தான்'

அப்துல் மஜீதாசிரியரிடமும் கூறி ஹாமீது முதலாளியிடம் சம்மதங் கேட்டு விட்டு வரும்படி ஒருநாள் கூறிவிட்டான் றசீத்.

தாஜிதாவின் தந்தையோடு நண்பனுக்காகவா தாடினார். ஹாமீது முதலாளிகு அப்துல் றசீதை தன்மகளுக்குக்கலியாணம் முடித்து வைக்கச் சம்மதமே இல்லை. அந்த விசயத்தைச் சொல்வதற்காகறசீதைச் சந்திக்க வேணுமென்றுதான் ஆசிரியரும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். இன்று றசீதே வந்து விட்டான். ஆனால் அவன் சொன்னதைக் கேட்ட மட்டில் ஆசிரியர் விளங்காத புதிராக இருந்தார். 'என்ன இவன் சொன்னதின் பொருள்?'

இன்று சனசமூக நிலையத்தில் பத்திரிகை படிப்பதற்காகச் சென்றிருந்தான் றசீத். அங்கு குழுமி இருந்தவர்கள் ஹாமீது முதலாளியின் மகள் தாஜிதாவைப் பற்றிக் கிழ்த்தரமாகப் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டுப் புழுவாயத் துடிதுடித்தான். சனசமூக நிலயததுள் இருக்கவே மனமில்லாமல்—இந்தச் செய்திகளை அப்துல் மஜீதாசிரியரிடம் சொல்லித் தன் மனச்சுமையை அகற்றவேண்டி வந்தான் றசீத்.

'இவள் இப்பிடிச் செய்வாளென்று நான் ஒரு நாளும் நினைக்கெல்ல மச்சான்' என்று மனவருத்தத்துடன் ஆசிரியரிடம் கூறினான்.

'என்ன மச்சினன் செய்தி? யாரவள்—? நாமரெண்டு பேருந்தானே இஞ்சே இரிக்கம். கொஞ்சம விளக்கச் சொல்லுங்களன்?'

'சே, சொல்ல வெக்கமாரிக்கி. தாஜிதாட கள்ளக் காதல் இண்டக்கிப் பாடசாலையில வெச்சிப் புடிபட்டுப் போச்சி. அவளைப் பாடசாலைக்கி வரவேணுமேன்டுட்டாளாம் ஹெட்டீச்சர். கடிதம் எழுதினவன்ர பேரச் சொல்லல்லையாம் டீச்சர்'

'மெய்தானா??? ஊம். அது சரி. யாரோ அவளுக்குக் காதல் கடிதம் எழுதினுப் போல அவள்ள கற்புக் கெட்டிடுமா மச்சினன்?'

'கெடாம என்ன செய்யும்? அந்தக்கடிதத்தில எழுதினவன் அவளுக்கு முத்தங் குடுத்த கதை—போட்டோ எடுத்த கதையெல்லா மிரிக்காமே? இப்பிடியெல்லாம் நடந்துக்கிட்டவளை நான் ஒரு வேளை கலியாணம் முடிச்சாலும் அவள் இப்பிடித்தானே நடப்பாள்? நடக்கமாட்டாளென்டு எப்பிடிச் சொல்லலாம்? நல்ல காலம் எனக்கு — இந்தச் செய்தி கெடச்சது. ஹாமீது முதலாளி ஆயிரமாயிரம் தங்கப் பவுனுகள அள்ளிக் கொண்டாந்து என்ரகாலடியகுவிச்சாலும் அவர்ர மகள் நடத்தகெட்டவள் இனி எனக்கு வேணுமென்டு அவங்கட ஆக்களோட சொல்லிப் போட்டுடுங்க மச்சான்' என்று வெறுத்து வேம்பாகக் கூறினான் றசீத்.

'அப்துல் றசீதின் நிலைமையைப் பார்த்தா அழுவதா சிரிப்பதா' என்று அப்துல் மஜீதாசிரியருக்குத் தோன்றவே இல்லை. ஹாமீது முதலாளி ஏற்கனவே இவனை வேண்டாமென்டு சொல்லி விட்டார். தாஜிதாவைத்தான் முடிக்கப் போவதாக ஒருப்பிடியாக நின்றான். இப்போது தாஜிதாவைப் பற்றிய இழிவான செய்திகளை அறிந்து தனது வேண்டாமையைக் கூறிவிட்டானே? இவனுடன் நாம் அதைச் சொல்லவே வேண்டாம்.' என்ற சிந்தனையில் மூழ்கிக் கொண்டிருந்தார் ஆசிரியர்.

'மச்சான், என்ர தலை ஒரமா வலிக்கிது. நான் ஊட்ட போய் வாறன் மச்சான்' என்று நாற்காலியை விட்டு எழுநதான் றசீத்.

'உம்—போகவா மச்சினன்? நீங்க வந்த விசயம்?, இந்தச் செய்தியச் சொல்லத்தான் வந்தயளோ இல்லை ...?' என்று சாட்டுக்காகக் கேட்டார்,

'ஹாமீது முதலாளிக்கிட்ட முடிவு கேட்டுப் போன நீங்க என்னிட்ட விபரஞ் சொல்லுறத்துக்கு முன்னேயே, அவளப்பத்தி இந்தக் கீழிசாதிப் பேச்சிக் கேட்ட மாத்திரத்திலேயே அவளை இனி வேணுமென்டு சொல்லிற்றுப் போகத்தான் உங்களத் தேடி வந்தன். விசயத்தச் சொல்லிற்றன். ஹாமீது முதலாளி தாஜிதா வெல்லாம் ஒங்கட ஆக்களௌலவா, அதனாலதான் ஒங்களுகிட்டச் சொன்னன். ஆனால், தாஜிதா என்னை ஏமாத்துவாளென்டு அந்த நேரத்திலேயே தெரிஞ்சிரிந்தா, நான் ஒரு சதமும் அவளுக்குச் செலவு செஞ்சிரிக்க மாட்டன்.' என்று தாளாத்துயருடன் நடந்து கொண்டிருந்தான் றசீத்.

'ஐயோ பாவம், கொல்லையாவோ ......?'

(யாவும் கற்பனை)

# "சமஷ்டி அரசின் பிரதேச கவர்னர்' டாக்டர் நாகநாதன்"

# தமிழ் மொழி விவாதத்தில் நடைபெற்ற சம்பவங்கள்

தமிழ் மொழி (விசேட சரத்துக்கள்) மசோதா பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டபொழுது பல சுவையான சம்பவங்கள் நடைபெற்றன. எதிர்க் கட்சியினரின் விசமத்தனமான வாதங்களுக்கெல்லாம் ஆளும் கட்சிப் பிரதிநிதிகள் சுடச்சுட உடனுக்குடன் பதில் கொடுத்தார்கள். சில சந்தர்ப்பங்களில் இரு பகுதிப் பிரதிநிதிகளும் ஒரேயடியாகக் கூச்சல் போட்டு தங்கள் தங்கள் கட்சியைப் பலப்படுத்தியும் கொண்டனர். வேறு சில சந்தர்ப்பங்களில் இரு பகுதியையும் சேர்ந்த சிலர்—வெளியில் கீரியும் பாம்பும் போன்று நடந்து கொண்டாலும் உள்ளுக்குள்—இரகசியம் பேசினார்கள். ஒரு சந்தர்ப்பத்தில் டாக்டர் நாகநாதன் சமஷ்டி அரசின் மாகாண கவர்னர் என்றும் அழைக்கப்பட்டார். டாக்டர் என். எம். பெரேராவின் கூற்றுக்கு தமிழரசுத் தந்தை கொடுத்த விளக்கத்தைப் புரிந்துகொள்ள சபையின் இரு பகுதியினரும் பட்டபாடு பெரிய திண்டாட்டமாகி விட்டது. இத்தகைய சில சம்பவங்களை நமது சபை நிருபர் இங்கு சுருக்கமாகத் தொகுத்துள்ளார்.

1. தமது வகுப்புவெறிப் பேச்சுக்கு ஆதாரமாக,காலஞ்சென்ற திரு. பண்டாரநாயக்காவிற்கு, தமிழரசுத் தந்தை செல்வாவால் சமஷ்டியாட்சிப் பற்றி எழுத்தில் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகளின் நகல் எனக் கூறப்பட்ட ஒரு பத்திரத்தை வாசிக்கிறார் டாக்டர் என் எம் பெரேரா. ஆட்சி அமைப்பு பற்றிய ஒவ்வொரு அம்சத்தையும் வாசித்துக் காட்டிய அவர், 'அரசியலமைப்புத் தலைவர்' என்ற பதவிபற்றி பத்திரத்தில் குறிப்பிடப்பட்டமையையும் வாசிக்கிறார்.

டாக்டர் என். எம்: தமக்கென ஓர் 'கவர்னர்-ஜெனரலுக்கும் இடம் ஒதுக்கீடு செய்துள்ளனர்.

எதிர்க்கட்சியினர் குரல்கள்: கவர்னர் ஜெனரல் நாகநாதன்! நாகநாதன் அவாகள்!

டாக்டர் நாகநாதனின் முதுகில் தட்டிக்கொடுக்கிறார் அருகிலிருந்த திரு இராசமாணிக்கம் கவர்னரின் பாணியில், தமது 'கோட்டு' 'கொலரையும்' 'டை'யையும் சரிசெய்து கொண்டே 'போஸ்' கொடுக்கிறார் நாகநாதன். சபையில் ஒரே அரவாரச் சிரிப்பு எதிரொலிக்கிறது. சபை முடிந்து வெளியே வரும்போதும் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனாவின் குரல் உட்பட பல குரல்கள் டாக்டர் நாகநாதனை நோக்கி 'கவர்னர் கவர்னர்' என அழைக்கின்றன.

2. கேள்வி நேரம். திரு. பீட்டர் கெனமன் எழுகிறார். அவர் முகம் வாடி வதங்கித் தொங்குகிறது.

திரு. கெனமன்: (சபாநாயகரிடம்) ஐயா, பொலீசாரால் சுடப்பட்டுக்கொல்லப்பட்ட பௌத்த பிக்குவின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படுமா என்றும், இலங்கையாயின் பௌத்த கிரியைகளுக்கேற்ப அது நல்லடக்கம் செய்யப்படுமா வெனவும் கௌரவப் பிரதமமந்திரியவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

பிரதமர்: கௌரவ அங்கத்தவர் சோகமே உருவெடுத்தாற் போன்றிருப்பதைக் காண என் மனம் உருகுகிறது. நண்பருக்கு ஒன்றை மட்டும் நான் கூற முடியும், பௌத்த தர்மங்களைப்பற்றியும் கிரியைகளைப்பற்றியும் நண்பரைக் காட்டிலும் நான் நன்கறிவேன்.

அரசாங்கக் கட்சியினர்: (கெனமன் மீண்டும் பேச முற்பட ஏக தொனியில்), உட்காரும், உட்காரும்.



'நீ பொய்யன்'
என்ற குற்றச் சாட்டுக்கு
ஆளாகாத ஒரே தலைவன்

ஒரு தொனி: அவுஸ்திரேலியாவுக்குப் போம்.

★ இடவசதியின்மைகாரணமாக அரசாங்கக்கட்சி உறுப்பினர்கள் எதிர்க்கட்சிப் பின் ஆசனங்களிலும் இடமொதுக்கப்பட்டுள்ளனர். திரு. கெனமன் தமக்கு முன்னும் பின்னுமிருந்து வந்த தாக்குதல்களைச் சமாளிக்கமுடியாது உட்கார்ந்த போது அவர் முகத்தில் ஈயாடவில்லை.

3. கேள்வி நேரத்தின் போது திரு. கெனமன் எழுந்து மிகவும் பாரதூரமானபிரச்சினையொன்றை எழுப்பும் போக்கில் சபாநாயகரை நோக்கிப் பேசுகிறார். சபையின் அனுதாபத்தைத் திரட்டும் வகையிலும் ஏதோ திடுக்கிடும் சம்பவத்தைக் கூறுவார்போலும் அவர் குரல் லாவகமாகச் சுழல்கிறது.

திரு. கெனமன்: ஐயா, கடந்த இரவு, தணிக்கை அதிகாரியுடன் பல பொலிஸாரும் வந்து கம்யூனிஸ்ட் கட்சி அச்சகத்தை மூடிவிட்டனர்.

அரசாங்கக்கட்சி: (ஏக குரலில்) மிகவும் நல்லது. மிகவும் நல்லது. அதுதான் சரி.

4. டாக்டர் பெரேரா தமிழரசுத் தந்தை காலஞ்சென்ற திரு. பண்டாரநாயக்காவுக்கு அனுப்பியதாகக் கூறப்படும் பத்திரத்தை வாசித்துத் தமிழரசுக் கட்சியினர் நாட்டைப் பிரிக்கப் போகின்றனர் என்ற தமது கருத்தை நிறுவ முற்படுகிறார். திரு. பொன்னம்பலம் எழுந்து குறிப்பிட்ட பத்திரம் பண்டா—செல்வா ஒப்பந்தத்திற்கு முந்தியதா பிந்தியதா என்பதை டாக்டர் பெரேராவிடம் கேட்டு விட்டு அமர்கிறார். சபையில் ஒரே சத்தம்: முறையே அரசாங்க எதிர்க்கட்சி முன்வரிசை ஆசனங்களில் எதிரும் புதிருமாக ஒருவரையொருவர் பார்த்தபடி அமர்ந்திருக்கும் திரு. பொன்னம்பலமும், நாம் சிங்களவர் தலைவர் திரு. ஆர். ஜி. சேனநாயக்காவும் உரையாடிக் கொள்கின்றனர்.

குறிப்பிடப்பட்ட தமிழரசுத் தந்தை திரு பண்டாரநாயக்காவிடம் கையளித்ததாகக் கூறப்படும் பத்திரத்தை டாக்டர் பெரேரா வாசித்துக் கொண்டிருக்கும் போது, அரசாங்கக்கட்சியினர் அது பொய்யான பத்திரம் எனக் கூறுகின்றனர்.



'கவர்னர்'
நாகநாதன்

டாக்டர் பெரேரா: திரு. செல்வநாயகம் அதை மறுக்கட்டும் நீங்கள் யார் மறுப்பதற்கு?

திரு. செல்வா மெதுவாக எழுகிறார். அரசாங்கக் கட்சியினர் செல்வா மறுப்பார்; தமக்கு டாக்டர் பெரேராவைப் பொய்யனாக்கி மடக்க ஒரு வாய்ப்புக் கிடைக்கும் என்ற எண்ணத்தில் உசாராகி காதைத் தீட்டிக்கொண்டு கேட்கத் தயாராயிருக்கின்றனர். எதிர்க்கட்சியினரும் அதேபோல செல்வா அதை ஏற்றுக்கொள்வார்; அரசாங்கக் கட்சியைத் தாம் மடக்கலாம் என எண்ணிக் காதைத் தீட்டிக்கொண்டு உசாராகின்றனர் (செல்வா ஏதாவது சொன்னால், அதை உண்மையென ஏற்றுக்கொள்வது சபையின் சம்பிரதாயமாகிவிட்டது. எதிர்க்கட்சியினரும் சரி அரசாங்கக்கட்சியினரும் சரி, அவர் அரசாங்கக்கட்சியிலிருக்கும்போதும் சரி எதிர்க்கட்சியிலிருந்தபோதும் சரி அவரது வாக்கை என்றுமே சந்தேகித்தது கிடையாது. 'நீ பொய்யன்' என்ற வார்த்தைப் பிரயோகம் அடிக்கடி பரிமாறப்படும் பாராளுமன்றத்தில் தந்தை செல்வா ஒருவர் மட்டும் மீது இந்தப் பிரயோகம் என்றும் நடந்ததில்லை.

குழப்ப நிலையிலிருந்த சபை முழுவதும் ஒரே அமைதியிலாழ்ந்து செல்வா என்ன சொல்லப் போகிறார் என்பதை அறியத் தயாராகி நிற்க, செல்வா அவர்கள் தமது மென்மையான தொனியில் ஏதோ கூறிவிட்டு அமர்கிறார். எவருக்கும் எதுவும் கேட்கவில்லை அவர் கூறியதை வியாக்கியானம் செய்வதில் சபையில் மீண்டும் குழப்பம்.

அரசாங்கக்கட்சி: 'பொய்' என்றார்; பத்திரம் பொய்யானது என்று தான் கூறினார்.

எதிர்க்கட்சி: அல்ல' அல்ல; உண்மையென்றார்.' உண்மையென்று ஏற்றுக் கொண்டார்.

சபையில் ஒரே கூச்சல்; டாக்டர் நாகநாதன் செல்வா உண்மையாக என்ன கூறினார் என்றறிய அவரிடம் ஓடுகிறார். சபை இலிகிதரும் செல்கிறார். விஷயம் விளக்கமாகிறது. செல்வா கூறியது இதுதான்: 'இதன்மூலப் பிரதியைக் காட்டினால், அது உண்மையாக எனது கையொப்பத்தை உடையதென்றால், நான் ஒப்புக் கொள்வேன்.'

## மூடி உதிர்வை நிறுத்த மூலிகள் உண்டு

## உங்கள் நோய்

க. வீரகத்தி,
கொழும்பு

கே: எனது இருகால்களிலும் கணிக்கட்டை வளர்ந்திருக்கின்றது. இது முதலையே குதிக்கால படம், விரல்கள் என்பனவற்றில் இருக்கின்றன. தோல் செருப்புப் போடவில்லை. நடக்கும் போது வேதனை தாங்கமுடியாது, பிளேட்டினால் மாதாமாதம் சீவிவருகின்றேன். என்ன வது டாக்டர்?

ப: இது அநேகமாக பழைய செருப்பிலுள்ள ஆணிகள் மேல் நோக்கி வருவதனால் உள்ளங்காலில் தாபிதமடையச் செய்து பெரும்பாலோருக்கு ஏற்படுகின்றது. அநேகமாகக் குதிக்கால், பெருவிரல் படம் முதலியவற்றில் ஏற்படும். இதற்கு சத்திர சிகிச்சையே சிறந்தது.

### பதிலளிப்பவர்:

### வைத்திய கலாநிதி நா. கந்தையா

உங்களுக்குப் பொறுமையிருக்குமாகில், 'அம்மான் பச்சரிசி' என ஒரு பூண்டு உள்ளது. அநேகமாக வேலிக்கரைகளிலும், வயற் கரைகளிலும், மேட்டு நிலங்களிலும் படர்ந்திருக்கும். அப்பூண்டை உடைத்தால் பால் வரும். அப்பாலை இந்த ஆணி இருக்கு மிடத்தில் மிகவும் அவதானமாகப் பூசவேண்டும் ஒரு நாளைக்கு மூன்றுதரம் ஐந்து நாள் செய்யவும். சிலருக்கு இந்த ஆணி விழுந்துவிடும். பின்பு வரவேவராது. தோலால் ஆனசெருப்புக்கு பதில் றபர் செருப்பு பாவிக்கவும்.

க. பாலா,
தாவடி

கே: நான் 23 வயது நிரம்பிய வாலிபன் எனது மூக்கின் கீழ்ப்புற இருபக்கலிலும் சறுட்பும் அரம் மாதிரியாகவும் இருக்கின்றது இது ஏற்பட்டு ஒரு வருடம். இதை நீக்க தயவு செய்து வழி கூறவும்.

ப: தோலில் ஏற்படும் சில மாற்றங்கள் காரணமாகவும், சில உயிருட்டிப் பொருட்கள் காரணமாகவும், சில உயிருட்டிப் பொருட்கள் குறைபாட்டிலும் ஏற்படுகின்றது சாஸ்திர ரீதியில் கிரகமாற்றத்தில் ஏற்படுவதாகவும் கூறுவர்;

குளிக்கும்போது சோப்புக்கு பதிலாக, கடலைமா, வெண் சந்தனம் அரைத்துப் பூசிக் குளிக்கவும் மச்ச மாமிசங்களை தவிர்க்கவும், கீரை வகைகளை உணவில் தாராளமாகச் சேர்த்தல் நன்று.

செல்வி கன்னிகா,
மட்டுநகர்

கே: எனது வயது 15. சில காலமாக தலைமயிர் உதிர்கின்றது. வைத்தியம் எதுவும் செய்யவில்லை. என்ன செய்யலாமெனத் தயவு செய்து கூறவும்.

ப: முதலில் உங்கள் தலையில் சொடு இருக்கா என அறிய வேண்டும். இதற்கு வெண் மிளகை பாலில் நன்கு வெண்ணை போல் அரைத்துத் தலைக்குத் தோய்த்துக் குளிக்கவும். பின்பு கீழ்க் கண்ட தைலத்தை பக்குவம் செய்து பூசிவர முடி அடர்ந்து, கருங் குழலாக வருவதை அவதானிக்கலாம். கருஊமத்தை இலை இடித்துப் பிழிந்த சாறு நான்கு பாகம், நல்லெண்ணை ஒரு பாகம், முற்றிய தேங்காய்ப்பால் ஒரு பாகம், இவற்றை விட்டுக் கலந்த, எருமைப் பாலில், கருஊமத்தை விதை, அதிமதுரம் சம எடை எடுத்து அரைத்து, மேற்படி எண்ணையில் கலந்து அடுப்பேற்றி எரிக்கவும். கல்கம், மணல் பாகமாக வரும்போது இறக்கி, ஆற வைத்து வடிகட்டி வைத்து தினசரி பூசி வரவும். அதியற்புதமான குணம் கிடைக்கும்.

பெ. சின்னத்தம்பி,
புங்குடுதீவு-3

கே: எனது வயது 18. எனது மயிர் சுருளடைய ஏதாவதொரு மருந்து கூறுங்கள்.

ப: நண்பரே! மருந்து மூலம் உமது மயிர் சுருளடைவது சாத்தியமல்ல. கொழும்பு போன்ற பெரிய நகரங்களிலுள்ள சிகையலங்கார நிலையத்துக்குச் சென்று பணத்தை வாரி இறைத்து உமது கனவை நினை வாக்கவும்.

**உங்கள் நோய்?**
'சுதந்திரன்'
த. பெ. 1183,
கொழும்பு.

# விரக்தி நிலையே தமிழ்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மசோதா மீது திரு அனில் முனசிங்கா நிகழ்த்திய உரையிலிருந்து சில பகுதிகளைப் படித்துக் காட்டினார்] இவர்கள் தான் நகர மண்டப முன்றலில் மட்டுமல்லாது, விகாரமாதேவி பூங்காவில் மட்டுமல்லாது, கடந்த சனிக்கிழமை காலிமுகத் தரையிலும் பொதுமக்களை எலிவிட்டவர்கள். 'சிங்கள மொழி அழிக்கப்படுகிறது, இறுதிவரை போராடுங்கள் மொழியைக் காப்பாற்று' என்று அவர்கள் கூறினார்கள் என்று வெளியில் நின்ற மக்கள். அன்றைய அசம்பாவிதத்தில் காயமடைந்தவர்களினதும், உயிர் துறந்தவர்களினதும் உறவினர்கள் இவர்களினதே—இந்த மனிதாபிமானமற்ற சொல்லுக்கு—யார் காரணம் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

திரு. பி ஜி ஆரியதாச: 'அவர்களுக்கு அது தெரியும்'

திரு இரியகொல்ல '(கல்வி அமைச்சர்)' இது நடப்பதற்கு முன்னரே அவர்களுக்குத் தெரியும்'

திரு. வி, என் நவரத்தினம்: 'லங்கா சமசமாஜ கம்யூனிஸ்டுக் கட்சி ஆகிய இரு கட்சிகளையும் சேர்ந்த உறுப்பினர்களின்து உரைகளிலிருந்து நான் மேலும் குறிப்பிடுவதாயின் மூன்றாவது மாடியிலுள்ள முழு நூல் நிலையத்தையும் இங்கு கொண்டுவர வேண்டியிருக்கும். ஒரு புத்தகத்தை மட்டுமே இங்கு கொண்டுவர வாத்தியே நேர்பட்டது, அதிலிருந்து சிலவற்றை குறிப்பிடுகிறேன், மொழிப்பிரச்சினையில் மார்க்சியக் கொள்கை என்ன என்பதை யிட்டு கொழும்பு தெற்குப் பிரதிநிதி கூறுவதைப் பார்ப்போம். [1956 யூலை 12-ம் திகதிய பாராளுமன்றப் பதிவேட்டிலிருந்து மேலும் சில பகுதிகளை எடுத்துக்காட்டினர்] இதை நீங்கள் தவறாக வழிநடாத்தும் மக்களுக்குப் புரியவைப்பீர்களா?

## நகரமண்டபத்தில் கேனமன்

'அக்குரச தொகுதி டாக்டரின் கட்சியைச் சேர்ந்தவர்கள் தமிழ் மொழிச் சட்டவிதி பற்றி என்ன கூறுகிறார்கள் என்று பார்ப்போம். "இச் சட்டவிதிகளைச் சமர்ப்பிப்பதன் மூலம் திரு. டட்லி சேனநாயக்கா பெரும்பான்மை மக்களையும் சிறுபான்மை மக்களையும் ஏமாற்றுகிறார், எனவே தான் நாம் இதை எதிர்க்கிறோம்" என்று கொழும்பு மத்தியின் மூன்றாவது பிரதிநிதி நகரமண்டபக் கூட்டத்தில் கூறினர் இந்த உறுப்பினரின் பேச்சுக்களைக் கடந்த பத்து ஆண்டுகளாகக் கேட்டுவருகிறேன். மேற் குறிப்பிட்ட சொற்பதங்களை இச்சபையிலும் வெளியிலும் இவர் குறிப்பிடுவது இது முதற்தடவையல்ல. 1956-ம் ஆண்டு அரசகரும மொழி மசோதா விவாதத்திலும்—அச்சந்தர்ப்பங்களிலும்—இவர் என்ன கூறினர் என்பதை ஆராய விரும்புகிறேன். அன்று நடைபெற்ற கூட்டங்களிலும் "நான் சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்க்கிறேன்.. ஏனென்றால் அது சிங்கள மக்களையும் தமிழ் மக்களையும் ஏமாற்றும் முயற்சி" என்ற இதே சொற்பதங்களைத்தான் கூறினர். 1956 யூன் 14-ம் திகதியன்று சிங்களம் மட்டும் மசோதா மீது நடைபெற்ற விவாதத்தில் இவர் என்ன கூறினர் என்பதைப் பாராளுமன்றப் பதிவேட்டிலிருந்து படித்துக் காட்ட விரும்புகிறேன். [திரு. பீட்டர் கெனமன் சிங்களம் மட்டும் மசோதா மீது நிகழ்த்திய உரையிலிருந்து சில பகுதிகளைப் படித்துக் காட்டினபின்பு மேலும் திரு. நவரத்தினம் கூறியதாவது:] இத்தகைய எடுத்துக்காட்டுக்களையே அன்றைய விவாதத்தின்போது முன்வைத்தார். இதுபோன்ற வசனங்களுக்கு, அவருக்கு இனச் சந்தர்ப்ப மறதி என்று நான் நினைக்கவில்லை.

'முதலமைச்சர் சிங்களவர்களையும், தமிழர்களையும் ஏமாற்றுகிறார் என்ற இவரின் வசனத்தையிட்டு நான் கவலை கொள்ளவில்லை. இச் சட்டவிதிகளை நடைமுறையில் ஒரு பிளவை ஏற்படுத்திவிடும் என்று கொழும்பு மத்திய மூன்றாவது பிரதிநிதி அடுத்து ஒரு வாதத்தை முன்வைத்துள்ளார்.

'மொழிப் பிரச்சினையில் கம்யூனிஸ்டுக் கட்சியின் அபிப்பிராயம் என்ன என்பதை ஆராய்வோம், கம்யூனிஸ்டுக் கட்சியின் மொழிக் கொள்கை ஒன்று மாறிய திசையாய். 1947 முதல் 1965 வரை தேர்தல் காலங்களில் யாழ்ப்பாணத்தில் அவர்களின் மொழிக்கொள்கைபற்றி கூறியுள்ளார்கள். கம்யூனிஸ்டுக் கட்சியின் அன்றைய நிலையும்-இன்றைய நிலையும் என்ன என்பதை ஆராய்வோம். மகாதேசாதிபதியின் அரியணை உரைக்கு நன்றி தெரிவிக்கும் விவாதத்தில் இக்கட்சியைச் சேர்ந்த மற்றொரு உறுப்பினர் ஒருவர் இச்சபையில் கூறியது என்ன என்பதைப் பார்ப்போம் 1956 மே 4-ம் திகதிய பாராளுமன்றப் பதிவேட்டிலிருந்து சில பகுதிகளை இங்கு குறிப்பிட விரும்புகிறேன் [திரு பீட்டர் கெனமனின் உரையிலிருந்து சில பகுதிகளைப் படித்துக்காட்டினர்]

'1956-ம் ஆண்டு அரசகரும மொழி விவாதத்தின் போது கம்யூனிஸ்டுக் கட்சி கடைப்பிடித்த வழியும் இதுவே. [மேலும் பாராளுமன்றப் பதிவேட்டிலிருந்து சில பகுதிகளை எடுத்துக் காட்டினர்] இத்தகைய பேச்சுக்களை இச்சபையில் மட்டுமல்லாது வெளியில் சிங்கள மக்களுக்கும் எடுத்துக்கூறினர்கள்.

## பாவர் அறிவிலிகள்

'அக்குரசை தொகுதிப் பிரதிநிதி அவர்கள் இச்சபைக்கு வெளியில் நிகழ்த்திய ஒரு பேச்சை 1956 ஏப்ரல் 3-ம் திகதி 'டெய்லி நியூஸ்' ஏடு பிரசுரித்திருந்தது. அப்பேச்சின் சில பகுதிகளையும் அரசகரும மொழி மசோதா மீதான விவாதத்தின்போது கொழும்பு மத்தி மூன்றாவது பிரதிநிதி எடுத்துக் குறிப்பிட்டிருக்கிறார். 1956 யூன் 14-ம் திகதிய பாராளுமன்றப் பதிவேட்டிலிருந்து அப்பகுதியை இங்கு படித்துக்காட்ட விரும்புகிறேன் ['சிங்களம் 15 மொழிகளைத் தேசிய மொழிகளாகவும். இந்த 5 மொழிகளைத் தேசிய மொழிகளாகவும் கொண்டிருந்தால் இலங்கை சிங்களம் தமிழ் இரண்டு மொழிகளைத் தேசிய மொழிகளாக ஏற்கக்கூடாதா?' என்றெல்லாம் அப்பேச்சின் பொருள்] இப்பொழுது என்ன நடந்துவிட்டது நாங்கள் ராசகிசம் அற்றவர்களாகிவிட்டோமா? அல்லது இந்த நாட்டில் சனநாயகம் அற்றுப்போய்விட்டதா? [மேலும் சில பகுதிகளைப் படித்துக்காட்டிவிட்டு] யார் அறிவிலிகள்? சட்டக் கல்விக் கிரமைக்கு எதிர் வரிசையினர் இங்கு ஏன் துக்கம் கொண்டிருக்கின்றனர் என்பதை இப்பொழுது அறியமுடிகிறது. அவர்களிடமிருந்த சகல மனித உணர்வுகளும் அன்று அற்றுப்போய்விட்டன.

'அவர்களே அறிவிலிகளாகி விட்டார்கள். நான் இவற்றை எதிர்ப்பகுதியில் உள்ள உறுப்பினர்களுக்காக் குறிப்பிடவில்லை, இவர்கள் தவறாக வழிநடாத்தப்படும் மக்களின் கவனத்திற்கே இதைக் குறிப்பிடுகிறேன்.

'நம்பமுதெனியாப் பிரதிநிதியவர்களை மதிக்கிறேன். அவரைப்பற்றி எதுவும் குறிப்பிட விரும்பவில்லை. அக்குரசா பிரதிநிதி அவர்களின் பேச்சே அதை முழுமைப்படுத்தும்.

'எனது பேச்சை முடிப்பதற்கு முன்னர், எதிர்க்கட்சியின் கூட்டுத் தலைவரான எட்டியாந்தோட்டை பிரதிநிதி ஒரு புதிய வாதத்தை அல்லது ஒரு பிரசாரத்தை இச்சபை முன்னர் வைத்துள்ளார். தமிழரசுக் கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் உள்ள உடன்படிக்கையின் காரணமாக இச்சட்டவிதிகள் தோன்றியதாகவும்-தமிழரசுக்கட்சிக்கு சில நோக்கங்கள் உண்டு என்றும் அந்த நோக்கங்களையடைய இது முதற்படி என்ற காரணத்தினாலேயே இச்சட்டவிதிகளை நாங்கள் எதிர்ப்பதாக அவர் கூறியுள்ளார் இச்சபையில் எட்டியாந்தோட்டைப் பிரதிநிதி செய்த பிரச்சாரம் இது. ஆனால், உலகமும், ஒவ்வொரு மக்களும் அறிவார்கள் எங்களுடன் உடன்படிக்கைகள் செய்துகொண்டவர்கள் யார் என்பதை.

## 'எம்மை காப்பாற்றுங்கள்

'இச்சபையை ஒரு புனித இடமாகக் கருதுகிறேன். இச்சபையில் உண்மையல்லாதவற்றைக் கூறமாட்டேன். எனது கட்சியைச் சேர்ந்த திருகோணமலை வட்டுக்கோட்டைப் பிரதிநிதியவர்கள் முன்னர் குறிப்பிட்ட 1964ம் ஆண்டு டிசம்பர் 3ம் திகதி வாக்களிப்புநேரத்திற்கு சிறிது முன்னர் நடைபெற்ற சம்பவம் ஒன்றை-'ஸ்டும் எனது நிலையிலிருந்து குறிப்பிட விரும்புகிறேன். இரண்டாவது மாடியில் உள்ள முதலமைச்சரின் அறைக்கு நான் அழைக்கப்பட்டேன். நான் அங்கு சென்றபொழுது அவர்கள் அந்த அறையிலிருந்தார்கள்.

திரு. இரியகொல்ல: 'முதலமைச்சர் அவர்களும் அங்கிருந்தாரா?'

திரு நவரத்தினம்: 'அந்த அறையில் அவர்கள் இல்லை.'

சபாநாயகர்: 'அமைதி! கோட்டே பிரதிநிதி அவர்களும் வந்துவிட்டார்கள். (குறுக்கீடுகள்) அவரை இங்கு பார்ப்பதில் எமக்கு எப்பொழுதும் மகிழ்ச்சி.'

திரு வி. என். நவரத்தினம்: 'கட்டுகஸ்தோட்டைப் பிரதிநிதி கைத்தொழில்துறைப் பிரதிநிதி உட்பட எனது கட்சியைச் சேர்ந்தவர்களும் முன்னைய கைத்தொழில் அமைச்சரான பதவாச்ப் பிரதிநிதி, முன்னைய போக்குவரத்து அமைச்சரான அகலவத்தைப் பிரதிநிதி, முன்னைய நலத்துறை அமைச்சர் திரு. பதியுதீன் மாமூத் ஆகியோர்கள் இருந்தனர் மேலும் முன்னைய தெகிவளை-கல்கிசைப் பிரதிநிதி டாக்டர் கொல்வின் ஆர். டி சில்வா, முன்னைய பொதுவேலைத்துறை அமைச்சரான களுத்துறைப் பிரதிநிதி ஆகியோரும் இருந்தனர். அவர்கள் எங்களிடம் பன்முறைகள், 'நீங்கள் அரசாங்கத்தைக் காப்பாற்றினால், எங்களுடன் சேர்ந்து வாக்களித்தால் தமிழரசுக் கட்சியின் எல்லாக் கோரிக்கைகளையும் நாம் கொடுப்போம்' என்று கூறினார்கள்.

'நான் முன்னைய முதலமைச்சரைக் குற்றஞ்சாட்டவில்லை. அவர் அங்கு இருக்கவுமில்லை. 'நீங்கள் வாக்களிப்பில் பங்கு கொள்ளாமலோ அல்லது பிற் சதவாக்கு வெளியேறிலோ கூட உங்கள் கோரிக்கைகள் வழங்கப்படும்' என்றும் கூறினார்கள். (குறுக்கீடுகள்) எனது கட்சியினர் என்ன கூறினர்கள் என்பது எனக்குத் தெரியாது ஆனால் 'தமிழரசுக் கட்சியினராகிய நாங்கள் இத்தகைய முறைக்கு வர முடியாது' என்று நான் கூறினேன். இவர்கள்தான் இன்று எமைக் குற்றஞ் சாட்டுபவர்கள். குற்றஞ்சாட்டுவதுடன் மட்டுமல்லாது-நாடு பூராவிலும் சென்று இச் சட்ட விதிகளை எதிர்ப்பதற்கு காரணம், ஐ. தே. கட்சிக்கும் தமிழரசுக் கட்சிக்கும் இடையில் உடன்படிக்கை இருக்கிறது என்று கூறுகிறார்கள். சமசமாஜக் கட்சியின் செயலாளரைக் கேட்க விரும்புகிறேன்-எட்டியாந்தோட்டைப் பிரதிநிதி அவர்களைக் கேட்க விரும்புகிறேன், அவர் இங்கு இல்லை-கூட்டாட்சியினருக்கும் தமிழரசுக் கட்சிக்கும் இடையில் மொழிப் பிரச்சினையில் ஒரு உடன்பாடு இருக்கவில்லையா?

திரு. செல்லிகுணவர்த்தன: 'எனக்கு அதுபற்றித் தெரியாது.'

## தேர்தற்காலத்தில் கூறியது

திரு. வி என். நவரத்தினம்: 'எட்டியாந்தோட்டைப் பிரதிநிதி இங்கு இருக்கவேண்டுமென்று விரும்பினேன் எங்களுடன் ஐக்கிய தேசியக் கட்சி நட்பாக இருப்பதையிட்டு அவர் நேற்று பிழை கண்டுபிடித்தார் முன்னைய நிதி அமைச்சர் (டாக்டர் என். எம்) 1965 மார்ச் மாதத்தில் யாழ் நகர் சென்றிருந்த பொழுது கூறியது இதுதான். 1965 மார்ச் 12-ம் திகதிய தேசியத் தினசரியான 'ஈழநாட்'டிலிருந்து இவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

'கூட்டரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு முன்பும் பின்பும் தமிழரசுக் கட்சிப் பிரமுகரான திரு திருச்செல்வத்துடன் தமிழ்மொழிப் பிரச்சினை பற்றி பேச்சுவார்த்தை நடத்தினேன்'.

'நல்லதொரு நட்புறவான முறையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் விளைவாக தமிழ் மக்களுக்கு பயன் கொடுக்கக்கூடிய நடவடிக்கைகளை நாம் எடுத்துக்கொண்ட கட்டத்தில எமது கூட்டரசாங்கத்தை அவர்கள் வீழ்த்திவிட்டார்கள். (ஐயோ)'

'முதன் முதலாக பிரதமர் சிறிமவுடன் பேச்சுவார்த்தைகள் நடாத்தினேன'

'தமிழர்களுடைய முக்கிய பிரச்சினைகளை எல்லாம் அவருக்குத் தெட்டத்தெளிவாக எடுத்து விளக்கினேன்.

'பிரதமர் அவைகளை செல்வாய மனப்பூர்வமாக ஏற்று ஆவன செய்வதாக வாக்களித்தார்.'

'ஆனல் எம்மை நிலைத்து நின்று செயலாற்றுவதற்கும் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதற்கும் தமிழ் மக்களுக்காக உழைக்கிறோம் என்று சொல்லி கொண்டிருக்கும் தமிழரசுக் கட்சியினர் விட்டு வைத்தார்களா?

—ஈழநாடு,
1965-3-12.

'இந்த அறிக்கைகள் ஈழநாட்டில் மட்டுமல்லாது 'டைம்ஸ்' பத்திரிகையிலும் வெளியாகின. 'இவற்றை நான் பார்த்திருந்தால் மறுத்திருப்பேன்' என்று எட்டியாந்தோட்டைப் பிரதிநிதி கூற முடியாது. எதிர்பாராத விதமாக, 1965-3-14-ம் திகதி டைம்ஸ் பத்திரிகையில் இதுபற்றி குறிப்பிட்டதாவது [டைம்ஸ் பத்திரிகையில் வெளியான செய்தியையும் திரு நவரத்தினம் வாசித்துக் காட்டினர்] தமிழரசுக் கட்சிக்கும் முதலமைச்சருக்குமிடையில் தரகராக டாக்டர் பெரேரா விளங்கினர். இவர்கள் தான் இப்பொழுது ஐ. தே. கட்சிக்கும் தமிழரசுக் கட்சிக்குமிடையில் உள்ள தவறான உடன்படிக்கையின் விளைவாக எழுந்த இந்த சட்டவிதிகளை எதிர்ப்பதாகக் கூறித்திரிகிறார்கள்.

## சிங்கள கலாசாரத்தின் காவலர்களாம்

'இதெல்லாம் அப்படியல்ல. எட்டியாந்தோட்டைப் பிரதிநிதி மட்டுமல்ல அவர் கட்சியைச் சேர்ந்த பழமும் ஒரு முக்கிய உறுப்பினரான மூதலைவ உறுப்பினர் திரு. டொறிக் டி. சூசாவும் பன்வருமாறு யாழ்ப்பாணத்தில் ஒரு கூட்டத்தில் கூறினர்.

"தமிழ்மொழி அழிந்துவிட்டதென்றும் தமிழ் கலாச்சாரம் பாதிக்கப்பட்டுவிட்டதென்றும் இட்டுசாரிகள் தமிழர்களுக்குத் துரோகம் இழைத்துவிட்டார்கள் என்றும் சிலர் இல்லாததும் பொல்லாததும் சொல்லி வருகிறார்கள் இப்படியான பொய்களை கேட்டு தமிழ் மக்கள் ஏமாந்துவிடக்கூடாது"

'சமசமாஜக்கட்சி கூட்டரசாங்கத்தில் சேரும்போது 14 அம்ச அட்டவணையில் சேர்ந்தது. அதிலுள்ள திட்டங்கள் தமிழ்மக்களுக்கு சுபிட்ச வாழ்வை ஏற்படுத்தக் கூடியவையாகும்"

—ஈழநாடு

'எட்டியாந்தோட்டைப் பிரதிநிதியவர்கள் தான் இதைக் கூறவில்லை திரு. டொறிக் டி சூசாதான் இவற்றைக் கூறியது என்று சொல்லக்கூடும்.

'இந்த இரண்டு அம்சங்களும் தான் என்ன? அவையாவன:' ஒன்று பிரதேச சபைகளை அமைத்து தமிழர்கள் வாழும் இடங்களில் தமிழை நிர்வாக மொழியாக்குவது. அடுத்தது தமிழ் மக்களின் நியாயமான அளவு மொழிச் சட்டத்தை அமுல் நடாத்துவது"

'இப்பொழுது இச் சட்டவிதிகளை எதிர்ப்பதாகக் கூறுகிறார்கள் ஏனெனில் தமிழ் பேசும் மக்கள் எங்கள் மூலம் அரசாங்கத்தை ஆதரிப்பதால். [மேலும் திரு டொறிக் டி சூசாவின் பேச்சிலிருந்து சில பகுதிகள் எடுத்துக்காட்டப்பட்டன.]

'ஒரு வருட காலங்களுக்கு முன்னர் இவர்களால் மக்களுக்கு கூறப்பட்டவை இதுவாகும். வெளியில் உள்ள மக்கள் இன்று சிங்கள மொழியையும் சிங்களக் கலாச்சாரத்தையும் காப்பாற்றப் போவதாகத் தம்பட்டமடிக்கும் இவர்களின் தன்மையை உணர்ந்தால் தவறாக வழிநடத்தப்படமாட்டார்கள்.

'தமிழ் பேசும் மக்களுக்கு ஆபத்தான காலம்' நான் சொல்லவில்லை - என்னிலும் பார்க்க பலவழிகளில் பெரியமனிதரான உள்ள ஒருவர் இச்சபையில் - "அவர்கள் பெரும்பான்மைச் சமூகத்தினால் சாலக்கிறந்த காலம் ஒவ்வொரு திருப்பு முனையிலும் ஏமாற்றப்படுகிறார்கள்"என்று கூறியுள்ளார். அப்படிக் கூறியவர் எட்டியாந்தோட்டைப் பிரதிநிதியவர்களே அவரின் பேச்சைப்பா

(13-ம் பக்கம் பார்க்க)

# மற்றுமொரு யுத்தப் படம்

## கண்ணதாசன் தயாரிக்கிருர்

இந்தியாமீது சீனு நடாத்திய ஆக்கிரமிப்பை அடிப்படையாகக்கொண்டு 'இரத்தத் திலகம்' படத்தைத் தயாரித்து வெளியிட்ட கவிஞர் கண்ணதாசன் இப்பொழுது இந்திய-பாகிஸ்தான் தகராறைவைத்து 'தாயே உனக்காக' என்ற படத்தை எடுக்கத் தொடங்கியுள்ளார். இப்படத்தில் மக்கள் திலகம் எம். ஜி. ஆர்., கன்னடத்துப் பைங்கிளி சரோஜாதேவி தவிர்ந்த ஏனைய தென்னிந்திய முன்னணி நட்சத்திரங்கள் அனைவரும் தோன்றுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னுள் தி. மு. கழகப்பிரமுகரும் இப்போதைய காங்கிரஸ் பிரமுகருமான கவிஞர் கண்ணதாசன் 1962-ம் ஆண்டு இந்தியா மீது சீனு நடத்திய ஆக்கிரமிப்பை அடிப்படையாக் கொண்ட இரத்தத் திலகம் (இப்பொழுது இலங்கையில் திரையிடப்பட்டுள்ளது) என்ற பிரச்சாரபடத்தை சிவாஜி கணேசன்—சாவித்திரி ஆகியோரைவைத்து எடுத்திருந்தது சினிமா இரசிகர்கள் அறிந்ததே. இப்பொழுது இந்திய பாகிஸ்தான் தகராற்றை அடிப்படையாகக் கொண்டு 'தாயே உனக்காக' என்ற படத்தை எடுத்து வருகிறுர் கவிஞர்.

இப்படத்தில் சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், எஸ். எஸ். ஆர்., முத்துராமன், எஸ். வி. ரங்காராவ், சிறீராம், வி. கே. ராமசாமி, நாகேஷ், சிவகுமார், பத்மினி, சாவித்திரி, தேவிகா, விஜயகுமாரி, குமாரி சச்சு, மனோரமா, விஜயசிறீ ஆகியோர் நடிப்பார்கள்.

'இரத்தத் திலகத்தை' நாசனல் மூவீசாரின் ஆதரவுடன் எடுத்த கவிஞர் இப்படத்தை கமலாலய நிறுவனத்தாரின் ஆதரவுடன் எடுத்து வருகிறுர். கவிஞர் கண்ணதாசனும், ஏ. எல். நாராயணனும் இதற்கான வசனத்தை எழுதி வருகிறுர்கள். பி. புல்லையா டைரக்ட் செய்ய கே. வி. மகாதேவன் இசையமைத்துள்ளார். நவரசாயம் முத்தடவையாக இப்படத்தில் காமிராவை இயக்குகிறுர்.

ஜலந்தர், டில்லி, கோவை, சேலம் மேட்டூர் ஆகிய இடங்களில் இப்படத்திற்கான வெளிப்புறக் காட்சிகள் நிறைய படமாக்கப்படும். கடந்த வாரம் இப்படத்திற்

**நமது சென்னை நிருபர்**

கான காட்சி ஒன்று 'செட்டிற்'குள் படமாக்கப்பட்டது. சிவாஜி கணேசன்பாட பத்மினி தமிழ், தெலுங்கு, கன்னட மலையாள நங்கையாகத் தோன்றி நடனமாடும் காட்சியே செட்டில் படமாக்கப் பட்டதாம்.

'பழகு செந்தமிழ் அழகு மங்கை உன்டருவம் காட்ட வேண்டும் கண்ணே' என்ற அப்பாடலுக்கே பத்மினி அபிநயம் பிடித்தாராம். இப்பாடலை சிவாஜிக்காக சீர்காழி கோவிந்தராஜன் பாடினுர். ஜமுனு ராணி பாடிய மற்ரெரு பாடலுக்கு குமாரி சச்சு அபிநயம் பிடித்த காட்சி ஒன்றும் இத் திங்களில் படமாக்கப்பட்டது. இப்படம் மார்ச் மாதத்தில் சென்னையில் திரையிடப்படும். இப்படம் இலங்கையில் திரையிடப்படுமா என்பது கேள்விக்குரியதாகும்.



ஒட்டுமிரு உள்ளங்களை அன்னியன் குண்டுதான் வெட்டி விடுமா? நாட்டின் சுதந்திரத்தைக் காக்கும் பெரும் பணியில் ஈடுபட்டிருக்கும் சிவாஜியையும், சாவித்திரியையும், எண்டர் டெயின்மெண்ட்ஸ் திரைகளில் ஓடிக்கொண்டிருக்கும் இரத்தத் திலகத்தில் காணலாம்.

**நடக்கவிருப்பவை**

### 'கண்டி அரசன்'

கொழும்பு சிவசக்தி கலையரங்கில் மூன்ருவது தயாரிப்பான 'கண்டி அரசன்' நாடகம் இத்திங்கள் 27-ம் நாளன்று யாழ் நகர மண்டபத்தில் அரங்கேற்றப்படவிருக்கிறது. அதிக செலவில் பிரமாண்டமான காட்சி அமைப்புக்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள இந் நாடகம் வரலாற்று நிகழ்ச்சிகளை ஒரு புதிய கோணத்தில் நோக்குகிறதாம்.

பல வெற்றி நாடகங்களைத் தயாரித்தளித்த திரு. ஜெகசோதி அவர்களே இந் நாடகத்திற்கான கதையை எழுதியிருப்பதுடன் நெறிப்படுத்தியும் வருகிறுர்.

— —

### எங்க வீட்டு மாப்பிள்ளை

'எங்க வீட்டுப் பிள்ளை'யை வெளியிட்ட விஜயா கம்பைன்சார் அண்மையில் 'எங்கவீட்டுப் பெண்' என்ற



மற்ரெரு படத்தை தமிழ் நாட்டுத் திரைகளில் வெளியிட்டிருப்பது வாசகர்கள் அறிந்ததே. இப்பொழுது 'எங்க வீட்டு மாப்பிள்ளை' என்ரெரு படத்தை எடுக்க முயற்சி எடுத்து வருகிறுர்களாம். இப்படத்தில் எம். ஜி. ஆர். சரோஜாதேவி இணைந்து நடிப்பார்கள் என்று தெரிகிறது.

### விரக்தி....

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

ராஜுமன்றப் பதிவேட்டிலிருந்து வாசிக்கிறேன்.

"இந்நாட்டின் வரலாற்றைத் திருப்பிப்பார்த்தால் ஒவ்வொரு திருப்புமுனையிலும் சிறுபான்மையினர் ஏமாற்றப்பட்டிருக்கிருர்கள் என்ற உண்மையை அறிய முடியும்"— 1956 யூன் - 14

'பாணந்துறைப்பிரதிநிதியவர்களே! இந்த ஏமாற்றங்கள் அனைத்திலும் பெரிய ஏமாற்றம் எது என்பது உங்களுக்குத் தெரியுமா? நான் அதைக் குறிப்பிடத்தேவையில்லை.

**நன்றி**

'தமிழ் பேசும் பொது மக்கள் எங்களூடாக இன்றைய அரசாங்கத்திலும் திரு. டட்லி சேனநாயகாவிலும் நூறு வீதம் நம்பிக்கை வைத்திருக்கிருர்கள் என்பதையும், திரு. டட்லி சேனநாயக்கா தமிழ் மக்களை ஏமாற்றவில்லையென்பதையும் அறிந்ததும் இவர்கள் கவலைப்படுகிருர்கள். அவர்கள் கவலைப்படுவதுடன் மட்டுமல்ல, விரக்தியடைந்தும் உள்ளார்கள்.

'எனது பேச்சை முடிப்பதற்கு முன்னர் மற்றுமொரு விடயத்தையும் குறிப்பிட விரும்புகிறேன். இச்சட்ட விதிகளில் உள்ளடக்கியிருப்பதைவிட முதலமைச்சர் இதை இங்கு கொண்டு வந்தமையையிட்டு சிறுபான்மையினரான தமிழ் பேசும் மக்கள் திருப்தியடைந்துள்ளார்கள். தேசிய அரசாங்க உறுப்பினர்கள் அனைவரும் இச்சபைக்கு உள்ளும் புறமும் காட்டிய விசுவாசமான ஆதரவையிட்டு தேசிய அரசாங்கத்தால் கட்டியெழுப்பப்பட்ட தேசிய ஒற்றுமை நீடித்து நிலைக்கும் என்று நம்புகிறேன். சிறுபான்மையினர் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்ப்பதற்கு பிரதமர் எடுக்கும் எத்தகைய நடவடிக்கைக்கும், எமது முயற்சி அவருக்கு கஷ்டத்தைக் கொடுக்காத முறையில் உண்டு.'

### மூவர்ணக்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

மொழிச் சட்டத்திலோ ஒரு எழுத்துத்தானும் மாற்றம் செய்யப்படாத நிலையில் தமிழருக்கு மொழியுரிமை கிடைக்க முடியுமா? முடியுமயின் தனிச்சிங்கள சட்டத்தை ஆதரிப்பதாக எமது கொள்கையை வெளிப்படுத்துவதில் தவறென்ன?

ப: தனிச்சிங்கள சட்டம் தமிழ் மொழி விசேட சரத்துச் சட்டத்திஞல் திருத்தப்பட்டிருக்கிறது. ஆகையினுல் இந்த இரண்டு சட்டத்தையும் ஏற்றுக்கொள்ளும் பொழுது நாம் தனிச்சிங்களச் சட்டத்தை ஏற்றுக்கொண்டதாய் எவ்வாறு கூறுவது.

பொ கணேசன்,
கல்முனை-3.

கே: தந்தையே' மூவர்ணக் கொடி பிறந்த வரலாற்றின் விபரத் தன்னை விளக்குவீர்களா?

ப: 3 வர்ணமும் 3 குறிநிசயங்களைக் காட்டும், முதல் வர்ணம் மஞ்சல் தூய்மையையும், தியாகத்தையும் காட்டும். அடுத்து சிவப்பு வர்ணம் தமிழ் நாட்டில் வாழும் எல்லோரும் ஒரே இனத்தைக் சேர்ந்தவர்கள், சகோதர உரிமை உள்ளவர்கள். அதை விட எமது இயக்கத்திஞல் இரத்தம் சிந்திப்போராட வேண்டிவரும். அடுத்தது பச்சை வர்ணம் தியாகத்துடனும், சகோதர தத்துவத்துடனும் உழைத்தால் நிகழும் பயன். நாடெல்லாம், பச்சையாகி செழிப்பாய் இருக்கும்.

க. காசிபதி,
கொழும்பு.

கே: சாஸ்திரி சிறீமாவோ பண்டாரநாயக்கா உடன்படிக்கை இலங்கைவாழ் இந்தியர்களின் நல உரிமைகளைப் பறிப்பதாகும். இதைத் தமிழரசுக் கட்சியும் ஒப்புக்கொண்டுள்ளது. எனவே மேற்படி உடன்படிக்கையை இலங்கைத் தேசிய அரசாங்கம் அமுல் நடத்தும் பட்சத்தில் தமிழரசுக் கட்சி யாது செய்ய உத்தேசித்துள்ளது?

ப: இலங்கையில் இருந்து வலோத்காரமாக ஒருவரையும் நாடு கடத்தப் படாது. அப்படி தேசிய அரசாங்கம் ஒருவரையும் நாடு கடத்தாது என நாங்கள் நம்புகிறோம்.

# குழந்தைப் படக் குழுவில் அகிலன் நியமனம்

இந்திய குழந்தைப்பட நிறுவனத்தில் நிலவிய பெரும் ஊழலின் விளைவாக ஏற்பட்ட மாற்றத்தையடுத்து பிரபல தமிழ் எழுத்தாளர் திரு. அகிலன், கலைமகள் ஆசிரியர் திரு. கி. வா. ஜெகநாதன் ஆகியோர் தமிழ்க் கதைக் குழுவில் புதிதாக நியமனம் பெற்றுள்ளார்கள்.

அகில இந்திய ரீதியில மத்திய அரசாங்கத்தின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இயங்கும் குழந்தைப்பட நிறுவனத்தில் நிலவிய ஊழல் கண்டு பிடிக்கப்பட்டதையடுத்து பல மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இதுவரை குழந்தைப் படங்கள் இந்தியில் எடுக்கப்பட்டு ஏனைய பிரதேச மொழிகளில் 'டப்' செய்து வெளியிடப்பட்டு வந்தன. இனிமேல் அந்தந்தப் பிரதேசங்களிலேயே பிரதேசத்திற்குரிய மொழிகளில் படங்கள் தயாரித்து வெளியிடப்படும். இந்தப் புதிய ஏற்பாட்டுக்கு தி. மு. கழகமே முக்கிய காரணம் என்றும் தெரிய வருகிறது.

புதிய ஏற்பாட்டின் கீழ் நிறுவப்பட்டுள்ள தமிழ்க் கதைக் குழுவில் பிரபல தமிழ் எழுத்தாளர் திரு. அகிலன், திரு. கி. வா. ஜெகநாதன், திருமதி சௌந்தரம் கைலாசம் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

தெலுங்கு கதைக் குழுவில் பிரபல நடிகை பி. பானுமதி, படத்தயாரிப்பாளர் பி. என். ரெட்டி, மலையாள திரைப்பட பாடலாசிரியர் பாஸ்கரன் ஆகியோர் அங்கம் வகிக்கிருர்கள்.

### 'நான் ஆணையிட்டால்'

மக்கள் திலகம் எம். ஜி. ஆர். அவர்களின் செயலாளரான திரு. வீரப்பனின் இரண்டாவது தயாரிப்பான 'நான் ஆணையிட்டால்' அண்மையில் திரையிடப்படவிருக்கிறது. இப்படத்தில் எம். ஜி. ஆர். சரோஜாதேவி பிரதம பாகங்களில் நடிக்கிருர்கள். கே. ஆர். விஜயா, எம். என். நம்பியார், ஆர். எஸ். மனோகர், அசோகன், நாகேஷ், ஓ. ஏ. கே. தேவர் முதலியோரும் நடித்துள்ளார்கள்.

தயாரிப்பாளரான வீரப்பனே படத்திற்கான கதையையும் எழுதியுள்ளார். இது வீரப்பனின் இரண்டாவது படமாகும். முதற்படம் 'தெய்வத்தாய்'



# சிறை

எஸ்.பொன்னுத்துரை

நடுச்சாமக் கனவொன்று அவரை விழிப்படையச் செய்துவிட்டது. இப்படி 'நரகல்' கனவுகளால் விழிப்படைந்து பல்லாண்டுகளாகின்றன...குறுந்தசைக்குவடுகளையே கொங்கைகளாகப் பெற்ற வெள்ளைத்தோல் அழகிகள், தசைக் குருத்துக்களை அப்பி, அடி பெருத்த வாழைத் தண்டுகளை தலைகீழாக நிறுத்தி வைத்த லாவண்யம் சிந்தி, மதாளிப்பிலே துள்ளும் தொடை அம்மண விருந்து படைத்து... புலால் வேட்கையில் பெண்மையின் இரகசியங்களைத் தையுந் துகிலுரிந்து பார்த்துவிடவேண்டும் எனத் துடிக்கும் கண்களுக்கு இவ்விருந்தும் போதாது என்ற கனிவிலோ, அல்லது தங்களுடைய உடல்களை அப்பியிருக்கும் தசைக் கோளங்களே அழகின் இலட்சணம் என்று நிரூபித்துவிடல் வேண்டுமென்ற ஏமாப்பிலோ கச்சுகளையும், கச்சைகளையும் உரியும் 'திருக் கைங்கரி'யத்திற்குஒயிலாட்டமிட....அவர்களை உற்று நோக்க அவர்களுடைய மறைவில மாத்துக் குலையாத குமரியாக அன்னலட்சுமி ஒரு தடவை காட்சி தந்த கோலந் தெரிகிறது. கனவுக்கும் நினைவுக்குமிடைப்பட்ட திரிசங்கு நிலையில் அவருடைய ஆண்மை விழித்துக் கொள்ளுகின்றது. நல்ல வேளையாக, ஆண்மை சிதறப்படுவதற்கு முன்னர் சேதனம் பெற்றுவிட்டார். நினைவுத் தேள்கள் கொட்ட ஆரம்பித்துவிட்டன.

'வீட்டை போயும் மூண்டு மாசமாகுது. ஓமோம், கடைக்குட்டிக்கும் எட்டு மாசமாகுது...எட்டு மாசமெண்டால் எட்டி அடிவைப்பான். புள்ளையள என்னைப் பாக்க ஆசைப்படுகுதுகள் எண்டு அவள் கடுதாசியும் போட்டவள். பாவம், அவளும்பொம்புளை தானே? மத்த மத்தப் பெண்டுகளைப்போலை தானே அவளுக்கும் ஆசை இருக்கும்.'

மனைவியை வலு பட்சமாக நினைத்துப் பார்த்தார். மனைவியின் தேவையொன்று என அவர் கற்பித்துக்கொண்டாலும், தன்னுடைய 'தேவை பொன்று—உடன் தசைகளிலிருந்து பிரிக்க முடியாத தேவையொன்று—விழித்துக் கொண்டதையும் அவர் உணர்வார்.

"மனப் பாரத்தை—இல்லை, தசைப் பிடுங்கலின் பாரத்தை—குறைக்க எழுந்த வேட்கை தப்பானது என்ற உணர்வும் இதயத்தின் ஒரு மூலையிலே தன்னுடையமுகத்தைக் காட்டுகின்றது. மடிப் பாரத்தைக் குறைக்கும் எத்தனத்தில் வீடு செல்லத்தக்க பிரமேயங்களை நியாய பூர்வமாக அவருடைய மனம் அலசுகின்றது.

'நாளைக்குச் சனிக்கிழமை. அரைநாள்...ஞாயிறு. அ—, இதையும் மறந்துபோனன். திங்கட் கிழமையும் லீவு போயாவை நாடி. அப்ப காசை நாளைக்கு அனுப்பினாலும், அது போய்ச்சேரபுதன் வியாழனாய்ப் போயிடும். அதுவும் இந்தப் போஸ்டல் டிப்பாட்மெண்டை நம்பேலாது. போன வருஷம் அனுப்பின ஒரு மணியோடர் துலைஞ்சு போக, ஐஞ்சு மாதம் அலைஞ்சது எனக்கெல்லோ தெரியும். காசை நேரை கொண்டு போய்க் குடுக்கிறதுதான் புத்தி...ஓமோம், இப்ப ஓவர் டைம் புழையில்லை. இன்னும் ஐஞ்சுமணித்தியாலம் போட்டால் ஓவர் டைம் மக்ஸிமம் ஆயிடும். அதை வீட்டை போயிற்று வந்தும் போட்டுக் கொள்ளலாம். நாளைக்குமட்டும் லீவு எழுதிக் குடுத்துப் போட்டுப் போவம். பொச்சந்திர மூண்டு நாளைக்குவிட்டுச சாப்பாடுமாப் போச்சுது...'

'வீடு போகவேண்டும், என்று அவர் மனநிலத்தில் விழுந்த விதை பல ஏதுக்களின் உரந்தின்று வளர்ந்துவிட்டது. போயேயாவது என்று தீர்மானித்துவிட்டார். செந்தில்நாதன் தீர்மானிக்க ஒஞ்சரிப்பாரே ஒழிய, தீர்மானித்தாற் கடமை வீரராகிவிடுவார்.

'காசுக்குத்தான் டிக்கட் எடுத்துப் போகவேணும். போறதெண்டு நேற்றுத் தீர்மானித்திருந்தாலும் ஒரு 'செட்' 'வோறண்ட்' எடுத்திருக்கலாம். புதிய வொறண்ட் செட் அப்பிடியே தொடாமற் கிடக்கு; கிடந்தாத்தான் என்ன? பேந்து பாவிக்கலாம்தானே? மிச்சமிருந்த ரெண்டு வோறண்டையுமசில வழித்துப் போன கோசு பிள்ளனிலைதானே வீட்டை போனனான். கனநாளைய ஆசையை ஏன்தான் வைச்சிருப்பான் எண்டு...உப்பிடி எல்லா விஷபத்திலையும் காசுச் சிலவைப பூந்து பாக்கப்பிடாது. வேள்விக் கிடாயெண்டால் பங்கிறைச்சி வாங்கிறேல்லையே?...'

மனதிலே தீர்மானம் எழுந்த பின்பு அவருக்குத் தூக்கம்வரவில்லை கொஞ்ச நேரத்தைப் படுக்கையிற் புரண்டு, வீட்டைப் பற்றிய மனைவி, மக்கள், செல்லப் பாக்கிய ஆச்சி ஆகியோரைப் பற்றிய —இனிமையான நினைவுகளிற் கழித்தார். காலைக் கடன்களை முடித்துக் கொண்டு, பிரயாணத்திற்கான உடைகளை மாட்டினார். பணத்தையெடுத்து எண்ணிப் பார்த்தார்.

சீ, இழவு...நேற்றுப் பன்னிரண்டு ரூபா செரச்சமே சிலவு?...கணவின் தெரியாமலதான் சில வழிச்சிருக்கிறன...அதுக்கென்ன செய்யிற? ஒவ்வொரு நாளுமே உப்பிடிச சிலவழிக்கிறனான்?'

பிரயாணத்திற்கான பணத்தைஎடுத்துக்கொண்டு மிகுதியை ஒரு 'என்வலப்'பில பக்குவமாக மடித்து, காற்சட்டைப் பின் 'பொக்கற்'றிக்குள் வைத்துப் பொத்தானை மாட்டினார். கைபடக்கமான 'கிற் பாக்'கை எடுத்தார். அதற்குள் ஒரேயொரு மாற்றுடுப்பு, ஒரு சாறன், ஒரு துவாய ஆகியனவற்றை வைத்தார். கந்தோருக்கு லீவு விண்ணப்பத்தை எழுதி முடித்தார்.

'ஓமோம். நேரம் கனக்கக் கிடக்குதுதான். ஓ, இஞ்சையும் நிண்டுதான் என்னத்தை வெட்டிப் பிளக்கிற? நேரகாலத்தோடை ஸ்ரேஷனுக்குப்போனால், பிள்ளையளுக்கு ஏதாவது விக்கோதுக் கிசுகோதெண்டாலும் அங்கினை வாங்கியெடுக்கலாம். லீவுக் கடுதாசியைக் குடுக்க மூர்த்தியை எழுப்புவம்...'

கும்பகர்ணத் துயில் பயின்றுகொண்டிருக்கும் மூர்த்தியை எழுப்பத் தொடங்குகின்றார்.



(வளரும்)

## யானை விழுங்கிய....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

### சிங்களவர்களுக்கு கஷ்டம் ஏற்படும்

கிழக்கு மாகாணத்தின் நிலைமை வட மாகாணத்தின் நிலைமயிலும் பார்க்க மாறுபட்டதாகும். அம்பாறையிலும் கல்லோயாவிலும் சிங்கள பௌத்தர்கள் பெரும்பாலோர் வசிக்கும் இடங்கள் உண்டு. சில பிரதேசங்களில் சிங்களவர்களின் எண்ணிக்கை மிக அதிகமாகும் அந்தப் பிரதேசங்களுககும் இச்சட்டம் செல்லுபடியாகுமாதலின், சிங்கள மக்களும் பெரிதும் கஷ்டப்பட வேண்டியதேற்படும்.

தமிழ் மொழி சிங்கள மொழியைபோலன்று. அது மிகவும் வளர்ந்துள்ள ஒரு மொழி. சிங்களம் பேசுபவர்கள் இலங்கையில் வசிக்கும் ஒரு கோடிக்கும் குறைவான மக்களே. ஆனால் தமிழ் மொழியை ஐந்து கோடிக்கும் அதிகமான மக்கள் பேசுகின்றனர். தமிழ் ஒவ்வொரு நாளும் வளர்ந்து கொண்டு போகிறது. சிங்களம் பேசுபவர்கள் எண்ணிக்கை குறைவானதால் அதற்கு புராதன வரலாறு இருந்தாலும் அது அவ்வளவு விரைவாக வளர்ச்சி பெறவில்லை. நிர்வாகம் சம்பந்தமாக அவசியப்படும் மொழி பெயர்ப்புகள் பல இன்னும் சிங்களத்தில் செய்யப்படவில்லை. அவை தமிழுக்கும் மொழி பெயர்க்கப்பட வேண்டுமென்று இச்சட்ட விதிகள் கூறுகின்றன. இன்னும் 50 வருடங்களில் கூட சிங்கள மொழிபெயர்ப்பு பூர்த்தியடையாது எனினும் ஒரு சில வருடங்களில் தமிழில மொழி பெயர்ப்பு வேலை முடிந்துவிடும். சிங்களத்தில் ஒரு பகுதி மொழி பெயர்க்கப்படும் போது தமிழில் 11 பகுதிகளும மொழி பெயர்த்து முடிந்துவிடும். இந்த நிலைமையில் இச்சட்ட விதிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டால் இன்னும் சில மாதங்களில் அது அமுல் நடைபெற கூடும் அப்பொழுது வட,கிழக்கு மாகாணங்களில் முற்றுகத் தமிழில் அலுவல்களைத் நடத்துவதே தவிர, சிங்களத்தில் அலுவல நடத்துவதற்கான அவகாசமோ, நிலைமையோ பல ஆண்டுகளுக்கு ஏற்பட முடியாது. அதன்படி சிங்களம் பின்னால் தள்ளப்பட்டு, தமிழ் பரவி ஸ்திரமாகிவிடும். பின்னர் சிங்களம் யானைவிழுங்கிய விளாங்காயாகத்தான் இருக்கும்.'

உங்கள் மனதிலுள்ள
கவலைகள் — காரணங்கள்
மற்றும்
ஆகவேண்டிய காரியங்களை
அறிந்துகொள்ள ஆசையா?

அப்படியானால்

உங்களது முழு விலாசம் எழுதி முத்திரை ஒட்டப் பெற்ற ஒரு கடித உறையை அனுப்பி எமது இலவசப் பிரசுரத்தை இன்றே தபாலில் பெறுங்கள்!

பி. எம். திசாநாயக்க,
—மகா மாந்திரீக கலாநிதி—
அருத எண்ணெய் தொழிலகம்
கம்பளை.
போன்: 454.

## அழுகுரல் கேட்கிறதா?

—ஏ. தார்சியூசியஸ்

மீனைப் பிடித்தெமக்கு உணவாகத் தந்தவர்
மீனுக்கே தாமுணவாய்ச் சென்றார் ஐயோ
இந்த துன்ப முடிவை எண்ணித் துடித்திடவோ
அவர்
துயர்தனைத் தாங்கிட இதயம் உண்டோ!

— ஃ — ஃ —

ஆழக்கடலில் அழகாகப் பவனி வந்து
கோர அலைகடலை அடக்கி யொடுக்கியவர்
சிறும் அலைகளால் அடக்கப் பட்டுயிர் நீத்த
திராத் துயர் கண்டோம் இன்று

— ஃ — ஃ —

பாழும் புயல் ஒன்று பயங்கரமாய்ப் படையெடுக்க
பதம் பார்க்க கிடைத்தோரிம் மீனவரா?—
கொடுமையிது
அவர் பிரிவால் துடிக்கும் அவர்இனபந்தமைதியுற
என்னசெய்தும் ஈடுசெய்யக் கூடுமோ சொல்வீர்

— ஃ — ஃ —

மயிலிட்டிக் கரையிலிருந் தாளியவனை வரையும்
கரையோரம் கால்நடையாய் இன்று போலப்
பார்ப்பீரேல்
அடிக்கும் அலையொலியை அடக்கும் அழுகுரலை
செவிமடுப்பீர் துன்பத்தின் எல்லையை நன்குணர்வீர்

— ஃ — ஃ —

கோரப் புயலாலே பதியை இழந்தவருள்
பாலப் பருவத்துத் தங்கையர்கள் எத்தனை பேர்
வாழ்க்கையின் இன்பத்தை நன்குசுவையாத அவர்
விதவையராய் த்துடிக்கிறார்-அழுகுரல் கேட்கிறதா




முழு நீள அறிவியல் விசித்திரக் கதை

# மண்ணிற்கு மேலே...

அரியாலையூர் த. இந்திரலிங்கம்

ஸ்டெலின் அறை மூலையிலே விழுந்து கிடந்த துப்பாக்கியை எடுத்து நோக்கினன். அது சாதாரணத் துப்பாக்கிகளைப் போலில்லாமல் வெகு சன்னமாகவும், பருமனாகவும் இருந்தது. அதை எப்படி இயக்குவது என்பது அவனுக்குத் தெரியவில்லை. ஸ்டெலின் துப்பாக்கி மூலம் குறிதவருமற் சுடுவதில் வல்லவன். எனினும் அவனுக்கு இந்தத் துப்பாக்கியைப் பற்றி எதுவும் தெரியவில்லை. மோல்டன் அதை வாங்கிப் பார்த்தார். அவருக்கும் அதை எங்ஙனம் இயக்குவது என்பது தெரியவில்லை. திருப்பித் திருப்பிப்பார்த்தார். வெண்கலப் பாத்திரக்காரனைப் போன்று சுண்டிப்பார்த்தார். எதுவும் புரியவில்லை. அத்துப்பாக்கியிலே சில இடங்களிலே வில்லைகள் (லென்ஸ்) கூடப் பதிக்கப்பட்டிருந்தன. ஒரு துப்பாக்கிக்கு இவையும் தேவையா என எண்ணினார், மோல்டன். பின்னர் வீட்டுச் சுவரிலே அமைக்கப்பட்டிருந்த பரணிலே அதை வைத்தார். அதன் குழாய்முனை, பறக்கும் தட்டு மனிதனைக் குறி பார்த்துக் கொண்டிருந்தது அங்ஙனம் அதை வைக்கக் காரணம் சில சமயம் துப்பாக்கி தானாகவே வெடிக்கும்படி செய்யப்பட்டிருந்தால், அதற்கு அவனே பலியாகட்டும் என்பதே. பின்னர், தான் இராணுவத்திலே இருந்த காலத்திலே கற்ற முறைகளைக் கையாண்டு பறக்கும் தட்டு பற்றிய உண்மைகளை அறிய முடிவு செய்தார். முதலில் "நீ எங்கிருந்து வருகிறாய்?" என்று ஆங்கில மொழியிலே வினவினார். அவன் அதற்கு உடனே பதிலளிக்கவில்லை. சிறிது நேரம் தனது பசு நீலக் கண்களால் அவரை உற்றுப்பார்த்தான். பின்பு ஏதோ ஒருமொழியிலே பதிலளித்தான். அது எவ்வமொழியோ ஆண்டவனுக்குத்தான் தெரியும். மோல்டனுக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. "என்ன இப்பொழுதுதான் எல்லோரும் வெளியே வாருங்கள் என்று ஆங்கிலத்திலே பேசினாய்? இப்பொழுது வேறு பாஷையிலே பேசுகிறாயே!" என்று கேட்டார்.

பழையபடியே மோல்டனைச் சிறிதுநேரம் தனது பசு நீலக்கண்களால் உற்றுப் பார்த்தான். பின்னர் ஏதோ ஒரு மொழியிலே முணுமுணுத்தான். அவனது சிவப்பு ரோஜா முகம் வெளிறி, வெள்ளை ரோஜா முகம் போலாகிவிட்டது. அவ்வளவு பயம் போலும்.

"இவனைப் பேச வைக்க எனக்கு வழிதெரியும்!" என்ற மோல்டன் பரணிலே வைக்கப்பட்டிருந்த பேனாக் கத்தியை எடுத்து அதன் முனையை வெகு கூராகத் தீட்டினார். பின்னர் அதனை எரிந்துகொண்டிருந்த விளக்கின் செஞ்சுடரிற் பிடித்துச் சூடாக்கினார். கத்தி முனை "தகதக" வென்று ஜொலித்தது. உடனே அதனை மயந்த்துப் பறக்கும் தட்டு மனிதனின் உதட்டிலே வைத்து அழுத்தினார். அறுந்த பல்லியின் வால்போலத் துடித்தான், அவன்; அப்பொழுதும் அவனது வாய் ஏதோ ஒரு புரியாத மொழியிற்றான் அலறியது. இந்தக் கோரத்தைக் காணவிரும்பாமல் காதரின் முகத்தைத் திருப்பிக்கொண்டாள். பறக்கும் தட்டு மனிதனின் அலறலைக் கேட்ட ஸ்டெலின், "இவனுக்கு உண்மையிலேயே ஆங்கிலம் தெரியாது போலும்! எங்கோ தெரிந்த சொற்களை அப்போது சொல்லியிருக்கிறான்... எவனுயினும் சோகம் நிகழும்போது தன் தாய் மொழியிலேதான் அலறுவான்! எனவே இவனைத் துன்புறுத்துவதிலே பயன் கிடையாது! இவனை உயிருடன் காப்பாற்றிப் பொலிசிடம் ஒப்படைத்தால் நமக்கு ஏதாவது சன்மானம் கிடைக்கலாம். அது, நம் வயலைப் புனர் நிர்மாணஞ் செய்ய உதவும்" என்றான.

வயல் எரிந்தது என்ற விஷயத்தைக் கேட்டதும் மோல்டனின் ஆத்திரம் பொங்கியது. பறக்கும் தட்டு மனிதனை இன்னும் இறுக்கி இரு கட்டுகள் இட்டார். அம்மனிதனின் அலறலினால் விழிப்படைந்த லோமைன், "இவர் யார் அப்பா? இவர் எப்படி இங்கே வந்தார்?" என்று கேட்டாள். அவளது கண்கள் ஆச்சரியத்தால் மலர்ந்தன.


"இவர்தான் பறக்கும் தட்டிலிருந்து வந்த கனவான்!" என்றார், மோல்டன். "அந்த அழகான ஏரோபிளேனிலிருந்து வந்தவர் இவரா? ரொம்ப அழகாக இருக்கிறாரே! எங்கேயப்பா அந்த ஏரோப்பிளேன்?" என்று மழலை மிழற்றினாள் லோமைன். பறக்கும் தட்டைப்பற்றி இவ்வளவு நேரமும் அலட்சியமாக இருந்தது இப்பொழுது தான் மோல்டனின் மூளைக்குப்பட்டது. "அது வா! அது அங்கே முற்றத்திலே, நிற்கிறதே, காணவில்லையா?" என்று அன்பொழுகக் கேட்டார், மோல்டன். இப்பொழுது அவரது உள்ளத்திலே அமைதி பிறந்திருந்தது. பறக்கும் தட்டு மனிதனைக் கட்டிவைத்திருப்பது எவ்வளவு துணிகரமான செயல்!

"நான் காணவில்லையே; அப்பா! வா அப்பா! அதைப் போய்ப் பார்த்துவிட்டு வருவோம்! வரமாட்டாயா, அப்பா!" என்று கெஞ்சினாள் லோமைன். மோல்டனுக்கும் அதைப் பார்க்க ஆவலாகத் தானிருந்தது. எனவே லோமைனை நோக்கி, "அதைப் பார்த்துவிட்டுப் பிறகு அதிலே பறந்து பார்க்க வேண்டும் என்று பிடிவாதம் பிடிக்கக்கூடாது! பிடிவாதம் பிடிப்பாயா?" என்று கேட்டார், மோல்டன். "மாட்டேன்! மாட்டேன்" என்பதுபோல இருமுறை அழகாகத் தலையாட்டினாள் லோமைன். மோல்டன் மகிழ்ச்சியுடன் அவளை அணைத்து, அழைத்துச் சென்றார். லோமைனை அன்புக் கண்களால் நோக்கினான், பறக்குந் தட்டு மனிதன், அந்தப்பசு நீலவிழிகளிலே இரக்கத்தின் சாயை தெரிந்தது.

ஸ்டெலின் அவனைத் தப்பிவிடாமற் பார்த்துக் கொண்டிருந்தான். மோல்டன் லோமைனைப் பறக்குந் தட்டினருகே அழைத்துச் சென்றார். லோமைன், பறக்கும் தட்டின் வழவழப்பான மேற்பாகத்தைத் தொட்டுத் தொட்டுப் பார்த்துப் பூரித்தாள். அவளது வாய் அடிக்கடி 'எவ்வளவு அழகான பிளேன்' என்ற வார்த்தைகளை உச்சரித்தது. மோல்டன், பறக்கும் தட்டின் ஜொலிப்பையும், வழவழப்பையும் கண்டு வியந்துபோனார். அவரது வாய், 'இது பூலோகத்திலே காணமுடியாத அற்புதப்படைப்பு...... தேவலோகத்தில் இருந்து வந்தது போலவல்லவா இருக்கிறது!....' என்று முணுமுணுத்தது. பறக்கும் தட்டின் வாசற் கதவு திறந்தபடியே இருந்தது. அதைக் கண்ட லோமைன், 'அப்பா! அப்பா! பறக்குந் தட்டினுள்ளே போய்ப்பார்ப்போமா!... பறக்க வேண்டாம்! மேலாகப் பார்த்து விட்டு வருவோம்' என்று தனது பிடிவாதப் பல்லவியை ஆரம்பித்தாள். மோல்டனிற்குப் பயமாக இருந்தது. உள்ளே யாராவது இருந்துவிட்டால் என்ன சதி? என்பதை அவரது மனம் எண்ணியது. மெதுவாக உள்ளே எட்டிப்பார்த்தார். உள்ளே ஒரு புறத்தில் அவரது டோர்ச் விளக்கு விழுந்து கிடந்தது...... அதற்கப்பால் ஒரே இருட்டாக இருந்தது. எவரும் இருப்பதுபோன்ற அரவம் இல்லை எனவே மோல்டன் துணிச்சலுடன், கையில் லோமைனைப்பிடித்த வண்ணம் உள்ளே நுழைந்து டோர்ச் விளக்கை எடுத்தார். மின்பொறி விளக்கின் விசையை அழுத்தியதும் உள்ளே வெள்ளொளி பரவிப் பாய்ந்தது. அந்த வெள்ளொளியின் பிரகாசத்திலே பறக்கும்தட்டின் ஒரு பக்கத்திலே ஒரு மனிதன் விழுந்துகிடந்தான். அதைக் கண்டதும் லோமைன் மயங்கி விழுந்தான். மோல்டன் வெளியே போய் விடுவோமென எண்ணியவாறு திரும்பிப் பார்த்தார். ஆனால்.........

பறக்கும் தட்டின் கதவு தானாகவே மூடப்பட்டு இருந்தது. மோல்டன் அதைத் திறக்க முயன்றார். முடியவில்லை. யாராவது பறக்கும் தட்டினுள் வந்ததும், தானாகவே மூடிவிடக் கூடியதாக அது அமைந்திருக்க வேண்டும். அதைத் திறக்கும் விசை இருக்குமிடத்தை— மோல்டனால் அறிய முடியவில்லை. நெஞ்சம் நடுங்கத் திரும்பி மனிதனை நோக்கினார் மனிதன் இன்னும் அப்படியே வீழ்ந்து கிடந்தான். வருவது வரட்டும் என்ற எண்ணத்துடன் அவனை அசைத்தார். அவன் அசையவில்லை. அவனது இருதயமிருக்கு மிடத்திலே, மார்பிலே கையை வைத்துப் பார்த்தார். இருதயம் மௌனம் சாதித்தது. மோல்டன் புரிந்து கொண்டார். ஆம்!......... அது ஒரு பிணம் மெதுவாக அதை அசைத்துப் பார்த்தார். ஜப்பானிய இராணுவ வீரனின் சின்னங்கள் அவனது உடையிலிருந்தன. அவனது பிணம் இங்கே எப்படி வந்தது?

வீட்டினுள் தந்தைக்காகக் காத்துக்கொண்டிருந்த ஸ்டெலின் வெளியே வந்தான், மோல்டனைக் காணவில்லை. பறக்கும் தட்டை நெருங்கிய அவன், 'தப்பா! அப்பா! இருக்கிறீர்களா?' என்று கத்தினன். மோல்டன் உள்ளேயிருந்து பதிலளித்தார். நான் நன்றாக இருக்கிறேன்...பறக்கும் தட்டின் கதவு தானாகவேபூட்டப்பட்டுவிட்டது. நாளைக் காலையிலே நகருக்குச் சென்று பொலிசாருக்கு விஷயத்தை அறிவி...அவர்கள் வந்து அந்த மனிதனைக் கைது செய்து அவன் மூலம் கதவைத் திறக்க வழி செய்வார்கள்...லோமைன் அமைதியாகத் தூங்குகிறாள்! நானும் அமைதியாக இருக்கிறேன்... நீ கவலைப்படாமற் போய்த் தூங்கு!' ஸ்டெலின் கவலையுடன் நகர்ந்தான். மோல்டன் முழு உண்மையையும், ஸ்டெலினிற்குக் கூறவில்லை. ஸ்டெலின் பயந்துவிடுவான் என்பதே அதற்குக் காரணம்.




## அமரரான சாஸ்திரியார்

மாஸ்டர் சிவலிங்கம்

சாஸ்திரியார் நல்ல சாஸ்திரியார்
சகலதும் அறிந்த சாஸ்திரியார்
காஸ்மீரப் பிரச்சனை தீர்ப்பதற் கென்று
'தாஷ்கண்ட்' சென்ற சாஸ்திரியார்.

குள்ள மான சாஸ்திரியார்
கள்ளம் இல்லாச் சாஸ்திரியார்
கண்ணியத்துடனே கடமை புரிந்த
காந்தியின் தாசன் சாஸ்திரியார்.

நேருவின் வாரிசு சாஸ்திரியார்
நேர்மையின் சிகரம் சாஸ்திரியார்
பாருளோரெல்லாம் பாராட்ட வாழ்ந்த
பாரத ரத்தினம் சாஸ்திரியார்.

அன்புரு வானவர் சாஸ்திரியார்
அறத்தின் நண்பன் சாஸ்திரியார்
அனைவரும் போற்ற அவனியில்வாழ்ந்து
அமர ரான சாஸ்திரியார்.

## கல்வியே கருந்தனம்

வளர்மதி—சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட சகலரும் உறுப்பினர்களாகச் சேரலாம் கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் உறுப்புரிமைப் பத்திரத்தைப் பூரணப் படுத்தி அனுப்பவேண்டும் உறுப்புரிமைப் பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும் வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று உறுப்புரிமைப் பத்திரங்களை "வளர்மதி"யின் உறுப்பினர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" மே/பா சுதந்திரன், தபாற் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12. என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் இப்படி அனுப்புவோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு உறுப்புரிமை இலக்கமும் கொடுக்கப்படும் அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்

### வளர்மதி
### சுதந்திரன் மாணவர் மன்றம்
உறுப்புரிமை விண்ணப்பப் பத்திரம்

இல. 1

பெயர் ________________

பாடசாலை ________________

முகவரி ________________

________________

________________ ________________

பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம் — கையொப்பம்

# முழக்கமிடும் 3வது வெற்றித்திரு வாரம்!

ஆயிரக்கணக்கானோரைப் பரவசப்படுத்தி, பண்படுத்தி, உற்சாகமூட்டி, உணர்ச்சி வசப்படுத்தி வரும் ஒப்பற்ற இலட்சியப் படைப்பு!
தந்தையரும், தாய்மாரும், தம்பியரும், தங்கையரும் தப்பாமல் பார்க்க வேண்டிய தரமான படம்!



நடிகர் திலகம்
**சிவாஜி கணேசன்**

நடிகையர் திலகம்
**சாவித்திரி**

நாகேஷ், மனோரமா, புஷ்பலதா, கண்ணப்பா
மற்றும் பலர் நடித்த

பாடல்கள்: **கண்ணதாசன்**

நேஷனல் மூவிஸ்
## இரத்தத் திலகம்
டைரக்ஷன் தாதா மிராசி ... பஞ்சு அருணாசலம்

டைரக்ஷன்: **தாதா மிராசி**

★ நடிகர் திலகம் 'ஒத்தெல்லோ'வாக நடிக்கும் ஒப்பற்ற காட்சியைக் கண்டு களியுங்கள்!

★ இரு திலகங்களும் நடிப்பில் ஈடில்லா வெற்றி ஈட்டியுள்ளனர்!

**சென்ட்ரல்** (மருதானை) **ஈரோஸ்** (பாமன்கடை) **ராணி** (யாழ்ப்பாணம்) **ராஜேஸ்வரா** (மட்டக்களப்பு) **ஜோதி** (திருமலை) **லிபேர்டி** (ஹட்டன்) **ஓடியன்** (கண்டி)

"தாழம்பூவே தங்க நிலாவே! தலை ஏன் குனிகிறது...."

---

# வெற்றிகரமான 4வது வாரம்!

**எல்பின்ஸ்டன்** (மருதானை) **ரொக்ஸி** (வெள்ளவத்தை) **அசோகா** (புத்தளம்)
**இம்பீரியல்** (இம்பீரியல்) **நெல்சன்** (திருகோணமலை) **வின்சர்** (யாழ்ப்பாணம்) **வேல்ஸ்** (கண்டி)
ஆகிய திரைகளில்!

எம். ஜி. ராமச்சந்திரன்—ஜெயலலிதா—நாகேஷ்
மனோகர்—நம்பியார்—விஜயலட்சுமி
மற்றும் ஆயிரக்கணக்கான நடிகர்கள் தோன்றும்

பத்மினி பிக்சர்ஸ்
## ஆயிரத்தில் ஒருவன்



**செல்லமகால்** [கொட்டாஞ்சேனை]
6வது வாரமாக காண்பிக்கப்படுகிறது!
ஜெமினியின்
## வாழ்க்கைப் படகு

---

# நாளை முதல் ஆரம்பம்!

**கிங்ஸ்லி** (கொழும்பு) **நவா** (கொம்பனித்தெரு)
ஆகிய திரைகளில்

குதூகலமான 2வது வாரம்!
**விஜயா** (மட்டக்களப்பு) **மொடேர்ன்** (பதுளை) **மொடேர்ன்** (பண்டாரவளை) **விஜிதா** (அட்டன்)
**தீவொளி** (நூரளை) **கல்யாணி** (நாவலப்பிட்டி) **சந்தியா** (கம்பளை)
இன்று மட்டும் **வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)



- கற்புக்கரசி கண்ணகியின் வீரமிக்க வரலாறு
- கலைஞர் கருணாநிதி நேரில் தோன்றி கதையின் ஆரம்பத்தை விமர்சிக்கும் காட்சி

இலட்சிய நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன்—விஜயகுமாரி—கே. பி. சுந்தராம்பாள் நடித்த

மேகலா பிக்சர்ஸ்
## பூம்புகார்
டைரக்ஷன்: ப. நீலகண்டன்
வசனம்: மு. கருணாநிதி

---

நாளை ஆரம்பம்! ● ஏர்முரான் திரை விருந்து!

**அயின்** [மன்னார்] **ஸ்ரீகிருஷ்ணா** [திருமலை] **நியூசினிமா** [குருணாகல்] **மெஜஸ்டிக்** [கலபிட்டி]

ஏ. வி. எம். ராஜன்—மனோகர்—புஷ்பலதா
ஏ. கருணாநிதி—ராமதாஸ்
நடித்த

மொடர்ன் தியேட்டர்சாரின்
## சித்திராங்கி
இசை: வேதா
டைரக்ஷன்: ஆர். எஸ். மணி

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ஏ. இலக்கத்தில் 1966-ம் வருடம் சனவரி மாதம் 20-ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.